

# மட்டக்களப்பு மாவட்டச் சிறப்பு மலர்

19/09

# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969

ஜூலை - ஆகஸ்ட்-2002 25/=

# தொண்டன்

ஜூலை-ஆகஸ்ட் - 2002

மலர் 34 ❄ இதழ் 05

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723


விலை - 25/=
ஆண்டுச்சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா 100/=
(தபாற்செலவு உட்பட)



## உள்ளே

அன்புடன் உங்களோடு - 1
திருமட் மறைமாவட்ட ஆயரின் ...... - 2
மறைக்கோட்ட முதல்வர்....... - 3
மட்டக்களப்புத் தேசத்திலே... - 4
மட்டக்களப்பிலே கிறிஸ்தவம் - 5
கிராமத்து இரகசியம் - 7
நேர்காணல்........... - 8
இணையம்...... - 10
அன்பினால் மாந்தரை ஈர்த்தவர் - 11
மட்டக்களப்பு மாநில......... - 12
தண்ணீர் - 14
தமிழர் பண்பாடும் ...... - 17
இலக்கிய மஞ்சரி........ - 22
வியாகுல மாதா ஆலயமும்... - 23
மட்டக்களப்பின் புகழ்..... - 26
மட்டக்களப்பு பிரதேசத்தில்...... - 30
கல்வித்துறையில் தொடர்..... - 33
மட்டக்களப்பு திருமறைக் கலா... - 35
ஈழத்துப் புனைகதை வளர்ச்சி.... - 37
மட்டக்களப்பு மாவட்டத்தில்...... - 41
மட்டக்களப்பு மாவட்டத்தில் கத்.... - 43
பூர்வீக மட்டக்களப்பு....... - 46
அறிவை வளர்ப்போம் - 51
விவிலியம் கற்போம் - 52

பொதுசன நூலகம்
29 AUG 2002
யாழ்ப்பாணம்



# அன்புடன் உங்களோடு

36வது உலகத் தொடர்பு சாதன தினத்தை முன்னிட்டு மறைமாவட்ட ரீதியில் மட்டக்களப்பு மறைக்கோட்டத்தில் கொண்டாடப்படும் இவ் விழாவையொட்டி - வெளிவரும் இச் சிறப்பிதழ் வழியாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்னையாம் திருச்சபையால் அறிமுகப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும், அகிலமெலாம் மறைமாவட்ட ரீதியில் கொண்டாடப்பட்டுவரும் - இவ்விழா எம் மறை மாவட்டத்தில் - ஒரு தனியிடத்தைப் பிடிக்கிறது. மறை மாவட்டத்திற்கான - இவ்விழாவை மறைக்கோட்டங்களுக்குப் பரவலாக்கி2000ம் ஆண்டில் திருகோணமலை மறைக்கோட்டத்திலும் 2001ம் ஆண்டில் கல்முனை மறைக்கோட்டத்திலும் - கொண்டாடி 2002ம் ஆண்டில் மட்டக்களப்பு மறைக்கோட்டத்திலும் கொண்டாடுகிறோம்.

ஒரு பெண்ணால் ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும் என்று சொன்னார்கள். அதே போன்று சமூகத் தொடர்பு சாதனங்களால் நல்ல சமுதாயத்தை, உருவாக்கவும் முடியும் - அதே வேளை உருக்குலைக்கவும் முடியும். சமூகத் தொடர்பு சாதனங்கள் நினைத்தால் உண்மைகளை உலகறியச் செய்யவும் முடியும் - அதேவேளை உண்மைகளை ஊமையாக்கி விடவும் முடியும். ஊடகவியலாளர் நாடுகளுக்கிடையில், இனங்களுக்கிடையில், சமயங்களுக்கிடையில் கலவரத்தைத் தூண்டலாம்-அதேவேளை தூண்டப்பட்ட காலவரத்தைத் தணிக்கலாம்.

ஊடகங்கள் (உதாரணமாக டிஸ்கவரி சனல், வாழ்க்கையை வளமாக்கும் தரமான தயாரிப்புக்கள் போன்றவை) சமுதாயத்தில் சீரிய பணியாற்றுகின்றன அதேவேளை - ஊடகங்கள் மனித மாண்பினைச் சீரழித்து வன்முறைகளையும், பாலியல் ஒழுக்கவீனங்களையும் முன்னிலைப் படுத்தி, சமுதாயத்தை சீரழிக்கவும் செய்யலாம்.

ஊடகத்திலே சிறப்புக்களுமுண்டு, சீரழிவுகளும் உண்டு. இதன் காரணமாக ஊடகங்களின் செயல்பாடுகள் முற்றுமுழுதாக சிறப்பானவையென்றோ-அல்லது சீரழிவானவையென்றோ - நாம் கொள்ள முடியாது. சீரழிவுகளைக் கைவிட்டு சிறப்பானவற்றை சிரமேற்று சமுதாயம் வாழப் பழகிக் கொண்டால் ஊடகங்கள் உயர்ந்த, உன்னத சாதனங்களாக மாறும்.

இந்த உன்னத ஊடகங்களை உரிய முறையில் செயல்படுத்தி இறையரசின் விழுமியங்களை அதாவது நற்செய்தியை நானிலமெங்கும் பரப்ப கிறிஸ்தவ ஊடகவியலாளர்கள் முன்வர வேண்டும். இறைவார்த்தைகளைக் கதைகளாக்கி, கவிதைகளாக்கி, நாடகங்களாக்கி, தொலைக்காட்சித் தொடர் நிகழ்ச்சிகளாக்கிக் கொடுக்க கூடிய ஊடகவியலாளர்கள் உருவாக வேண்டும். "உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள்" என்ற இயேசுவின் ஆசைகளை ஊடக யுகம் நிஜமாக்க முன்வர வேண்டும்.

**ஆசிரியர்.**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்





## இறைவாக்கு



நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும்கடைப்பிடிக் கும்படி கற்பியுங்கள்

மத் 28/20

# திரு/மட் மறைமாவட்ட ஆயரின் ஆசிச் செய்தி



இவ்வாண்டு உலகத் தொடர்பு தின விழாவை முன்னிட்டு 'தொண்டன்' மட்டக்களப்பு மாவட்டச் சிறப்பு மலராக மலர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கத்தோலிக்க திருச்சபை ஒவ்வோர் ஆண்டும் அனைத்துலக ரீதியில் கொண்டாடும் உலகத் தொடர்பு தினத்தை நமது மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையமும் ஆண்டுதோறும் மறைமாவட்ட அளவில் கொண்டாடிவருவது குறிப்பிடத்தக்கது. அதையொட்டி சிறப்பு மலர்களையும் அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.

இன்று அபரிமிதமாக வளர்ச்சி அடைந்துள்ள தொடர்புத்துறை, உலகம் முழுவதையும் ஒரு குடைக்குள் கொண்டுவந்துள்ளதோடு, எண்ணிப்பார்க்க முடியாத அதிசயங்களையும் விளைவித்துள்ளது. இன்று ஒவ்வொரு மனிதரும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு சாதனங்களின் ஆளுகைக்குட்பட்டே உள்ளனர். இந்நிலைமையில் அளப்பெரும் நன்மைகளுமுண்டு; அதேவேளை ஆபத்துக்களும் இல்லாமல் இல்லை. ஆயினும் இதனை ஒரு சவாலாக ஏற்று நாம் முகம் கொடுத்தே ஆகவேண்டும்.

மின்னியல் தொடர்புச் சாதனங்கள் ஆயிரக்கணக்கான தகவல்களை, செய்திகளை வாரியிறைத்து அறிவுப் பெருக்கத்துக்கும், கலாசார நாகரீக வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன. அதேவேளை கட்டுபாடற்ற நுகர்வுப் போக்கையும், பொழுதுபோக்கு என்ற பெயரில் போலியான சமூக மதிப்பீடுகளையும், பிற்போக்குவாதச் சிந்தனைகளையும் பிரசாரப்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டுகளுமுண்டு. மேலும் அவற்றைக் கைவசம் வைத்திருப்போரின் அல்லது அவற்றின் மீது அதிகாரம் செலுத்துவோரின் நலன்களுக்கும் கருத்தியல்களுக்கும் ஏற்பவே அவை செயற்படுபடுன்றன. ஆகவே தொடர்பு சாதனங்களின் பயன்பாடுகள் பற்றிய ஒரு விமர்சனப்பார்வையும் மீளாய்வும் தேவை. ஆண்டு தோறும் கத்தோலிக்க திருச்சபை கொண்டாடிவரும் சமூகத் தொடர்பு தினம் இத்தகைய ஒரு விழிப்புணர்வைத் தூண்டுவதோடு, அளவிட முடியாதபடி வியாபித்து நிற்கும் ஒலி ஒளித் தெறிப்புகளுக்கிடையே கிறிஸ்துவின் உருவம் தோன்ற வேண்டுமெனவும், அவரது குரல் கேட்கப்பட வேண்டுமெனவும் அவாவி நிற்கிறது. இவ்வாண்டுக்கான தொடர்பு தினச் செய்தியில் திருத்தந்தை குறிப்பிடுவதுபோல் கிறிஸ்துவின் முகம் தோன்றி, அவரது குரல் கேட்கப்பட்டால் மட்டுமே எமது மீட்பின், மகிழ்வின் செய்தியை உலகம் முழுவதும் அறிந்து கொள்ளும். ஆகவே தொடர்பு தின விழாவும் அதை முன்னிட்டு மலரும் தொண்டன் சிறப்பிதழும் மானுட மேம்பாட்டுக்கும், நற்செய்திப்பணிக்கும் புதிய வாயில்களைத் திறக்கட்டும் என வாழ்த்துகிறேன்; சிறப்புகள் சேர இறை ஆசீரை இறைஞ்சுகிறேன்.

**பேருட்திரு ஆயர் யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை**

# மறைக்கோட்ட முதல்வர் வாழ்த்துகிறார்



பரந்து விரிந்த உலகை இன்று ஊடகங்களும், தொடர்புசாதனங்களும், மிகவும் விரைவாக்கி இலகு வாழ்க்கைக்கு இடம் வகுத்துள்ள இக்காலத்தில் 36வது உலகத் தொடர்பு நாளை, எம் மறைமாவட்ட ரீதியில், மட்டக்களப்பு மறைக்கோட்டத்தின் மட்டுமாநகரில் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

எம் மீட்பர் இயேசு இவ்வுலகில் இறைமனித வாழ்வினை 33 வருடங்கள் வாழ்ந்தவர். அந்த அகவினை எட்டிப்பிடித்துவிட்ட எம் மறைமாநிலத் **'தொண்டன்'** சஞ்சிகை, உலகத் தொடர்பு தினத்தைச் சிறப்பிக்கும் சிறப்பு மலராக, மட்டுமாநகரின், கல்வி, கலாசார, பொருளாதார இன்னும் பல்வேறுபட்ட ஆக்கங்களைத் தாங்கி மட்டு மாநகரின் சிறப்பினை எடுத்தியம்பும் வகையில் வெளிவருவதையிட்டு வாழ்த்துகின்றேன்.

நற்செய்திப்பணியுடன் சமூகப்பணியும் புரியும் இத்தொண்டன், தொடர்பு சாதனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், எழுத்தாளர்களின் இளமைத் துடிப்புள்ள ஏக்கங்களை வெளிக்கொணரவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான். தடைகள் எத்தனை வடிவங்களில் வரினும், அத்தனையும் வளர்ச்சியின் படிக்கட்டுக்களே என்று தனக்கேயுரிய பாணியில், தன் தமிழ் இலக்கிய, சமயப்பணிகளைத் தளர்ந்திடாது ஆற்றிவரும் தொண்டனின் வெற்றி நடைக்கு அர்ப்பணிப்புடன் செயல்படும் எம்மறைமாநில சமூகத் தொடர்பு ஆணைக்குழு இயக்குனர், தொண்டன் ஆசிரியர், இணையாசிரியர், பணியாளர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த பாராட்டுக்களும், நல்வாழ்த்துக்களும்.

**அருட் பணி. இக்னேஸ் ஜோசப்**
மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வர்
துய மரியாள் இணைப்பேராலயம்
மட்டக்களப்பு.

# மட்டக்களப்புத் தேசத்திலே.......

வானெல்லாம் மேகம்
வயலெல்லாம் செந்நெல்
கானெல்லாம் தேறல்
கடலெல்லாம் செல்வம்
ஆனெல்லாம் அமுதம்
அசோகெல்லாம் குலைகள்
தீனெல்லாம் சுவைகள்
திருவெல்லாம் குவியல்!

கரையெல்லாம் தென்னை
காற்றெல்லாம் தென்றல்
நுரையெல்லாம் பூக்கள்
நுழையெல்லாம் நண்டு
திரையெல்லாம் மீன்கள்
திசையெல்லாம் தோணி
தரையெல்லாம் கானல்
தடமெல்லாம் கிளிஞ்சில்

குளமெல்லாம் கமலம்
குழியெல்லாம் வண்டு
களமெல்லாம் சூடு
கதிரெல்லாம் தங்கம்
வளமெல்லாம் கொள்ளை
வாழ்வெல்லாம் இன்பம்
அழகெல்லாம் தெய்வம்
அவையெல்லாம் கொடையே!

புல்லெல்லாம் மணிகள்
பூவெல்லாம் மதுரம்
நெல்லெல்லாம் முத்து
நெய்யெல்லாம் வாசம்
கல்லெல்லாம் வயிரம்
காடெல்லாம் கோட்டை
சொல்லெல்லாம் தமிழே
சுவையெல்லாம் கவியே

வாகரைவாணன்.

# மட்டக்களப்பிலே கிறிஸ்தவம்



கலாநிதி டொமினிக் சாமிநாதன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

மட்டக்களப்பைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவம் போர்த்துக்கேயரின் வருகையோடு நெருங்கிய ஒன்றாகவே உள்ளது. 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் கோட்டைகள் அமைத்து ஆட்சிபுரிந்து வந்ததை நாம் வரலாற்றில் காணலாம். 1549ம் ஆண்டிலே போத்துக்கேயர் மட்டக்களப்பிலேயும் திருகோணமலையிலேயும் இடம் பிடித்துக் கொண்டனர். புனித பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த சைமன் டி கொயிம்பிறா என்ற துறவி போர்த்துக்கல் மன்னனான மூன்றாம் ஜோண் என்பவருக்கு எழுதிய மடல் ஒன்றில் இலங்கையில் 'மடகளப்புவ' என்னும் இடத்தின் இளவரசனுக்குக் மறைக் கல்வி கற்பித்ததாகக் கூறியுள்ளார். அதன் பின் 1549ல் மட்டக்களப்பு வந்த மோனிஸ் பறட்டோ என்னும் பிரான்சிஸ்கன் துறவி அவருக்கு டொம் லூயி என்னும் பெயருடன் திருமுழுக்குக் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.[1] அத்துடன் பனிச்சங்கேணியை வசிப்பிடமாகக் கொண்டு 1477 முதல் 1552 வரை ஆட்சி புரிந்த ஒரு வன்னிச்சி இளவரசியும் அவருடைய வீட்டார் அனைவரும் இத்துறவிகளால் கிறிஸ்தவ மதத்திற்கு மனம் மாற்றப்பட்டுத் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டதாக வேறோர் குறிப்பும் கூறுகின்றது.[2]

இதுபோலவே திருமலையிலும் சில அரகுடும்பத்தைச் சேர்ந்த வன்னியர்கள் மனம் மாற்றப்பட்டுத் திருமுழுக்குப் பெற்றுள்ளார்கள். திருமலையில் 1549 முதல் 1552 வரை வன்னிய ஆட்சி நிலவியது. இக்காலக் கட்டத்தில் ஆட்சியுரிமைக்குத் தகுதி வாய்ந்த வன்னிய இளவரசனுக்கு வயது 08 நடைபெறும் போது இவ்விளவரசனின் பெயரால் அவரின் மாமன் முறையானவர் திருகோணமலையை ஆண்டு வந்தார். ஆனால் யாழ்ப்பாண மன்னனாகிய சங்கிலியன் இவ்விளவரசனைத் துரத்தி விட்டுத் திருமலைப் பகுதியையும் தனது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவர முயற்சி எடுத்த வேளை, இளவரசனின் இரத்த உறவினர் 40 பேரளவில் இளவரசனுடன் கடலைக் கடந்து தூத்துக்குடிக்குச் சென்று தஞ்ச மடைந்தனர். அங்கு வாழ்ந்த பரவ இனக் கிறிஸ்தவர்கள் இவர்களை நன்று வரவேற்று ஆதரித்தனர். அவ்வேளை அங்கு பணியாற்றிய அருட்தந்தை என்றிக் என்றிக்கெஸ் என்பவர் தமிழில் நன்கு பாண்டித்தியம் பெற்றவராய் இவர்களை மிகவும் கனிவுடன் பாரமரித்துப் பாதுகாத்ததைக் கண்ட வன்னியர்கள், தாங்களாகவே கிறிஸ்தவ மதத்தைத் தழுவித் திருமுழுக்குப் பெற்றனர். அந்த வன்னிய இளவரசனுக்கு டொன் அலோன்சோ (அல்போன்சோ) என்று பெயரிட்டுக் கோவாவில் உள்ள இயேசு சபைத் துறவிகளின் கல்லூரிக்கு அனுப்பினர். அங்கு அவர் 'திருமலையின் அரசர் டொம் அல்போன்சோ' என்று அழைக்கப்பட்டார். பிற்காலத்தில் தூத்துக் குடி வாழ்கிறிஸ்தவர்கள் ஆயிரம் பேரளவில் வன்னிய இளவரசனுடனும் அவரது பரிவாரங்களுடனும் திருமலை வந்து நாட்டைப் பிடித்து இளவரசனை அரசனாக முடிசூட்டினர்.[3] இப்பட்டாளத்தில் வந்த சில பரவ கிறிஸ்தவர்கள் திருமலையிலும் அதன் சுற்றுப் புறத் திலும் குடியேறி வாழ்ந்தனர். விஷேடமாகக் கொட்டியாரம் என்று அன்று அழைக்கப்பட்ட மூதூரில் அவர்கள் வாழத் தொடங்கினர். இதற்கான ஆதாரங்களை இன்றும்கூட மூதூரில் நாம் காணலாம். மூதூரில் வாழும் கிறிஸ்தவர்கள் பரவ இனத்தவர்களும் தூத்துக் குடியில் உள்ள கிறிஸ்தவர்களின் வாரிசுகாளாகவுமே தம்மைக் கருதுகின்றனர். அத்துடன் அவர்களுடைய பெயர்களும் கூட அவ்வாறே, கொறேறா, மஸ்கரின்னஸ், பெரேரா, பெர்ணாண்டோ, பீரிஸ், குரூஸ், என்று இருப்பதும் இதற்கு ஒரு சாட்சியமாகும். இவ்வாறு வன்னிய இனத்தில் இருந்து மனந்திரும்பித் திருமுழுக்குப் பெற்றவர்களும் தூத்துக்குடி வாழ் பரவ இனக்கிறிஸ்தவர்களுமே திருமலைப் பகுதியின் ஆரம்பகாலக் கிறிஸ்தவர்களாவர். இவர்கள் முத்திப் பேறுபெற்ற ஜேசப் வாஸ் அடிகளாரின் வருகைக்கு முன்னரே திரு மலையிலும் மூதூரில் வாழ்ந்தார்கள்.[4]

இவ்வாறு ஆரம்ப காலக் கிறிஸ்தவ சமுதாயம் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரு நகர்களையும் மையமாக வைத்தே உருவானது. ஆயினும் குருமாரின் பராமரிப்பு அதிகம் இல்லாது பலகாலம் இருந்தமையினால் கிறிஸ்தவம் நன்கு பரவமுடியாமற் போய் இருக்கலாம் என்று கூற முடிகின்றது.

1546ம் ஆண்டு டிசம்பர் 25ம் தேதியிடப்பட்டு சைமன் டி கொயிம்பிறா என்பவரால் போர்த்துக்கல் மன்னன் மூன்றாம் ஜோண் என்பவருக்கு எழுதப்பட்ட மடலில் மட்டக்களப்பு என்னும் இராச்சியத்தின் இளவரசனை மனந்திருப்பி அவருக்குத் திருமுழுக்கு அளித்ததாகச் சொல்ல ப்பட்டுள்ளது. ஆங்கே கூறப்பட்டுள்ளது யாதெனில் "இலங்கையின் கிழக்குக் கரையோரமாக இரண்டு இராச்சியங்கள் உள்ளன. ஒன்றின் பெயர் யாள, மற்றதின் பெயர் பட்டேக்காலு.[5] யாள மாயதுன்னை என்னும் மன்னனின் அரசுக்கு அருகாமையில் உள்ளது. பட்டேக்காலு, யாள இராச்சியத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் உள்ளது. யாள நாடு பட்டேக்காலு இராச்சியத்தின் இளவரசனுக்கு உரிமைச்சொத்தானது. ஏனெனில் பட்டேக்காலு வின் இளவரசன் யாள அரசியின் மருமகன் ஆவான். அத்துடன் அவர்களுடைய பழக்கவழக்கப்படி அவனே பட்டேகாலுவின் வருங்கால அரசுரிமையும் கொண்டவன், ஏனெனில் அவன் அரசிளங்கு மாரன், பட்டேக்காலுவின் அரசனுடைய மகன் ஆவான். பட்டேக்காலு கடற்கரைப் பிரதேசமாயும் துறைமுக வசதி கொண்டதாயும், அந்நாட்டு அரசன் நம்மோடு நட்புறவு உள்ளவனாய் இருப்பதனாலும் நான் அவ்வழியாக இந்தியாவிற்குச் செல்லப் புறப்பட்டேன். அரசன் என்னைக் கண்டு மகிழ்வுடன் வரவேற்றான். நான் எனது கரத்தில் வைத்திருந்த சிலுவையைக் கண்டு அது என்ன என்று வினவினான். ஆண்டவர் அவ்வேளை எனக்கு அருளிய பிரகாரம் அதைப்பற்றியும் அச்சிலுவையின் மகிமை மேன்னை பற்றியும் அவ்வரசனுக்கு யான் எடுத்துரைத்தேன். கண்டியரசன் ஏற்கனவே கிறிஸ்தவனாக மாறிவிட்டதை அறிந்த பட்டேக்காலு மன்னன் தானும் தனது மகனும் கிறிஸ்தவ மதத்தைத்தழுவ விரும்புவதாக என்னிடம் கூறினார். அவ்வேளை அரசனுக்கு எதிராக ஆங்கே சிலர் கிளர்ச்சி செய்தனர். இதனால் அரசன் உடனே திருமுழுக்குப் பெறுவதைத் தற்காலிகமாக நிறுத்தி விட்டுத் தனது மகனைக் கிறிஸ்தவனாக்க விருப்பம் தெரிவித்தார். அதற்கு ஏற்ப இளவரசனையும் அவரது ஆசிரியரையும் திருமுழுக்குக் கொடுத்து நான் கிறிஸ்தவனாக்கினேன்."[6]

இதன்பின்னர் 1547ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ம் தேதி ஜோஆ டே வில்லா டி கொண்டே என்பவரால் டி காஸ்ரோ என்பவருக்கு எழுதிய மடலில் அவரும் அன்ரோனியோ மோனிஸ் என்பவரும் 'பட்டிக்காலோவின்' அரசனையும் மக்களையும் மனந்திருப்பித் திருமுழுக்குக் கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.[7]

இவ்வாறு போர்த்துக்கேயரின் காலத்திலேயே கிறிஸ்தவம் மட்டக்களப்புக்கு கொண்டுவரப்பட்டது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் இக்கிறிஸ்தவர்கள் எவ்வாறு பராமரிக்கப் பட்டார்கள் என்பது பற்றிய அறிக்கைகள் நம் வசம் அதிகமாக இல்லை. 1628ம். ஆண்டில் மட்டக்களப்பிலும் திருமலையிலும் போர்த்துக்கேயர் கோட்டைகளை அமைத்தபின்னர் ஆங்கே இருந்த போர்வீரர்களின் ஆன்மீக தேவை களை நிறைவேற்ற ஒரு குருவானவர் இருந்தார் என்பதை நாம் காணமுடிகின்றது. இவ்வாறு மட்டக்களப்பில் அருட்தந்தை அன்ரனி டி சொய்றோ என்பவரும்[8] திருமலையில் அருட்தந்தை செபஸ்தியான் பொன்சேகா என்பவரும் இருந்தார்கள். இவர்கள் இருவரும் இயேசு சபைத் துறவிகள் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவர்கள் போர்த்துக்கேய வீரர்களுக்கு மட்டுமன்றி அன்று மட்டக்களப்பிலும் திருமலையிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கும் ஆன்மீகப்பணி புரிந்திருப்பார்கள் என்று யூகிக்க முடிகின்றது.

மட்டக்களப்பிலே போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பதற்கான மிகப்பெரிய அடையாளம் இன்றும் கூட மட்டக்களப்பில் நாம் காணும் 'பறங்கியர்' என்று அழைக்கப்படும் மக்களினமேயாகும். இவர்கள் போத்துக்கேயர்களுக்கும் மட்டக்களப்பு வாழ் தமிழர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலப்புத் திருமணங்களினால் உருவாகிய ஓர் இனத்தவர் ஆவார்கள். இவர்கள் தமிழ் மொழியுடன் போர்த்துக்கேய மொழியைப் பேசுகின்றவர்களாயும், போர்த்துக்கேய உடைஅணிபவர்களாயும், அவர்களுடைய கலாச்சார மரபுகளைக் கடைப்பிடிப்போராயும் அவர்களுடைய பெயர்களைக் கொண்டோராயும் இன்றும் காணப்படுவர்.

# "கிராமத்து ரகசியம்"

மூதூர் - ஜெயராஜ்

போ.....
ஊளை நகரத்து
மைதூனம் நீங்கிச் சுதந்திரமாய்
கிராமமென்கிற கிரகசஞ்சாரத்துக்காய்

கொட்டிக்கிடக்கும்
அழகுன்னைக் கைது செய்யும்

எங்கும்
மரகதத்தில் தோய்ந்த பரவசம்
கிராமத்துப் பச்சயம்
இன்னுமெவர்க்கும் புரியாத அதிசயம்
ஊர்ச்சேவல் கூவ
உழுதவயல் வரம்பைப்பிளந்து
வரிக்கனில் முகம்பார்தெழும்
பாலசூரியனைப் பார்
இளம்பரிதியின்
வர்ண ஒளித் தீற்றலின் கீழ்
காட்டுப்பறவைகளின் சங்கீதத்தைக் கேள்
சுரமறியா வித்வான்கள் சிருஷ்டித்த
சங்கீத சாம்ராஜ்யத்தில்
"கமக" சஞ்சாரஞ்செய்
குளத்தில்
சேற்றுக் கூழ்குளிக்கும் எருமைகளையும்
ஆற்றில்
குறுக்கைகட்டி நீந்தும் அழகிகளையும் ரசி
இரட்டித்த வயல்களில்மோதி
சேற்றின் மணம் நுகர்ந்து வருமந்தக்
காற்றைச் சுவாசி

ஏர்பிடித்துழும்போது
உள்ளத்துவப்பில் கமறியெழும்
ஆசுகவியின் இலக்கியத்தில் அமிழ்ந்து போ

ஆதிசேடனைக் கொண்டு கடைந்தெடுத்த
அமுதமும் தோற்றுப்போகுமந்த
கறுப்புக்கலயத்தின்
கஞ்சியை நுகர்ந்துபார்

குச்சுக் குடிலின்
கூரைதாண்டிவரும் புகையில்
எஞ்சியிருக்குமவன்
உயிருசலாடும் ........ தேடு

மாலை மயங்க;
அந்த மலையடிவாரம்
மஞ்சள் தோய்த்துக் குளித்து நிற்க,
பிரமன் கூட தியங்கிப்போனதோர்
திவ்வியப் பிரபையை நீ
கண்டதுண்டா எங்கும்?

போ.....
எங்கள் ஆலமரங்களினடியில்போய்
சிம்மாசனமிடு
இந்தக் கிராமத்து ரகசியத்தை உன்
ஊளைநகரத்தின்
காதுகளில் போய் ஓது.

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் வருடாவருடம் வழங்கும் 'சமூகத் தொடர்பு சாதன விருது', இம்முறை மட்டக்களப்பு மறைக் கோட்டத்திற்குக் கிடைத்துள்ளது. 2000ம் ஆண்டு திருகோணமலை மறைக் கோட்டத்திற்கும் 2001ம் ஆண்டு கல்முனை மறைக் கோட்டத்திற்கும் இவ்விருது உரித்தானது



# நேர்காணல்

## இவ்வாண்டு தொடர்பு சாதனவிருது பெறும் புவனேஸ்வரி அகஸ்டின் ரீச்சர்

2002ம் ஆண்டுக்கான விருதினை மட்டக்களப்பு மறைக் கோட்டத்தைச் சேர்ந்த புளியடிக்குடா புனிதசெபஸ்தியார் பங்கில் உள்ள திருமதி. புவனேஸ்வரி ஜோசப் அகஸ்டின் அவர்கள் பெறுகிறார்கள். "புவனேஸ்வரி ரீச்சர்" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் அவரை 'தொண்டன்' சார்பாக செவ்விகாணச் சென்றோம்.

**கேள்வி:** 2002ம் ஆண்டிற்கான சமூகத்தொடர்பு சாதன விருதானது தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமைக்காக 'தொண்டன்' சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். முதலில் உங்களைப்பற்றி சில வார்த்தைகள்.

**பதில்:** நான் இதே பகுதியை எனது சொந்த இடமாகக் கொண்டவள்: 1935.09 04 ல் பிறந்தவள்: அரசடியில் அமைந்துள்ள பாடசாலையில்தான் கல்வி பயின்றேன். நான் ஒரு சைவக்குடும்பப் பெண். 1968ல் எனக்குத் திருமணம் ஆனது. அதன்பின் றோமன் கத்தோலிக்கப் பெண்ணானேன். பாடசாலையில் படிக்கும் போது கூட அரசாங்கப்பரீட்சைக்கு 'கிறிஸ்தவம்' பாடத்தையே எடுத்தேன். எனக்கு சேவை செய்வதென்றால் பெரும் ஈடுபாடு. இம்மாற்றம் அதற்குப் பெரிதும் உதவியது. இரண்டு மகன்மார் உள்ளனர். ஒருவர் அங்கிலிக்கன் திருச்சபையில் பாஸ்டராகி உள்ளார். மற்றவர் தனியார் வங்கியொன்றில் கடமைபுரிகின்றார்.

**கேள்வி:** உங்களது நாடக உலக ஈடுபாடு அனுபவம் பற்றி ....

**பதில்:** நான் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் 1955/ 1956ம்ஆண்டுகளில் பயிற்சி பெற்றேன். அங்கு சாரணர் இயக்கத்திற்காக முதன்முதலாக நாடகமொன்றை எழுதி இயக்கினேன். அது பெரும் பாராட்டைப் பெற்றது. 1961ல் பன்குளம் பாடசாலையில் கற்பித்தேன் அங்கு சின்னச்சின்ன நாடகங்களை மேடையேற்றினேன். 1964ல் மட்/திரேசம்மாள் பாடசாலைக்காக 'திருந்தியவன்' என்னும் நாடகத்தையும் 1965ல் அணைந்ததீபம், சகுந்தலை நாட்டிய நாடகம் என்பனவற்றையும் மேடையேற்றினேன். இவ்வேளையில் அருட்சகோதரி றொசாரி மாக்கிரட் அவர்களைப் பற்றி நான் குறிப்பிட்டே தீரவேண்டும். எனது நாடக வாழ்க்கைக்கும், ஆசிரிய வாழ்க்கைக்கும் அவர் மிகவும் பக்க பலமாக இருந்தவர்.

1966ல் புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயக் கட்டட நிதிக்காக 'வாழத்தெரிந்தவன்' என்னும் நாடகத்தை மேடையேற்றினேன். மட்/ புனித மிக்கேல் கல்லூரி மண்டபம், கல்முனை பற்றிமா கல்லூரி மண்டபம் என்பனவற்றில் இது மேடையேற்றப்பட்டது.

பின்னர் சில காலம் காத்தான்குடி மகாவித்தியாலயத்தில் கடமையாற்றினேன். அக்காலத்தில் 'மல்லிகை' என்னும் கையெழுத்துப்பத்திரிகையை பெண்பிள்ளைகளைக் கொண்டே வெளியிட்டேன்.

பின்னர் மீண்டும் புனித திரேசம்மாள் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுவந்தேன். அங்கு தமிழ்த்தின விழாப்போட்டிகளுக்கான வாய்மை, யூலியஸ் சீசர், கணையாழி போன்ற நாடகங்களை எழுதி இயக்கினேன். இவை முதல் பரிசுகள் உட்பட பல பரிசுகளைத் தட்டிச் சென்றன. (இவ்வேளையில் பல புகைப்படங்களைக் காட்டுகின்றார். உண்மையிலேயே பிரமாண்டமான அரங்கமைப்புகளுடன் கூடிய மேடை நாடகங்களின் பதிவுகளாக அவை காணப்பட்டன)

இன்னொருவரையும் நான் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும். செல்லக்கா என்னும் திருமதி ஜோசப் ரீச்சர் அவர்கள் தான் நான் ஒரு முழுமையான ஆசிரியையாக வர உதவியவர்.

**கேள்வி:** மேடை நாடகங்களையே எழுதி வந்த தாங்கள் வானொலி நாடகங்களில் ஈடுபாடு கொண்டமைபற்றி சொல்லுங்களேன்.

**பதில்:** வண. பிதா நோபட் ஒக்கர்ஸ் அடிகளாரின் வேண்டு கோளுக்கிணங்க 1969ல் யூதித் என்னும் வானொலி நாடகம் செய்தேன். இது கொழும்பில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. பின்னர் புனித மிக்கேல் கல்லூரியில் கற்பித்தபோது (1980களில், நிறைய வானொலி நாடகங்கள் செய்தேன். அவை அனைத்தும் கத்தோலிக்க நிகழ்ச்சிகட்காக மட்டுமே. இவை பெரும் பாலும் மட்டக்களப்பு சமூகத் தொடர்பு நிலையக் கலையகத்திலேயே ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

**கேள்வி:** மேடைநாடகங்களில் ஈடுபாடு கொண்டிருந்த தாங்கள் வானொலி நாடகங்களைச் செய்யும் போது வேறு உத்திகளைப் பாவிக்க வேண்டி வந்திருக்கும். இதற்காக உங்களை எப்படி தயார் படுத்தினீர்கள்?

**பதில்:** மேடைநாடகங்களில் முகபாவம் மூலமே செய்திகளைச் சொல்லிவிடலாம். ஆனால் வானொலி நாடகங்கள் அப்படி யல்ல. உரையாடல்கள் மூலம்தான் செய்திகள் சொல்லப்பட வேண்டியுள்ளன. இதற்கான உதவிகளையும், ஆலோசனைகளையும் தந்து பயிற்றுவித்து என்னைத் தயார் செய்தவர் வண.பிதா. நோபட் ஒக்கர்ஸ் அடிகளார்தான்.

**கேள்வி:** உங்கள் நாடகங்களில் உங்களுக்கு மிகவும் திருப்தி தந்த நாடகம்?

**பதில்:** மிகவும் ஆத்மதிருப்தி தந்த நாடகம் 'வாழத் தெரிந்தவன்'

**கேள்வி:** உங்கள் இந்த நாடக இலக்கியத் திறமைகளை உள்ளடக்கிய வாரிசுகளை உண்டாக்கியுள்ளீர்களா?


**பதில்:** இக்கால இளைய சமுதாயத்திற்கு இது பற்றிய ஈ:டுபாடு மிகவும் குறைவாக உள்ளது. இசை நிகழ்ச்சிகளில் ஈடுபாடு காட்டும் அளவிற்கு நாடகத்துறையில் ஈடுபாடு இல்லை.

**கேள்வி:** நாடகத்துறை தவிர்ந்த வேறு இலக்கியத் துறைகளில் ஈடுபாடு ....?

**பதில்:** சில ஆய்வுக்கட்டுரைக் கட்காகவும், சிறுகதைகளுக்காகவும் பரிசுகள் பெற்றுள்ளேன்,

**கேள்வி:** நீங்கள் இக்கால இளைஞர்கட்கு விடுக்கும் செய்தி ...?

**பதில்:** 'சீவ சேவையே சிவன் சேவை' என்பார்கள் அனைவரும் பிரதிபலனை எதிர்பாராது தங்கள் கடமைகளைப்புரிய வேண்டும். தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.



நன்றி கூறி விடை பெற்றோம்

செவ்வி கண்டவர்
**"ஆழியோன்"**

## கொழும்பு மறைமாவட்டத்தின்
## புதிய பேராயர்



அனுராதபுர மறை மாவட்ட ஆயர் பேருட் திரு ஒஸ் வோல்ட் கோமிஸ் அவர்கள் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார். இது வரைகாலமும் கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயராகப் பணியாற்றிய பேருள் திரு நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ அவர்கள் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இப்புதிய நியமனத்தை திருத்தந்தை வழங்கியுள்ளார்.

1977ம் ஆண்டு ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட பேராயர் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ அவர்கள் 25 ஆண்டுகள் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயராகப் பணியாற்றியுள்ளார். இவ்வாண்டு டிசம்பர் மாதத்துடன் 70 வயதை அடையும் பேராயரின் பதவி விலகலைத் தொடர்ந்து புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அநுராதபுர ஆயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் அவர்கள் முன்பு கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராகப் 28 ஆண்டுகள் பணியாற்றியவர். இவர் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவராகவும் ஆசிய ஆயர் பேரவையின் செயலாளராகவும் பணிபுரிகிறார். இவர் கல்விமானும் சிறந்த எழுத்தாளருமாவார்.

**36வது உலக சமூகத் தொடர்பு தினத்திற்காக திருந்தந்தை வழங்கிய செய்தியின் சாரம்**

# இணையம்

# நற்செய்தி அறிவிப்பின் ஒரு புதிய வழி

அப்போஸ்தலர்கள் ஆரம்பித்து வைத்த நற்செய்திப் பணியைத் திருச்சபை தொடர்ந்து ஆற்றிவருகிறது. இது ஒரு புவியியல் சார்ந்த பரவல் மட்டுமன்று, இதற்காகத் திருச்சபை பல கலாசார நுழைவாயில்களைக் கடக்க வேண்டி இருந்தது அதேவேளை பல புதிய தறை வாயில்களை வேண்டி நின்றது. இன்றைய காலகட்டத்தில் இணையம் நற்செய்தி அறிவிப்பின் ஒரு புதிய வழி என்ற கருப்பொருளில் சிந்திக்க வேண்டியுள்ளது.



உண்மையிலேயே 'இணையம்' என்பது ஒரு புதிய வழிதான். இது இன்றைய கலாசார நெருக்கடிகளுக்குள்ளும் தனக்கே உரிய ஒரு புதிய கலாசாரத்தை உருவாக்கியுள்ளது. இதில் ஆபத்தும் உண்டு: ஆக்கச் செயற்பாடும் உண்டு. ஆயினும் இன்று இதனை நற்செய்தி அறிவிப்பிற்காகப் பயன்படுத்தத் திருச்சபைக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. இது ஒரு சவால்: ஆகவே இதுபற்றிய தெளிந்த அறிவோடு இணையத்தை நாம் கையாண்டால் அளப்பெரும் நன்மைகளை அடைய முடியும். இணையத்தின் ஊடாக கிறிஸ்தவ வாழ்வுக்கான வழிகாட்டல்களையும், வேதாகமக் கல்வியையும் சிறப்பாக வழங்க முடியும். அத்துடன் சமூகத்தோடு உரையாடலை ஏற்படுத்தவும் விசுவாசப் பயணத்தைப் பாதுகாக்கவும் கூடும்.

இணையத்தைப் பாவிக்கும் போது அது அழிவிற்காகவும் தரமிழப்பிற்காகவும் பயன்படுத்தப்படக்கூடிய ஆபத்தும் உண்டு. இணையம் அறிவையும், தகவல்களையும் வழங்கினாலும் விழுமியங்களைக் கற்பிப்பதில்லை. விழுமியங்கள் மதிக்கப்படாதபோது மனிதத்தன்மையும், மாண்பும் இழக்கப்படுகிறது. ஆகவே அதிகாரத்தில் உள்ளவர்கள் இந்த அளப்பரிய சாதனம் அழிவிற்கானதல்ல என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இணையம் ஒரு மனிதனது நேரத்துக்கும் இடத்துக்கும் இடையிலான உளவியல் தொடர்பை புதுமைப் படுத்துகிறது. அதேவேளை பார்க்கக்கூடிய, கேட்கக்கூடிய உடன் கிடைக்கக்கூடியவற்றில் கவனம் செலுத்தப்படுவதால் ஆழ்ந்த சிந்தனைக்கும், தியானத்திற்கும் பிரசோதனைக்கும் இடமில்லாமல் போகிறது. அப்படியாயின் உள்ளொளியால் வரும் ஞானத்தை நாம் எவ்வாறு வளர்க்க முடியும்? இணையம் நற்செய் திப் பணிக்கு பெரும் வாய்ப்புக்களை வழங்கினாலும் மனித உறவுகளின் இடத்தை அது எடுத்துவிட முடியாது. நற்செய்தி அறிவிப்பு என்பது ஒருவரது சாட்சிய வாழ்விலேயே தங்கி உள்ளது. அப்படியாயின் இணையத்தினூடாக நற்செய்தி அறிவிப்புக்குத் தேவையான ஆழ்ந்த தொடர்புக்கு நாம் எவ்வாறு செல்ல முடியும்?

மின்னியல் புரட்சி வளரும் உலகுக்குச் சாதமாக இருப்பினும் தகவல் தொடர்புக்கும், சமூகத் தொடர்புக்கும் இடைவெளிகள் அதிகரித்து ஏற்கனவே இருக்கின்ற சமமற்ற நிலைகள் மேலும் குழம்புகின்ற தன்மையும் உண்டு. இந்நிலையில் இணையத்தை பிரதானமாகக் கொண்டிருக்கும் தகவல் தொடர்பு இன்றைய சமூகக் கோட்பாடுகளுக்கும், உறவுக்கும் சாதமமாக இருக்க முடியும் என்று நாம் உறுதி செய்ய முடியுமா? இராணுவ நவடிக்கைகளின் சூழ் நிலையில் முதன் முதலில் உருவான இச்சாதனம் சமாதானத்திற்காக எப்படி உழைக்க முடியும்? கலாசார கலந்துரையாடல், பங்குபற்றுதல், பரஸ்பர உறவு, ஒப்புரவு என்பன இல்லாமல் சமாதானம் தழைக்க முடியாது! இவைகள் இணையத்தினூடாக முடியுமா? திருச்சபை முடியும் என்று நம்புகிறது. இதனை உறுதிப்படுத்த சமாதானத்தின் அரசர் கிறிஸ்துவின் நற்செய்தியை ஆயுதமாகக் கொண்டு இந்தப் புது வழியினுள் செல்லத் தீர்மானித்துள்ளாள் இணையத்தில் தோன்றும் கோடிக்கணக்கான உருவங்கள் மத்தியில் கிறிஸ்துவின் முகமும் தோன்றுமா? கிறிஸ்துவின் குரல் கேட்குமா? அவரது முகம் தோன்றி குரல் கேட்கப்பட்டால் மட்டுமே எமது மீட்பின், மகிழ்வின் செய்தியை உலகம் முழுவதும் அறிந்து கொள்ளும். இதுவே இணையத்தை உண்மையான மனித வெளியாக்கும்.

# அன்பினால் மாந்தரை ஈர்த்தவர்

கவிஞர் ஆரையூர் அமரன்

இன்னல் சுமந்திடும் மாந்தர்களே - யேசு
தன்னருள் பெற்றிடச் சேர்ந்திடுவீர்
வன்முறை நாசத்தைச் சாற்றிடுவீர் - உங்கள்
வாழ்வில் கவலையை மாற்றிடுவீர்!

நல்லார் மனத்தினை நன்கறிவார் - அவர்
நாட்டம் எதுவென யார் அறிவார்
பொல்லார் வினைகளின் போக்கறிவார் - காலப்
போக்கினால் மாற்றியே நீக்கிடுவார்

ஏழ்மையாம் வாழ்வினை ஏற்றுவந்தார் - விண்
ஏற்றிய தீபமாய்ப் போற்றவந்தார்
கீழ்மைத் தனத்தினை வீழ்த்தவந்தார் - தெய்வ
கீர்த்தியைக் கூறியே வாழ்த்தவந்தார்

ஏற்ற உவமைகள் சொன்னவராம் - பின்னர்
எண்ணம் தெளிவுறச் செய்தவராம்
தூற்றிய வார்த்தைகள் கேட்டவராம் - அதைத்
துச்சமாய் எண்ணியே வாழ்ந்தவராம்

விற்பனர் போக்கினைப் பார்த்தவராம் - அவர்
வீணுரை தன்னைப் பழித்தவராம்
அற்புதம் பற்பல செய்தவராம் - தூய
அன்பினால் மாந்தரை ஈர்த்தவராம்

சத்திய வாக்கியம் சொன்னவராம் - தெய்வ
சக்தியால் யாவையும் வென்றவராம்
உத்தமப் பாதை திறந்தவராம் - தீயோர்
உள்ளத்தை மாற்றப் பிறந்தவராம்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# மட்டக்களப்பு மாநில நாட்டாரிலக்கியங்கள்



எஸ். எதிர்மன்னசிங்கம்

மட்டக்களப்பு மாநிலம், நாட்டார் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தளவில் மிகச் சிறப்பானதொரு இடத்தைப் பெறுகின்றது. மட்டக்களப்புப் பிரதேச ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு இங்கு காணப்படும் நாட்டார் இலக்கியங்களும், நாட்டார் கலைகளும், வாய்மொழிப் பாரம்பரிய விடயங்களும் பெரும் வரப்பிரசாதமாகவுள்ளன. பேராசிரியர் க. சிவத்தம்பி அவர்கள் மட்டக்களப்புப் பிரதேசம் சம்பந்தமாக பேச்சு வாக்கில் கூறும் போது: அள்ள அள்ளக் கிடைக்கும் சுரங்கமாக இப்பிரதேசத்தைக் கூறுவார். ஆய்வாளருக்கு வேண்டிய பல நாட்டாரியல் விடயங்கள் இங்கு காணலாம் என்பது அவரது கருத்தாகும்.

நாட்டாரிலக்கியங்களுள் நாட்டுப்பாடல்கள், தாலாட்டுப்பாடல், ஒப்பாரிப்பாடல், ஊஞ்சற்பாடல், கப்பற்பாடல், கரவலைப் பாடல், வசந்தப்பாடல், கரகப் பாடல், காவடிப்பாடல், கும்மிப்பாடல், கோலாட்டப் பாடல், குளுத்திப்பாடல், எண்ணெய்ச்சிந்துப்பாடல், கூத்துப்பாடல், கொம்புமுறிப்பாடல், முஸ்லிம்மக்களின் கவிகள், வாய்மொழிப்பாடல், பாரம்பரியப்பாடல்கள் என்பனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இப்பாடல்கள் மூலம் மட்டக்களப்புப் பிரதேச மக்களுடைய வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், மரபுமுறைகள், சடங்குகள் பற்றியெல்லாம் சிறப்பாக அறிந்து கொள்ளமுடிகின்றது. கிராமியக் கலைகளிலே முஸ்லிம் மக்களுடைய பழக்கவழக்கங்களும், விவசாய முறைகளும், தெளிவாகக் கூறப்படுகின்றன. மட்டக்களப்பு மாநிலத்தின் முக்கிய தொழில்களாக விவசாயம், மீன்பிடி, இரண்டுமே இருப்பதன் காரணமாக நாட்டாரிலக்கியங்களும் இவற்றை மையமாக வைத்து எழுந்துள்ளன. விவசாயத்திற்கு மாடுகள் மிகவும் துணைபுரிந்தன இதனை:

*மாடும் வயதாளி*
*மாட்டுக்காரன் குமராளி*
*நானுமொரு நோயாளி - மாடு*
*நடக்குதில்லை முதலாளி*

என்னும் நாட்டுப்பாடலில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இன்னுமொரு நாட்டுப்பாடலில்' ஒருபோக வேளாண்மைக்கு உயர் வாணைப் பார்ப்பது போல்' எனக் காணப்படுகின்றது.

விவசாயத்தின் முக்கிய கூறுகளையும், வசந்தன் பாடல்கள் சித்தரிக்கின்றன. 1940ல் திரு. தி. சதாசிவயைர் அவர்களால் தொகுக்கப்பட்டுள்ள 'வசந்தன் கவித்திரட்டு' என்னும் நூலில் அறுபத்திரண்டு வகையான வசந்தன் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. வேளாண்மைச் செய்கைபற்றி விதைப்பு வசந்தன், அறுவடைவசந்தன், உப்பட்டி கட்டுவசந்தன், போன்றவற்றைக் குறிப்பிடலாம். அக்காலப்பகுதியில் விதைக்கப்பட்ட நெல்லினங்கள் பற்றி இவ்வசந்தம் பாடல்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்

'பச்சைப் பெருமான் கறுப் பன் பானை முகன் - செழும்
பன்றிக் கூதன் வெள்ளைவாலன் பச்சைப்பா
மெச்சியே பலரும்விரும்பும் வெள்ளைவாணன் - இந்த
மேதினி எல்லாம் புகழும் முத்துச்சம்பா'

இவ்விதமே கொம்புமுறிப்பு விளையாட்டுடன் தொடர்பான பாடல்கள், ஊஞ்சற்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், யாவும் அமைந்துள்ளன. நாட்டுப் பாடல்களுக்குள்ளே பெரும்பாலும், சமயம்சார்பான பாடல்கள், தொழில்சார் பாடல்கள், காதற்சுவைமிகு பாடல்கள் என்பன காணப்படுகின்றன.

நாட்டார் இலக்கியத்தில் முக்கிய இடம் பெறும் பாரம்பரிய விளையாட்டுக்களுடன் தொடர்பான பாடல்கள் மேலும் சுவை நிரம்பியவையாகவுள்ளன. கிட்டிப்புள்ளு விளையாட்டுப்பாடல், தும்பி விளையாட்டுப் பாடல், கண்பொத்தி விளையாட்டுப்பாடல், ஆடு புலி விளையாட்டுப்பாடல், தெப்ப விளையாட்டுப்பாடல், அம்மானைப் பாடல், எண்ணெய்ச்சிந்துப்பாடல், குளுத்திப்பாடல் யாவும் நாட்டாரிலக்கியப் பொக்கிஷங்கள்.

ஒவ்வொரு விடயங்களும் தனித்தனி உதாரணப்பாடல்களுடன் எடுத்துக் காட்டுவதாக இருந்தால் கட்டுரை மிகவும் விரிவடைந்து விடும் என்பதால் கூறாது விடுதும்.

நாட்டார் பாடல்களின் சிறப்புக்கள் பற்றிப் போராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் கூறும் போது 'நாட்டுப்பாடல்களில்' ஓசை இனிமையும், கருத்

தழகும் மலிந்து கிடக்கின்றன.' என்று கூறியுள்ளார், ஏழு விடயங்களை இப்பாடல்களில் அவதானிக்கலாம்.

01. நாட்டார் பாடல்களில் ஓசையும் இனிமையும் கலந்திருக்கும்
02. கருதாழம் மிக்கதாய் இருக்கும்
03. ஒரு விடயம் பலதடவை திரும்பத்திரும்பச் சொல்லப்படும்.
04. இன்னதென்று சொல்லமுடியாத ஓசைநயம் பொதிந்திருக்கும்
05. பேச்சு வழக்கிலுள்ள சொற்களையும், சொல்லுருவங்களையும் கொண்டிருக்கும்
06. நாட்டுப்பாடல்களுக்குத் தொடக்கமுமில்லை, முடிவுமில்லை
07. அந்தந்தக் காலச் செய்திகளையும், முறைகளையும் அவை ஏற்றுக் கொள்ளும்.

இப்பாடல்களில் எதுகை, மோனை என்பன தானாகவே வந்து அமைந்து விடும்.

எடுத்துக்காட்டாக 'ஈர்க்குப்போல் மூக்கல்லோ இளம்பிறைபோல் நெற்றியல்லோ' எனனும் அடிகளைக் கூறலாம்.

நாட்டாரிலக்கியங்களைப் பெருமைப்படுத்துபவன கூத்துப்பாடல்களேயாகும். அதுவும் மட்டக்களப்பு மாநிலத்தில் ஆடப்பட்டுவரும், வடமோடி, தென்மோடிக் கூத்துப்பாடல்கள் மிகவும் சிறப்பு மிக்கவை. பலவகையான மெட்டுக்களில் இப்பாடல்கள் அமைந்திருக்கின்றன. தென்மோடிக்கூத்தில் உள்ள தருக்கள் மேலும் சிறப்பைத் தருகின்றன.

'தந்தன்னா தன தானன்னா தன தானான் தன தானன்னா
தந்தானதன தானன்னா தன தானன்னா தன தானன்னா'

என அமைந்து செல்லும். இவ்விதம் ஏனைய நாட்டார் இலக்கியங்களாக தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கிராமியக்கலைகள், பாரம்பரியக் கூத்துக்கள் (மகுடிக்கூத்து, பறைமேளக்கூத்து, குரவைக்கூத்து, வசந்தக்கூத்து, காத்தவராயன்கூத்து) ஆகிய கலை இலக்கியங்கள் பற்றியும், வாய் மொழிப் பாரம்பரியப் பாடல்கள், நாட்டார்கதை இலக்கியங்கள், மந்திரம், மாந்திரிகம், வசியம், பழமொழிகள், சோதிடம் (சாஸ்திரம்) போன்ற இலக்கிய வடிவங்கள் பற்றியும் விரிவாக எடுத்து கூறுவதற்கு இது சமயமல்லவெனக் கருதி இத்துடன் நிறைவு செய்வோம்

## கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர்

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே உலகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு கல்வித்துறையில் தொடர்பு சாதனங்கள் என்ற தலைப்பில் நடாத்திய கட்டுரைப்போட்டியில் பரிசு பெறுபவர்கள்

**1ம் பரிசு 500/= சான்றிதழும்**
**இ. நிரூபன்** - 10D
மட்/புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு.


**2ம் பரிசு 300/= சான்றிதழும்**
**ஜெளந். லெ. ஜொறன்சோ**
12 கலை (2004)
மட்/ புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு 200/= சான்றிதழும்**
**யோ. கிலக்ஷன்,**
19/1, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

சிறுகதை

# "தண்ணீர்"

- அச.பாய்வா -



பூமியின் மீது பகைமுடித்த வெற்றிக் களிப்பில் ஊதிச்சிவந்து அடிவானத்தில் சூரியன் புதையுண்டு போக, 'களப்பேயின் உளப்போர் இரண்டு நிறைவித்தாள் உறையும்' என்று எவனுமே பாடாத கல்லடி வெட்டைத் திடலில் நின்றுகொண்டு, ஒருகையை நெற்றிப் பொட்டில் வைத்து நீண்டு பரந்துகிடந்த அந்தச் சூனிய வெளியை முத்துக் கிழவன் துளாவிக் கொண்டிருந்தான்.

தொடைக்குமேல் இடுப்பில் விரிந்து கட்டியிருந்த கந்தல் துணியையும் மீறி முழங்கால் வரை நீண்டு தொட்டு நிற்கும் நீர்க்காவி படிந்த காரிக்கன் கோவணத்தை இறுக்கிக் கட்டுவதும், பின்னர் தொடையில் செறிந்திருந்த ஊத்தையை உருட்டுவதுமாயிருந்தானேயொழிய அவனது கவனமெல்லாம் வேறொரு திக்கில் தரித்து நின்றது.

மாலைக் கருக்கலில் தூரத்தே ஏதாவது அசையும்போது படலை செல்வதும், பின்னர் தான் நினைத்தது அதுவல்ல என்பதறிந்து பின் வாங்குவதுமாயிருந்த முத்துக்கிழவன் எவ்வளவு நேரம் அவ்வாறு நின்றிருப்பானா தெரியாது, அலுப்பில் படலையின் குறுக்கே போட்டிருந்த உலந்தாடியில் சாய்ந்து கொண்டான்.

கல்லடி வெட்டைக்கு அணித்தாயோடி அருங்கோடையில் வற்றிப்போகும் மாந்துறை ஆற்றைக் கூட மன்னித்து விடலாம் ஆனாலிந்த மண்ணை எவ்வாறு மன்னிப்பதென் பதுதான் கிழவனின் கேள்வி. தோண்டத் தோண்ட உவர் நீராகவே சுரந்து கொண்டிருக்கும் அந்தப் பூமிக்குத்தான் என்ன குறையோ? வருடாவருடம் வயிரவருக்குச் செய்யும் சடங்குகள், கொடுக்கும் பலிகள் கூட அந்தக் குறையைத் தீர்த்து வைக்கமுடியவில்லையே! இருந்தாலும், தீர்க்கப்படாத ஏதோ ஒரு சாமி குறை இருக்கவே இருக்கின்றதென்பது கிழவனின் முடிவு.

கிழவனுக்கு இப்போது பேச்சுத்துணை தேவைப்பட்டது. தனது வெப்புசாரத்தைக் கொட்டித் தீர்க்க அயலில் எவருமே இல்லையேயென்று, எங்காவது தீக்கொள்ளியின் அசைவு தெரிகின்றதாவெனப் பாக்கிறான். அந்த இரவில் மகாமசான அமைதியைக் கிழித்துக் கொண்டு, இரண்டு ஆக்காண்டிகள் சப்தமிட்டுப் பறக்கின்றன.

'தூ ....... சனியனுகள்' என்று கொண்டே குடிசைக்குட் புகுந்து கனன்று கொண்டிருந்த விறகொன்றையெடுத்து குடிசைக்குக் குறுக்கே எறிகிறான். 'கூ...ய்' என்ற இரைச்சலுடன் விறகு அப்பாற் சென்று விழுகிறது. இனியென்ன ஆக்காண்டியின் சாபம் தன் குடிசையைத் தீண்டாதென்கிற திருப்தி கிழவனுக்கு. இருந்தும் யாரையும் காணாமல் ஆக்காண்டி இவ்வாறு கரைந்திருக்காதென்பதால் எங்கோ மனித நடமாட்டம் இருக்கின்ற தென்கிற கிழவனின் ஊகம் சரியானதே

தூரத்தே நாப்பத்தாவிற்குளப் பக்கமிருந்து மினுக்மினுக்கென்று கனன்ற விறகின் ஒளி தெரிவதும் மறைவதுமாயிருக்கின்றபோதே முத்துக்கிழவன் கணித்துக் கொண்டான் அது சுப்புறுவென்கிற சுப்பிரமணியனாகத்தானிருக்க வேண்டுமென்று. ஏனென்றால் இந்த நேரத்தில் இளையாரின் வாடிக்கு சரை ( கஞ்சா) வாங்குப்போகும் ஒரேயொரு வாடிக்கையாளன் சுப்புருதானே.

'படீர் படீ' ரென்று கணுக்கால் நெட்டி முறித்தவாறு நடந்து அண்மித்த சுப்புறுவை இனங்கண்ட கிழவர் ஆரு.... சுப்புறுவாமனே ......... நாப்பத்தாவிக் கன்னையலானே வாறா..? அங்கால தண்ணியெடுக்கப் போன பொண்ணுகள் தத்தியக் காணலிய நீ ...? என முத்துக்கிழவன் சரமாரியாகக் கேள்விகளை தொடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டும் காணாதவன் போல் 'இல்ல பெத்தப்பா' என்று சொல்லிக் கொண்டே நழுவப் பாத்த சுப்புறுவைக் கிழவன் விடுவதாயில்லை.

சுப்புறுவுக்கோ சரைவாங்கு மவசரம். கிழவருக்கோ சொல்லியுங் கேளாமல் வாடிப் பெண்டுகளுடன் தண்ணீருக்குச் சென்ற தனது நிறை மாதக் கர்ப்பிணியான மருமகளைப் பற்றிய கவலை. இருவருக்குமிடை யில் நிகழ்ந்த அந்தத் துவந்த யுத் தத்தின் இறுதியில் கிழவனே வெற்றி பெற்றான்.

நாங் கேக்கிறன் நீயென்ன பெரிய கெப்பிரில போறா. உசிரவிட சரபெரிச— காவாலி' என்று சப்தமிட்ட கிழவரின் நாடியைத் தடவியபடி சுப் புறு 'கோவியாத பெத்தப்பா. பொறன் கொஞ்சம் சரய வாங்கித்து ஓடிவா றன்' என்று சொல்லிப் பார்த்தும் முடியவில்லை.

'ஒட்டமு நடையுமா நீயிப்ப வரனுமென்னோட ஓ ......'

'ஏம் பெத்தப்பா....'

ஏன் ...... நீ யென்ன, இப்ப தண்ணீயெடுக்கப் போன தத்திக் கிட்ட கூட்டிப் போணும். நட முன் னுக்கு பொறத்தால வாறன். பொறகு வந்து சரய வாங்கு என்று சுப்புறுவைத் திருப்பியழைத்துக் கொண்டு நாப்பத் தாவிற் பக்கம் நடக்கத் தொடங்கி னான் கிழவன்.

அந்தா ..... அந்தத் தென்னையால பொளுது சாயக்க போனதுகள். இவ்வோள நேரத்துக்கு என்னதான் செய்யிதுகள்' என்று கிழவன் மௌனத்தை உடைத்தான் 'ஆன கீன பொளங்குற நேரம் என்ன நடந்துதுச்சோ ....' என்று கிழவனின் மனம் வழிநெடுக அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

கிழவனின் அவசரத்தைப் புரிந்து கொண்ட சுப்பு, இடைக்கி டையே 'கூ' ப் போட்டுக் கொண்டே வந்தான். அவனது சப்தம் இரவில் மரங்களிலும் மலைக் குன்றுகளி லும் மோதி எதிரொலித்தது, ஒருவித பயங்கரத்தை ஏற்படுத்திற்று.

சிறிது நேரத்தில் சுப்புறு வின் 'கூ' ப்பாட்டுக்குப் பதிற் கூப் பாடும் தூரத்தே கேட்டது. அது பெண் களின் குரல்தான் என்பதைப் புரிந்து கொண்ட கிழவனுக்குத் தெம்பு பிறக் கக் காலை விரைவாக எட்டியெட்டி வைத்து நடந்தான்.

குளத் தெல்லையில் இரு குழுக்களும் சந்தித்த போதும் கிழவர் மருமகளையே தேடினார். கண்ணக— புள்ள கண்ணக ....' எனத் தட்டுத் தடுமாறியவர் அவளைத் தேடியது சுப்புறுவிற்கே வருத்தமாயிருந்தது. மெதுவாகக் கிழவரின் கையைப் பிடித்து மருமகளண்டை கொண்டு போனான்.

மனம்நிறைந்த வெப்புசாரத்தை மனதுள் அடக்கிக் கொண்டு, என்ன புள்ள பிந்திப்போனா நாம் பதறிப் பெய்த்தனல்லா ..' என்ற கிழவனுக்கு 'ரெண்டு சருவமும் தடுக்கி உளுந்திட்டு மாமா. அதான் திரும்பிப்போய் தண்ணீ யெடுக்கச் சுணங்கித்து' என்று கண் ணகை பதிலளித்போது முத்துக்கிழவ னின் கண்கள் பனித்ததை யாரும் கண்டுகொள்ளவில்லை.

'இஞ்சொண்டா' என்று கண்ணகையின் இரண்டு குடங்களை யும் வாங்கிக் கொண்டு சுப்புறு முன் நடக்க அந்தத் தண்ணீர்ப் பரிவாரம் நாப்பத்தாவிற் குளத்தின் அணைக் கட்டை உண்டில்லையென்ற வாறாக் கிக் கொண்டிருந்தது. வேறென்ன தங்களுக்கு முன் இரண்டு ஆண் துணை இருக்கின்ற தென்கிற தென்புதான்.

முத்துக்கிழவன் அன்றிரவு வாடியில் கண்ணோடு கண் மூட வில்லை. கண்ணகைக்குத் தன் மாமனாரைப் பார்க்கப் பாவமாயிருந் தது. அதே நேரம் புரண்டு புரண்டு நித்திரையின்றித் தவிக்கும் மருமகளைக் காண கிழவனுக்குப் பரிதாபமாயி ருந்தது.

தீடீரெனக் கிழவன் என்ன நினைத்துக் கொண்டானோ, காதிடுக் கில் சொருகியிருந்த குறைச்சுருட் டைப் பற்றவைத்தபடியே, 'புள்ள எண்ண அரண்டரண்டு கெடக்கா, வவுத் துக்க என்னஞ் செய்யிதா ..' என்று கொண்டே அவள் பதிலுக்குக் காத்தி ராமல், 'நீயினிமேத் தண்ணீக்குப் போவேணாம்புள்ள, விடியவெள்ளணயில நாம் போய்த்து வாறன்' என்று சொல்லிக் கொண்டிருந்த போது வலதுகையை நிலத்திலூன்றி எழும்ப முயன்ற கண் ணகையைத் தடுத்து' ஒலும்பாத படு ... நீ யென்ன சொன்னாலும் எனக்குப் பேரந்தாபுள்ள பொறப்பான்.

அவர் நிறுத்தி நிறுத்திச் சொல்லி முடிக்குமுன்னே, இறந்து போன அவர் மகனின் நினைவுஞ்

சேர்ந்து கொள்ள அழுகை அவரையறி யாமற் பீறிட்டது. நாட்டில் சமாதான மென்கிற கதை பரவிய இரண்டு நாட் களுக்குமுன் சுட்டுக் கொல்லப்பட்ட அதிர்ஷ்டங்கெட்ட மகனல்லவா அவன்.

நீண்ட நேரப் பிலாக்கணத் தின்பின் தான் நாற்பது வருடங் களுக்கு முன் கிரானிலிருந்து மணம் முடித்த கையோடு, மாந்துறையாற்றின் மூன்று கிளைகளைக் கடந்து சேனைச் செய்கைக்காக ஆளரவமற்ற இந்த அமானுஷ்யச் சூழலில் எப்ப டித்தான் வாழப்பழகிக் கொண்டாரோ என்கிற ஆராய்ச்சியில் மூழ்கியும், அருங்கோடையில் தண்ணீருக்காய் நாயாய் அலைந்த அலைச்சல்களை யும், வெட்டிய பூவல்களையும் நினைத்துப் பார்த்தும் கிழவனுக்கு ஒரேயொரு வழிதான் தோன்றியது.

காட்டுப் பறவைகளின் ஒலியு டன் பொழுதும் புலர்ந்தது. முத்துக் கிழவன் தனது காணியின் கிழக்கு மூலையில் அண்ணளவா ன தொரு வட்டத்தை வரைந்து கொண்டு வயிர வசாமி இந்தக்கிணத்தில யெண்டா லும் சவரில்லாம நல்ல தண்ணியக் காட்டப்பா ... நா ஒனக்கொரு பொலி தருவன் 'என்று வானத்தை நோக்கிக் கைகூப்பி மண்வெட்டியை ஓங்கிப் கொத்தினான். கிட்டித்த தரையில் மண் வெட்டி கிண்ணறம் பாடியது.

எழுபது வயதான முத்துக் கிழவனின் நாடி நரம்புகளில் நிரவி யிருந்த அந்த அசாதாரண வெறியும், அவனுக்கிருந்த திராணியும் சேர்ந்து அந்தப் பிராந்தியத்துக்கு ஒரு புதிய நன்னீர்க் கிணற்றைப் புஷ்பித்ததை அறியாமலேயே முத்துக்கிழவன் செத் துப்போனான்.

'தண்ணீயெண்டாத் தண்ணி தான் கண்டியாளே ...... வைரவர் ஆரப் பொலியெடுத்திருக்கெண்டு' ஒரு விடியலில் கல்லடிவெட்டைத் திடலில் இருவர் இவ்வாறுதான் பேசிக் கொண்டு போனார்கள்.



## திருக்காய வரம் பெற்ற பியோ அடிகளாருக்குப் புனிதர் பட்டம்.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த பியோ அடி களாருக்கு கடந்த ஜூன் மாதம் 16ம் திகதி புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. 1918ம் அண்டு முதல் 1968ம் ஆண்டுவரையான காலப் பகுதியில் ஆண்டவரின் பாடுகளின் திருக்காயங்களை இவர் தம் உடம்பிலே பெற்று புனித வாழ்வு வாழ்ந்தவர். அவர் இறந்ததும் அவர் உடலிலிருந்து காயங்கள் அற்புதமாக மறைந் ததோடு அவற்றிலிருந்து நறுமண வாசனை கமழ் ந்தது. அற்புதங்கள் செய்யும் ஆற்றலைப் பெற்றிருந்த பியோ அடிகள் பலரது நோய்களை இறை ஆசீரால் குணமாக்கியதோடு ஒரே நேரத்தில் இரு இடங்களில் தரிசனமாகி பலருக்கு எற்படவிருந்த ஆபத்துக் களைத் தடுத்துள்ளார். எதிர்கால நிகழ்வுகளை முன் கூட் டியே எடுத்துரைக்கும் ஆற்றலையும் அவர் பெற்றி ருந்தார். மிகவும் பக்தியோடு திருப்பலியை ஒப்புக் கொடுப்பார். அவரது திருப்பலிக்காக மக்கள் கூட்டம் பல மணி நேரமாகக் காத்துக் கொண்டிருக்கும். நமது காலத்திலேயே நம்மோடு வாழ்ந்து அரிய வரங்களை பெற்ற பியோ அடிகளார் ஒவ்வொருவரும் புனிதரா கலாம் என்பதற்கு உறுதியான சான்றாக விளங் குகிறார்.

## மங்கோலியாவில் கத்தோலிக்க திருச்சபைக்கு பாராட்டு!

மங்கோலிய மக்களின் வாழ்விலும் வளர்ச்சியிலும் கத்தோலிக்க திருச்சபை மிக முக்கிய இடத்தை வகிக்கிறது என்று புகழாரம் சூட்டியுள்ளார் மங்கோலிய வெளிவிவகார அமைச்சர் யூக்கா செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில். கல்வி, பயிற்சிகள், கிராமப்புற மேம்பாடு சமூகப்பணி அரசியல் இவைகளில் இணைந்து கத் தோலிக்க திருச்சபை செய்த பணிகள் மகத்தானவை என்று புகழாரம் சூட்டினார்.

## பாகிஸ்தானில் கிறிஸ்தவர்கள் கொலை

கடந்த அக்டோபர் 28ம் திகதி பாகிஸ்தான் தகன்போரில் உள்ள புனித ஜேமிஸ் கத்தோலிக்க ஆலயத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்த 17 புரட் டஸ்தாந்து உறுப்பினர்களைக்கொன்ற தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளதாக பாகிஸ்தான் காவல்துறை அறிவித்துள்ளது. இது தொடர்பாக நான்கு பேரை பொலிசார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் அனைவரும் தடை செய்யப்பட்ட லஸ்கார் தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள். புனித தோமினிக் ஆலயப் பங்குத் தந்தை ரோக்குறாஸ் பத்ராஸ் நான்கு தீவிர வாதிகளையும் சந்தித்தார். அவர்கள் பத்திராசிடம் தகன்பூர் வன்முறைக்குக் காரணமானவர்கள் என ஒத்துக்கொண்டனர்.

# தமிழர் பண்பாடும் கத்தோலிக்க திருச்சபையும்



மனிதன் குழுமமாக அல்லது சமூகமாக வாழும் நிலையை அடைந்து, அதில் வாழ்ந்து, அறிந்து, உணர்ந்து கொண்ட சில வாழ்க்கை முறைகளையும் நோக்கங்களையும் அல்லது குறியீடுகளையும் பாரம்பரியமாகக் கைக்கொண்டு வரும்போது அது 'பண்பாடு' எனத் தோற்றம் பெற்றது என்பது சமூகவியலாளர்களின் கருத்து. இது மொழி அல்லது பாரம்பரியங்களை உள்ளடக்கிய பண்பாடு ஆகும். அந்த வகையில் தமிழர்கள் கொண்டிருந்த வாழ்க்கை முறைகள், பண்பாட்டின் உயர்ந்த கோட்பாடுகள் என்பதை சங்ககால இலக்கியங்கள் புலப்படுத்துவது அதன் தொன்மைக்குச் சான்று பகர்வதாகும்.

'பரந்த உலக மனப்பான்மை' ஒரு கொள்கை, ஆதலால்தான் புறநானூற்றில். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் வள்ளுவத்தில் 'யாதானும் நாடாமல் ஊராமல்' என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. விருந்தோம்பல் ஒரு சிறந்த பண்பு. பிறரன்பு. ஈகை, 'தமக்கென வாழாப் பிறர்க்குரியராதல்' எனும் கோட்பாடு, 'என் கடன் பணி செய்து கிடப்பது', அகத்தினை மரபு, புறத்தனை மரபு, மானமென்றால் உயிரையும் கொடுத்துக் காக்கும் வேட்கை. மனத்துய்மை. 'விடாது முயலல்' எனும் கொள்கை, 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நிகரற்ற நிலை. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பன தமிழர் பண்பாட்டில் அரிய சில கோட்பாடுகள்' (ஆதாரம் தொண்டன் - 1994 தனிநாயக அடிகள் நினைவுச் சிறப்பிதழில் வெளியான 'தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள்' என்னும் கட்டுரை)

சங்க காலத்தில் தமிழர் எதையெல்லாம் தமது பண்புகளாகக் கொண்டிருந்தார்கள் என்பதை கலித்தொகைப் பாடல் ஒன்று கூறும் போது. 'இவ் வாழ்க்கை என்பது வறியவர்க்கு அவர்தம் துன்பம் நீங்கத்தக்கதாக யாதாவது கொடுத்தல், போற்றிக் காத்தல் என்பது தம்முடன் சேர்ந்தாரைப் பிரியாது இருத்தல். அன்பு என்பது அயலவர் கெட்டழிந்து போகாமற் காத்தல், அறிவு என்பது அறிவற்றவர் பழித்துரைக்கும் சொற்களைப் பொறுத்தல், உறவு என்பது கூறியதை மறுக்காதிருத்தல், நீதி என்பது எம்மவர் என்று இரங்காமற் தண்டனை வழங்குதல், பொறை என்பது பகைவரை வெல்லுங் காலம்வரை பொறுத்திருத்தல்' என்னும் பொருள் பட, இலக்கியச் செழுமையோடு விளங்குகிறது, (ஆதாரம் கலித்தொகை - நெய்தல் 133)

எனவே, தமிழர் பண்பாடு என்பது மொழி நிலைப் பண்பாடு, அதாவது மொழியையும் வாழ்க்கையையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பண்பாட்டுக் கொள்கை என்பது வரலாற்று வழியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக மதநிலைகளுக்கு அப்பால், சமயச் சார்பற்ற ஒரு தமிழப் பண்பாடு உண்டு என்பது நிரூபணமாகிறது. மொழிவழிப் பண்பாடுகளில் மதங்களின் தத்துவங்கள் மருகிய நிலையை ஆராய்வதற்கு மதங்களில் இறைவனையும், அந்த நம்பிக்கையின் ஆரம்ப நிலையையும் நோக்க வேண்டியுள்ளது. மதம் என்பது நம்பிக்கை. மனிதனை வரையறைகளுக்கு உட்படுத்தும் நம்பிக்கை, அதாவது மனித அச்சத்தின் இறுதி நம்பிக்கையான மனநிலைதான் இறைவன் என்பது அறிவியற் சிந்தனை. அந்த நம்பிக்கையான மனநிலையை மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்கும் குழுக்கள்தான் சமய நிறுவனங்களாகப் பரிண மித்திருக்கின்றன. இந்நிறுவனங்கள் உலகப் பிரச்சனைகளினால் மன அழுத்தங்களுக்கு ஆளான மனிதனின் ஆற்றாமைக்குத் தெம்பூட்டும் வழியைக் கண்டுபிடிப்பதன் மூலம் அமைதியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இறைநம்பிக்கையை வளர்த்து விட்டன. அதன் வழியாக மக்கள் தமது மன உணர்

வுகளை வெளிப்படுத்த மொழியையும் அதன் இலக் கியங்களையும் பயன்படுத்திக் கொண்டதனால் பண்பாட்டில் மதங்கள் மருவியிருப்பதைக் காண முடிகிறது.

மதம் என்னும் நம்பிக்கையை மக்கள் மத்தியில் வளர்த்தெடுத்து அதன் மூலம் தமது மதத்தின் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ள அல் லது முதன்மைப்படுத்துவதற்கு ஏதுவாக சடங்கு களும் அதற்கேற்ப ஐதீகக் கதைகளும் உருவாக் கப்பட்டன. இவை தமிழ்மொழி மூலம் அறிமுக மாகியபோது தமிழர் பண்பாடும் அறியப்பட்டது. தமிழ் நாட்டில் பல்வேறு சமயங்களின் தத்துவங் கள் தடையின்றிப் போதிக்கப்பட. பரந்த நோக்குடைய தமிழர் பண்பாடே காரணமெனலாம். 'எனவே தான் சமணரியற்றிய சிலப்பதிகாரத்தை யும், பௌத்தர் இயற்றிய மணிமேகலையையும், வீரமா முனிவரின் தேம்பாவணியையும், உமறுப் புல வரின் சீறாப்பூராணத்தையும் ஆராயுங்காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக் கியுள்ளார்கள் என்பது புலனாகிறது' (ஆதாரம் தொண்டன் 1994) தனிநாயக அடிகள் நினைவுச் சிறப்பிதழில் வெளியான. 'தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள்' என்னும் கட்டுரை)

கிறிஸ்தவம் ஒரே இறைவனை பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்னும் அன்புறவில் உரு வான தந்தையாகவும் மீட்பராகவும் வெளிப்படுத்தி, அவர் என்றும் மனிதரோடு வாழும் நற்செய்தி யையும் அறிவிக்கிறது. இதன் ஆன்மீக அடிப் படை அன்பு, பகைவனுக்கும் அன்பு எனும் பக்கு வநிலை. அதனூடாக எளிமை, வெறுமை, தாழ்மை, மன்னிப்பு, பகிர்தல் என்னும் சாத்வீகப் பண் புகளை வாழ்ந்துக்காட்டுதல் மூலம் மனுக்குலம் அமைதி அடைதலாகும். உலகின் பல்வேறு பண் பாடுகளுடனும் இணைந்திருக்கும் கிறிஸ்த வத் தின் நெகிழ்வுத்தன்மையினால். அவை ஒவ் வொன் றும் தூய்மையடையும் புளிக்காரமாகத் திகழ்வது அதன் சிறப்பம்சமாகும். தமிழ்நாட்டில் கிறிஸ்தவம் 'கத்தோலிக்க திருச்சபை' யாகவே அறிமுகமாகியது. தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்தியாவிலும் ஆசியாவின் பெருநிலப்பரப்பிலும் கத்தோலிக்க திருச்சபையாகவே கிறிஸ்தவம் மனுக்குலத்தைச் சென்றடைந்தது. 'கத்தோலிக்கம்' என்பது ஒருமை. ஐக்கியம். முழுமைக்குரிய, பொதுப்படையான என்றெல்லாம் பொருள்பெறும். கிறிஸ்தவ ஒருமை (ECUMENICAL) நிலையில் வ ழுவாவரம் பெற்றி ருக்கும் கத்தோலிக்க திருச்சபை, கிறிஸ்துவின் மீட்பின் சிகரமாக அமைந்த உயிர்ப்பினூடாக முழு மானிட சமூகத்தையும் ஒன்றிணைத்துத் தந்தை யின் பதம் சேர்க்கும் பணியில் முதலிடம் வகிப் பதை வரலாறு ஒருபோதும் மறந்துவிட முடியாது.

இந்தியப்பண்பாட்டில் உருவான சமயங் களும் அந்த வட்டத்திற்கு வெளியேயிருந்து உள்வந்த இஸ்லாமியமும் தமிழப்பண்பாட்டுடன் இணைந்தபோது. ஆரியரின் மொழிவழக்கும் பண்பாடுகளும் சமயச்சடங்குகளும். இஸ்லா மியரின் அரேபிய மொழிவழக்கும் பாவனைகளும் வழமைகளும் தமிழிற் புகுந்து தாக்கத்தை யுண்டு பண்ணியுள்ளன. அதேபோல தமிழ்ப்பண்பாடு கிறிஸ்தவத்துடன் மருவியபோது கலப்புக்கள் ஏற்பட்டாலும் மொழி, கல்வி, மருத்துவம் போன்ற முக்கிய சமூகத் தேவைகளில் ஏற்பட்ட மலர்வுகள் இன்னும் உயிர்த்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக. 1972ம் ஆண்டு புனித தோமையார் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னையில் நடைபெற்ற கவிதை அரங்கில் 'தமிழகத்தில் கிறிஸ்தவத் தொண்டர்களின் தொண்டு' என்னும் பொருளில் வாணியம்பாடி. கவிஞர் அப்துல் ரகுமான் அவர் கள் வடித்த கவிதையின் ஒரு பகுதியில்.

*ஓலையிலே காயங்கள் உண்டாக்கும் எழுத்தாணி*
*வேலைத் துயரத்தை விலக்கிவைத்து நம்முடைய*
*கண்வண்டு மெய்க்கின்ற காகிதப்பூக் கூட்டத்தை*
*வண்ணமுற எந்திரத்தால் வடிவாக்கித் தந்தவர்கள்!*
*அச்சில்லை என்றால் அறிவுத்தேர் ஓடுமா?*
*அச்சிட்ட நூல்களால் அறிவை அருந்த மிழைப்*
*பொதுவுடைமை யாக்கிப் புகழ்கொண்ட வள்ளல்கள்!*
*எதுவுடைமையோ எல்லாம் இத்தமிழ்க்கே வழங்கியவர்!*
*காட்டுக்குள் ஆடும் கலைமயிலாய் மறைமுகமாய்ப்*

பாட்டறையுள் ஆடிவந்த பைந்தமிழை அம்பலத்தில்
உரைமேடை ஏற்றிவைத்து ஊரறிய ஆடவைத்து
நுரைமேடைக் கடலுலகில் நூதனங்கள் விளைவித்தோர்!

நிகண்டுக் குகையிருட்டில் நின்றிருக்கும் சொற்களின்
முகம்தேடிச் சலித்து முணுமுணுக்கும் தொல்லையெலாம்
அகற்றிச்சொற் கூட்டமெலாம் அர்த்த ஒளி கொடுக்க
அகர வரிசையிலே அணிவகுக்கச் செய்தவர்கள்!
நில்லாமல் ஓடுகின்ற நெடுஞ்சென்னை உந்துகள்போல்
சொல்லெல்லாம் மூச்சுமுட்டத் தொடர்ந்தோடும் நிலைமாற்றி
நிறுத்தக் குறிகளினால் நிறுத்திப் பிரித்து வைத்து
உறுத்தாமல் நாவினுக்கு ஓய்வுதந்த உத்தமர்கள்!
பொட்டில்லாப் பெண்களைப்போல் பொலிவிழந்த 'மெய்'களுக்குப்
பொட்டிட்டு மங்கலங்கள் பூணவைத்த புண்ணியர்கள்

பிறநாட்டுச் சாத்திரங்கள் பெருந்தமிழில் பெயர்த்தெழுதித்
திறமான தமிழ்ப்புலமை தேசமெலாம் விளக்கியவர்!
மேனாட்டு விதைஎனினும் மேன்மைத் தமிழ்வழங்கும்
தேனாட்டில் வேர்விட்டுச் செழுங்கனிகள் வழங்கியவர்!

வித்துவத் தமிழ்உரைக்கு வேக நடை கற்பித்த
தத்துவ போதக சாமியார் எழுத்துவரிச்
சூழிமாற்றி உரைநடையின் கதிமாற்றிப் பழையநடை
வழிமாற்றி வைத்த வளவர், நிகண்டுகளை
உருப்போட்டால் சொல்லாட்சி உருப்படுமா எனக்கூறி
கையணிந்த நல்வளையும் காதணிந்த குண்டலமும்
பையக் கழன்றுவிழப் பாதையிலே தொலைந்துவிடத்
தேம்பி அழுததமிழ் தேம்பி அழாதிருக்கத்
தேம்பா அணிதந்து தேற்றிய தெய்வகவி!

விலாவெடிக்கச் சிரிக்கவைத்து விவேகத்தை விரித்து வைக்கும்
பலாவெடித்த சுவைத்தமிழின் பரமார்த்த குருகதையும்
பொன்னூலில் கோத்த புதுமணி மாலையாம்
தொன்னூல் விளக்கமெனும் சுடர்விளக்கும் தந்தவள்ளல்
காவிகட்டிக் கொண்டிருந்தும் காவியத் தமிழ்பெண்மேல்
ஆவிகட்டி வைத்திருந்த அருள்வீர மாமுனிவர் (ஆதாரம் கவியரங்க கவிதைகள் கிறிஸ்தவரின் தமிழ்த் தொண்டு)

என்று கத்தோலிக்க பணியாளர்கள் ஆற்றிவிட்டஅர்ப்பணிப்பான அரும்பணியை எடுத்துரைக்கின்றபோது அவை காலத்தால் அழியா சான்றுகளாகிவிடுகின்றன.

கத்தோலிக்க தத்துவத்துக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் இடையிலான. 'தத்துவ பண்பாட்டு'க் கருத்தொற்றுமையில் உயிர்த்தன்மையிலான உறவைக் காணமுடிகிறது. தமிழ்ப் பண்பாடு மொழி வழிப்பண்பாடு எனினும், இந்தியாவில் தமிழர் பண்பாடும், தென்னாட்டுத்தத்துவங்களும் ஆரியரின் சமய, வழிபாட்டு முறைகளிலும், வடமொழி இலக்கியங்களிலும் எடுத்துரைக்கப்பட்டு, அவைகளையும் மிளிரச் செய்தன. கிறிஸ்தவம் உட்புகுந்த சமயமாக இருந்தபோதும், ஏனைய சமயங்களின் தத்துவங்கள் தமிழர் பண்பாட்டில் தாக்கங்களை உண்டு பண்ணிய நிலையிலும், அன்பு, ஈகை, அடுத்தவனுக்காக வாழ்தல், பொதுமைநிலை, ஆகிய கிறிஸ்தவ விழுமியங்கள் தமிழ்ப் பண்பாடுகளாக இனங்காணப் பட்டு, ஒன்றையொன்று ஈர்த்தபோது உணர்ந் தறியப்படாத நிலை, கிறிஸ்தவ இறைவனின் உயிர்த் தன்மையை விளங்கிக் கொண்ட போது விழித்தெழுந்தது. இதுவரை தமிழர்க்கென தனித்துவமான உரிமை கொண்டிருந்த பண்பாட்டுக் கோட்பாடுகள்,

கிறிஸ்தவ வாழ்க்கை முறையாகவும் மிளிர்வது உணரப்பட்டது. இறைவன் எம்மோடு வாழ்ந்தார், வளர்ந்தார், உறவுகொண்டார், மீட்பளித் தார், வாழவைத்தார், நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார் என்னும், 'இம்மானுவேலின் விளக்கம்' சிந்திக்கச் செய்தது. 'அப்பா பிதாவே' என்று இறைவனே அழைத்து உறவுகொண்ட கிறிஸ்தவ வழிபாடுகளுடன் இணைந்து உயிருள்ள இறைவனோடு தமிழ்ப் பண்பாடும் உறவாகிவிட்டது.

கிறிஸ்தவத்தையும் தமிழர் பண்பாட்டையும் ஆய்ந்து அறிந்து. அனுபவித்து அவற்றை இணைத்து வைத்த பெருமை கத்தோலிக்க துறவியரையே சாரும். தமிழ் நாட்டில் கிறிஸ்தவம் தமிழ் மொழியில், அதன் பண்பாட்டின் மூலம் மக்களுக்கு உணர்த்தப்படவேண்டிய அவசியம் ஏற்பட்ட போது, கத்தோலிக்கத் துறவிகள் தமிழையும் அதன் பண்பாடுகளையும் கற்றுணர்ந்தது மட்டுமன்றி அதிலே வாழ்ந்தும் காட்டினார்கள் என்பதை வரலாறு கூறுகின்றது.

'அவ்வாறு தமிழ் அறிஞராகத் தோற்றம் பெற்ற ஐரோப்பியர், ஹென்றிக்குவே (HENNRRIQUE) அடிகள் ஆவார். ஆரம்பகாலக் கத்தோலிக் கத்தின் இலக்கியத் தேவைகளை இவருடைய அநேக நூல்கள் பூர்த்தி செய்துள்ளன. அத்தோடு இயேசுவின் வரலாறு நிகழ்ச்சிகளை நாடகங்களாக்கி மக்கள் இலகுவில் கிறிஸ்தவத்தை அறியவும் செய்தார். 'அடியார் வணக்கம்' என்னும் இவருடைய நூல் 1586ம் ஆண்டு அச்சேறியது. ஹென்றிக்குவே அடிகளாரின் தமிழ் - போர்த்துக்கேய அகராதி கத்தோலிக்கத்தைத் தமிழ்ப்பண்பாட்டில் இணையவைக்கப் பெரிதும் உதவியது' அடுத்தவர் '1557 -1656 காலப்பகுதியில் வாழ்ந்த தத்துவப் போதகர் றொபேர்ட் டீ நொபிலி (ROBERT de NOBELE) என்பவர். இவர் உரோமைப் பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் எனினும் தன்னை ஒரு சைத்திரிய சந்நியாசியாகவே பாவித்து வந்தார். இதனால் கிறிஸ்தவ விழுமியங்களின் உட்பொருளை தமிழ் மக்கள் தமது மரபில் உணரத் தலைப்பட்டனர்' (ஆதாரம் தமிழ்ப்பண்பாட்டில் கிறிஸ்தவம் கிறிஸ்தவ மன்ற ஆய்வு வெளியீடு)

தமிழ் மொழியை விருத்திசெய்து கல்விக்குத் துணை செய்யத் தமிழ் எழுத்துகளின் வடிவத்தை மாற்றியமைத்து, எளிதாக விளங்கவைத்தவர்கள் கத்தோலிக்கர்களே. இப்பணிக்கு எடுத்துக்காட்டாக 'அக்காலத்தில் மெய்யெழுத்துக்களின் மேல் புள்ளியிடும் வழக்கம் இருக்கவில்லை. உதாரணமாக 'க்' என்னும் எழுத்து 'க' என்றே எழுதப்பட்டது. அத்தோடு. ரகரத்துக்கும் கீழே கால் இருப்பதில்லை. அதாவது 'ர' அக் காலததில் 'ா' என்றே எழுதப்படும். அதே போல, இரட்டைக்கொம்பு உபயோகிக்கப்பட வில்லை. அதாவது நேசம் என்பது 'நெசம்' என்றே எழுதப்பட்டது மேலும் 'ற' என்னும் எழுத்தும் 'அ' என்னும் எழுத்தும் கீழ்வயிறு இல்லாமல் எழுதப்பட்டன. 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவிலேயே, 'கொன்ஸ்டன்டைன் பெஸ்கி' எனும் போர்த்துக்கேய மிஷனரி மெய்யெழுத்தின்மேல் புள்ளியிடும் முறையையும். இரட்டைக்கொம்பு உபயோகிக்கும் முறையையும் ர கரத்துக்குக் கீழை காலமைக்கும் முறையும் ஏ கார, ஓகார உயிர்மெய் எழுத்துக்களுக்கு அறிமுகப்படுத்தினார்' (ஆதாரம் புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு)

ஐரோப்பிய தமிழ் அறிஞர் வரிசையில் சிறந்தவராகக் கருதப்படுபவர் வீரமாமுனிவர் எனப்படும் கொன்ஸ்ரன்ரைன் ஜோசப் பெஸ்கி (CONSTANTINE JOSEPH BESCHI ) அடிகளார் ஆவார். இவர் தமிழ் அகராதியை உருவாக்கினார். தேம்பாவணி என்னும் பெருங்காப்பியத்தை இயற்றி அரும்பணியாற்றியதோடு கிறிஸ்தவத்தின் ஊடாகத் தமிழுக்குச் சிறந்த பங்களிப்புச் செய்துள்ளார். இவையெல்லாம் கிறிஸ்தவத்தை தமிழ்ப்பண்பாட்டில் இணைய வைப்பதற்கு எடுக்கப்பட்ட ஏதுக்களான போதும் வீரமாமுனிவர் தமது ஆன்ம, உள, உடல் நிலைகளில் தமிழனாக வாழ்ந்து, அதை நேசித்துத் தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவத்தை விளங்கப் பண்ணியவர் என்பதே உண்மை. எடுத்துக்காட்டாக கொன்ஸ்ரன்ரைன் என்னும் இவருடைய இத்தாலிய மொழிப்பெயருக்குத் தமிழில் தைரியம் என்பது பொருள். அதையே தைரிய நாதர் என மாற்றி வைத்துக்கொண்டார். இவர் மீது அன்பும் மதிப்புங்கொண்ட மக்கள் இவரை வீரமாமுனிவர் என்று அழைத்து அப்பெயருக்குத் தமிழ் மெருகூட்டினார்கள். அடுத்ததாக. 1687ல் இலங்கைக்கு வருகை தந்த ஜோசப்வாஸ் (FR. JOSEPH VAS) அடிகளார், நாட்டின் பல பாகங்களிலும் பணி புரிந்தபோது சுதேச குருவாகவே வாழ்ந்து காட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

'17ம் 18ம் நூற்றாண்டுகளில் தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவத்தை வளர்த்தெடுக்க அம்மானைகள், கூத்துக்கள், நாடகங்கள், நாட்டார் பாடல்கள் போன்ற பல்வேறு இலக்கியங்களும் தோன்றியுள்ளன. கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் குறிப்பிடும் இரங்கற் கீத ஒலி எழுந்தமைக்குக் காரணமும் இந்தப் பின்னணியேதான். இதே காலப்பகுதியில் இலங்கையிலும் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள் எழுந்துள்ளதற்குச் சான்றுகள் உள்ளன. இவை தவிர கும்மி. பள்ளு நாட்டார் பாடல்கள், கிறிஸ்தவக் கவிதைகள் போன்ற நாட்டார் இலக்கியங்களும். யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு பகுதிகளில் வழக்கிலுள்ள நாட்டுக் கூத்தும் இவற்றை உறுதிசெய்கின்றன. மேலும் 20ம் நூற்றாண்டின் ஈழத்து அறிஞர்களான சுவாமி ஞானபிரகாசர், தனிநாயகம் அடிகள் போன்றவர்களின் தமிழ்ப் பணி என்றும் நினைவு கூரப்பட வேண்டியவை' (ஆதாரம் தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம் கிறிஸ்தவ மன்ற ஆய்வு வெளியீடு)

மேற்கூறிய வரலாற்று அடிப்படைகளை நோக்குமிடத்து. தமிழர் சங்ககாலத்திற்கு முன்பிருந்தே கொண்டிருந்த வழுவில்லாத தூய பண்பாட்டு நிலைகளும், கிறிஸ்தவத்தின் வலுவுள்ள ஆன்மீக விழுமியங்களும் இணைந்து சாத்வீகப் பண்பாட்டில் சத்தியதேவன் வீற்றிருப்பதை உறுதிப் படுத்துகிறது.

கிறிஸ்தவம் எங்கும் தழைத்தோங்கி நிற்கின்றது. குறிப்பாக இந்தியாவிலும் அதன் தொடுவாயான இலங்கைத் தீவிலும் கிளைகள் பரப்பிப் பல்வேறு பெயர்களைக் கொண்டிருக்கின்றது. இவை ஒவ்வொன்றும் தமிழர் பண்பாட்டுடன் இணைந்து அதையே வாழ்க்கையாகவும் கொண்டிருக்கின்றன. இத்தகைய உபகண்டம் தழுவிய பரம்பலுக்கும், பண்பாட்டிணைவுக்கும் காரணமானவர்கள் கத்தோலிக்கர்களே என்னும் உண்மைக்குச் சரித்திரம் சான்றுபகன்றாலும், எழுத்துவடிவிலான அவற்றை எடுத்துரைக்காத நிலையில் அவை மறந்துபோய்விடலாம். அல்லது மறைக்கப்படலாம் என்பதே யதார்த்தம். கத்தோலிக்கம் வேரோடி, வளர்ந்து, விருட்சமானபோதும் அதன் ஆரம்ப முனைவுகள் வெளியே தெரியாதவாறு காலம் என்னும் மண்முடி மறைந்து கிடக்கின்றன. பரந்து கிடக்கும் இவ்வேர்களிற் பல முளைகள் கிளம்பி, ஒருமைப்பாட்டுக் கொள்கையை அலட்சியப்படுத்திப் புறந்தள்ள முயல்கின்றன. எனினும் 'தான்தோன்றி இரட்சகர்கள்' எனும் இம்முளைகளின் தெரியாத்தனங்களைத் தாங்கிக்கொண்டு தந்தைக்குரிய அன்போடும் அக்கறையோடும் அனைவரையும் இறைவனின் அன்புறவுக்குள் இணையவைக்கும் பணியைக் கத்தோலிக்க திருச்சபை ஏற்றிருப்பது அதன் ஆன்மீக முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறது.

**S. ஜெயராஜா**

# 17வது உலக இளைஞர் தினம்

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அனைத்துலக ரீதியில் கொண்டாடப்படும் உலக இளைஞர்தினம் இவ்வாண்டு பதினேழாவது முறையாக கனடா நாட்டில் உள்ள ரொரன்ரோ நகரில் கொண்டாடப்பட்டது. உலகெங்குமிருந்து பத்து இலட்சத்துக்கு அதிகமான இளையோர் கலந்துகொண்ட இவ்விழாவில் இலங்கையிலிருந்து முப்பது இறைஞர்கள்; இளம்பெண்கள் சென்றனர். திருமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்திலிருந்து மூவர் இவ்விழாவில் பங்குகொண்டனர்.

1984ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உலக இளைஞர் தினம் 2002ம் ஆண்டில் 17வது ஆண்டை நிறைவு செய்கிறது. இம்முறை 150 நாடுளிலிருந்து இளையோர் வருகை தந்தனர். பல்வேறு கட்டங்களாக நடைபெற்ற இவ்விழா ஜுலை 18ம் திகதி முதல் 28ம் திகதி வரை நடைபெற்றது. உடல் நலக்குறைவு காரணமாக திருத்தந்தை இவ்விழாவுக்கு வருகைதரமாட்டார் என வதந்திகள் பரவியபோதும் திருத்தந்தை இவ்விழாவில் கலந்துகொண்டு 27ம் திகதி திருவிழிப்பில் பங்கெடுத்ததோடு 28ம் திகதி நிறைவுத் திருப்பலியும் ஒப்புக்கொடுத்தார்.

சுமார் ஐந்து ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட புத்தக மொன்றினை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. புத்தகம் முன்னுக்கும், பின்னுக்கும் பக்கங்கள் இல்லாமல் 'துண்டும் துணியுமாகக் கிடந்தது. அப்புத்தகத்தில் சுவைப்பதற்கு நல்லதோர் குறுங்கதையொன்று அச்சிடப்பட்டிருந்தது. அதன் சாராம்சம் வருமாறு:

## இலக்கிய மஞ்சரி

-ஆழியோன்-

# மன்னரும் புலவரும்

பண்டைய புலவர்களின் தொழில், மன்னர்களையும், புலவர்களையும் புகழ்ந்து பாடி பொருள் ஈட்டுவது அரசவையொன்றுக்கு ஒரு புலவர் வருகின்றார். மன்னரை 'எக்கச் சக்கமாக' புகழ்ந்து பாடுகின்றார்' மன்னர் அகம கிழ்ந்து புலவருக்கு 'நூறு பொறகாசுகள்' தருவதாய்க் கூறி மறுநாள் வந்து பெற்றுக் கொள்ளும்படி பணிக் கிறார்.

மறுநாள் புலவர் அரசவைக்கு வருகின்றார், உரையாடல் பின்வருமாறு தொடர்கின்றது.

**மன்னர்** - புலவரே! தாங்கள் வந்ததன் நோக்கம் என்ன?

**புலவர்** - மன்னா! எனக்கு நூறு பொற்காசு தருவதாக வாக்களித்தீர்கள்.

மன்னருக்கு விளங்கவில்லை போலும், மீண்டும் வினவுகிறார்.

'எத்தனை பொறகாசுகள்'?

உடனே புலவர் 'இரு நூறு பொற காசுகள் பிரபு'

சபையோர் அதிர்ச்சியடைகின்றனர், மன்னரும் சற்று ஆச்சரியப்பட்டு திரும்பவும் வினவுகிறார்.

'எத்தனை பொற்காசுகள் புலவரே?'

'முன்னூறு பொற்காசுகள் மன்னா' என்று புலவர் பதில் சொல்ல, மன்னர் கோபமடைந்து கடுமையான தொனியில் மீண்டும் 'எத்தனை பொற் காசுகள் தருவதாக வாக்களித்தேன் ...? என்று கேட்டார்

புலவரோ நடுங்கிக் கொண்டே 'நானூறு பொற்காசுகள் தருவதாக வாக்களித்தீர்கள்' என்று சொல்கிறார்

இறுதியில் அரசரையும் அவையோரையும் பொய் சொல்லி ஏமாற்றிய குற்றத்திற்காக புலவர் விசாரிக்கப் படுகின்றார். 'தான் பொய்யனல்ல' என்று புலவர் விளக்கம் கூறுகின்றார்.

மன்னர் எனக்கு நூறு பொற்காசுகள் தருவதாகச் சொன்னார்; மறுநாள் வந்து இருநூறு பொற்காசுகள் தருகிறேன் என்றார் நான் சொன்னது இரண்டு நூறுகளை அல்ல.

நேற்று என்பது முன் நடந்தது. முன் (பு) நூறு பொற்காசு தருவதாக சொன்னதைச் சேர்த்து முன்நூறு பொற்காசுகள் என்றேனே தவிர மூன்று நூறுகளை அல்ல.

மன்னர் தன் வாயால் நான் (உனக்கு) நூறு பொற்காசுகள் தருவதாக சொன்னார், அதைத்தான் நான் நூறு என்று சொன்னேனே தவிர நான்கு நூறுகளை அல்ல.

புலவரின் விளக்கம் அனைவரையும் திருப்தியும் மகிழ்வும் கொள்ளச் செய்தது. எனவே பாராட்டும் ஆயிரம் பொற்காசுகளும் புலவருக்குக் கிடைத்தன.

வேறு ஒரு புலவர் மன்னரொருவரைப் பார்த்து ' நீ அண்டங்காக்காய் ' என்று பாட மன்னரும் மகிழ்ந்தார். நாம் என்றால் 'எகிறிக் குதித்திருப்போம் அண்டம் என்றால் அண்டசராசரங்கள்: காக்காய் என்றால் காப்பவனே என்று பொருளாகும்

இன்னொரு சந்தர்ப்பத்தில் மன்னரொருவரை இன்னொரு புலவர் 'அறிவில்லாதவன்' என்று குறிப்பிட்டார். அறிவில் - ஆதவன் என்று விளக்கமாம். பலே புலவர்கள்!


எனவே நல்ல விடயங்களை அறிந்து கொள்ள துண்டு துணிகள் மட்டும் இன்றி சீனி சுற்றிவரும் தாள்களையும் வாசிக்கத்தான் வேண்டும்.

'கண்டது கற்கப் பண்டிதனாவான்'

# 'வியாகுல மாதா ஆலயமும் காணிக்கைமாதாவும்'

**சி. கந்தசாமி**

**16ம்** நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நம் நாட்டின் கரையோரப்பகுதிகள் போர்த்துக்கேயரால் ஆக்கிரமிக்கப்பட்ட போது மக்கள் வேதனையும் துன்பமும் அனுப வித் தனர். எனினும் யேசுவின் போதனை என்ற 'சுடர் ஒளியும்' கத்தோலிக்க விசுவா சமும், வேரூன்ற அது ஏதுவா யிற்று.



கி.பி. முதலாம் நூற்றாண்டில் கத்தோலிக்க சமயம் இந்தியாவிலும் இலங்கையிலும் அறிமுகமான போதும், வேரூன்றி விருட்சமாக வளர போர்த்துக் கேயர் வருகை துணையாக அமைந்தது. 'தீமையிலும் நன்மை விளைவிக்கும் இறைச்சித்தத்தை' யாரால் உணர முடியும்!

கத்தோலிக்க விசுவாசம் ஈழத்தில் அறிமுகமாகி வளரத் தொடங்கிய காலத்தில் கிழக்கிலும் சில பகுதிகளில் சிலர் கத்தோலிக்கராகி இருக்க வேண்டும். தாண்டவன்வெளி வியாகுல மாதா ஆலயம் பற்றிய செய்திகளில் இது உணரக்கூடியதாக உள்ளது.

மட்டக்களப்பு நகரின் நடுவில் அமைந்துள்ள ஒல்லாந்தர் கால கோட்டையில் (கச்சேரி) இருந்து வடக்கே இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் திரிகோணமலை வீதியில் எல்லை வீதி இணைகின்ற சந்தியில் அமைந்துள்ளது. 'காணிக்கை மாதா' எனும் வியாகுலமாதா ஆலயம். 1624 இல் இது கட்டப்பட்டது என்றும் கிழக்கின் முதல் கத்தோலிக்க ஆலயம் எனவும் கூறப்படுகிறது. இக்கூற்றுக்களுடன் காணப்படும் செய்திகளை ஒப்பு நோக்கின், ஆலயம் அமைக்கப்படு முன்னரே ஓலைக்குடிசைகளில் மக்கள் கூடி இறை வழிபாடு செய்துள்ளனர் எனவும், அவர்களுடன் இணைந்து இந்து சமய மக்களும் 'மாதா' வழிபாடு செய்துள்ளனர் என்றும் உணரமுடியும். அயலில் உள்ள 'அம்மன்' ஆலயமும் அது அமைந்துள்ள காணிச் சுழலும் அதை உணர்த்துகின்றது. அம்மன் ஆலயக் காணிப்பகுதி ஆயரால் அண்மைக்காலத்தில் அம்மன் ஆலய நிர்வாகத்துக்கு உரித்துரிமையாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 'சந்திராவி' எனும் இந்து சமயப் பெண்ணுக்கு மாதா தன்னை வெளிப்படுத்திய செய்தியும் 'தாண்டவன்' என்பவர் மாதாவுக்கு ஆலயம் கட்ட காணி வழங்கியது பற்றிய குறிப்பும் 'சமயப்பொறை' அன்று நன்கு பேணப்பட்டது என்பதை எமக்குத் தெளிவாக்குகிறது. இப்பண்பே கத்தோலிக்கம் வளரக் காரணமாக அமைந்திருக்க வேண்டும் என்பது என் துணிபு.

திருகோணமலை ஆயராக இருந்து காலஞ் சென்ற மேதகு காஸ்டன் றொபிஷே ஆண்டகை ஒப்பமிட்டு 1939 பங்குனி 20ஆந் திகதி வெளியிடப்பட்ட ஒரு பிரசுரத்தில் காணப்பட்ட சில குறிப்புக்கள் ஆலய வரலாற்றை அறிய ஆதாரங்களாகின்றன. அதில் 'மட்டக்களப்பைச் சேர்ந்த தாண்டவன்வெளியிலுள்ள கோயிலும் வியாகுல மாதா சுரூபமும்' என்ற தலைப்பிடப்பட்டு கீழ்க்காணும் செய்திகள் கூறப்படுகின்றன.

> கிழக்கு மாகாணத்தின் முதலாவது கத்தோலிக்க ஆலயம் மட்டக்களப்பிலுள்ள தாண்டவன்வெளியில் அமைந்துள்ள புனித வியாகுல மாதா ஆலயம் என்று வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து தெரியவருகிறது. இலங்கையின்அப்போஸ்தலர் என்று புகழப்படும் ஆசாரத்துக்குரிய யோசப்வாஸ் அடிகள் இவ்வாலயத்துக்கு வந்து திருப்பலி நிறைவேற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னறிக்கை

மட்டக்களப்பிலுள்ள நெடுங்காலப்பட்ட கத்தோலிக்க குடும்பங்களின் சந்ததியினரால் கொடுக்கப்பட்ட வரலாறுகளைக் கொண்டு வந்து சாள்ஸ் லவிங் மேற்றிராணியாரவர்களால் எழுதப்பட்டு திரிகோணமலை மேற்றிராணியார் சேமசாலையில் காணப்பட்ட தமிழ்த் துண்டுப்பிரதிபொன்றில் கூறப்பட்டவற்றோடு கத்தோலிக்கருக்குவப்பானதெனக் கொள்ளத்தகும் வேறு விபரங்களுஞ் சேர்ந்து இதன் கீழ்க் கொடுக்கப்படுகின்றன'

## செய்திகள் சில

'மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களுள் முற்பட்டது தாண்டவன்வெளிக் கோயில். இது 1624ல் கட்டி எழுப்பப்பட்டது. இதற்குரிய நிலம் 'தாண்டவன்' எனும் ஒருவரால் உபகரிக்கப்பட்டது. இவர் பின்னர் தமது வேத விசுவாசத்துக்காக உயிர் துறந்தார். கோயில் காணிக்கை மாதாவுக்கு நேர்த்தி செய்யப்பட்டது. அக்காலத்தில் இப்பகுதியைக் கைப்பற்றியிருந்த போத்துக்கேயரால் வியாகுல மாதா சுரூபமொன்று அக்கோயிலில் வைக்கப்பட்டது.........'

'........... இதற்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக் குப்பின் 1636 ல் ஒல்லாந்தர் இப்பகுதியை அடிப் படுத்தியபோது புளியந்தீவு ஒல்லாந்தர் ஆட்சியிலும் தாண்டன்வெளி கண்டிய அரசன் ஆட்சியிலும் இருக்கு மென பொருத்தசாசனஞ் செய்யப்பட்டது'

மட்டக்களப்பின் நல்லறிஞர்களில் ஒருவராகிய மகா வித்துவான் வி.சி. கந்தையா அவர்களின் ஆய்வு நூலாகிய 'மட்டக்களப்புத் தமிழகம்' எனும் நூலில் கீழ்க் காணும் செய்தி காணப்படுகிறது.

'மட்டக்களப்பில் கிடைக்கும் கத்தோலிக்க பழைய சாசனங்களின்படி வண. றூவியாக் *O.M.I* அவர்கள் 1868ல் மாசி மாதம் எழுதியுள்ள குறிப் பின்படி 1824 மட்டக்களப்பின் முதலாவது தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது என அறிகிறோம். அதுதான் தாண்டவன்வெளியிலுள்ள தேவாலயம் என்கிறார்கள்.'

காலத்தால் முந்திய இவ்வாலயத்தோடு முத்திபேறு பெற்ற யோசேவாஸ் அடிகளின் வருகை பற்றிய செய்தியும் அவர் கத்தோ லிக்கரை நெறிப்படுத்திய செய்தியும் பின்னிப் பிணைந்துள்ளது என்பதையும் நாம் உணரலாம்.




ஆயரகத்தில் காணப்படும் பிரசுரத்தில் யோசேவாஸ் முனிவர் மட்டக்களப்புக்கு வந்ததும், தாண்டவன் வெளியில் கத்தோலிக்கரைச் சந்தித்து ஒரு சிறிய ஓலைக்குடிசைக் கோவிலில் சமயக்கடமை நிறைவேற்றி வந்த வேளை, கண்டியரசனின் 'அதிகாரம்' என்ற பதவி வகித்த வேத விரோதி ஒருவனால் துன்புறுத்தப்பட்டு 'வம்மி' மரத்தில் கட்டியடிக்கப்பட்டதுடன் கோவிலும் எரிக்கப்பட்டது. எரிபாடுகளுக்கிடையில் சுரூபத்தின் எப்பகுதியும் காணப்படவில்லை. மக்கள் மிகவும் வேதனை அடைந்தனர்.

யோசேவாஸ் அடிகளைக் கண்டிய அரசனிடம் கொண்டு சென்று 'வெள்ளைக்கார ஒற்றன் இவன்' என்று அரசனிடம் கையளித்ததாக 'முனிவரின் வரலாற்றில் காணப்படுகிறது.

எரியுண்ட மாதாவின் சுரூபம் சந்திராவிக்கு மாதா கனவில் குறிப்பிட்ட இடமாகிய பிரப்பம்பற்றையுள் இருந்து 'சந்திரா' வியால் எடுக்கப்பட்டு புளியந்தீவிலுள்ள 'மன்னிப்பிள்ளையிடம் கொடுக்கப்பட்ட தாகவும் 1760ல் மறுபடியும் கோவில் கட்டப்படும் வரை அவரிடமே சுரூபம் இருந்ததாகவும் கூறப் படுகிறது. 1939ல் வெளியிடப்பட்ட பிரசுரம் 'எரியுண்ட ஆலயத்தில் இருந்த மாதா சுரூபமே தற்போது ஆலயத்தில் உள்ளது' என்று குறிக்கிறது. இச்செய்தியை உற்று நோக்கின் தற்போது ஆலயத்தில் உள்ள மாதா சுரூபம் அதுவே என்பதும் புலப்படும்.

வந்.யோசேவாஸ் முனிவர் இலங்கைக்கு வந்த வேளை. ஒல்லாந்தரால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்கர், காட்டுப்பகுதிகளில் மறைந்து வாழ்ந்து வந்துள்ளனர். அவ்வாறே மாந்தைப் பகுதியில் வாழ்ந்து வந்த மக்களும் தாங்கள் வணங்கி வந்த புனித மாதாவின் சுரூபத்துடன் அடர்ந்த காட்டுப்பகுதியான 'மடு' பிரதேசத்துக்கு வந்து வாழத் தலைப்பட்டதாகவும், அவர்கள் கொண்டு வந்து வழிபாடியற்றிய அருள் மிகு மாதா சுரூபமே இன்று 'மடு' த்திருப்பதியில் உள்ள மாதா சுரூ பமாகும். இது வந். யோசே வாஸ் முனிவர் பற்றிக் குறிப்பிடும் 'இலங்கைத்திருச் சபையைக் காத்த மாவீரன்' எனும் நூலில் காணப்படுகிறது.

'மடு' மாதா சுரூபமும், காணிக்கை மாதா சுரூபமும் உருவ அமைப்பில் நெருங்கிய ஒற்றுமையுடன் காணப் படுவதாலும், யோசேவாஸ் முனிவருக்கும் காணிக்கை மாதா ஆலயத்துக்கும் தொடர்புகள் குறிப்பிடப்படுவதாலும், எங்கள் ஆலயத்தில் காணப் படும் மாதா சுரூபம் வந். யோசேவாஸ் முனிவரால் கொண்டு வந்தது என நம்பலாம். மாசி மாதத்தில் கொண்டாடப்படும் ஆலயப் பெருவிழாவில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும் சுரூபம் அதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது.


காலத்திற்கேற்ப 1960 வதுகளில் ஆலய முகப்பும் ஆலயமும் திருத்தி அமைக்கப்படும் வரை. உட்புறமும் முகப்பும் இத்தாலியக் கலைவடிவமைந்த

'வில் வளைவுடன் இருந்தது என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். ஆலயத்துள் இருந்த பலிபீடம் 'தேமல் முதிரையால்' அழகிய வேலைப்பாடுகள் அமைந்ததாகக் காணப்பட்டது. இது கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலய வண்ணக்கர் ஊறணித் தம்பியரால் மாதா கனவில் கேட்டதற்கேற்ப 1927ம் ஆண்டளவில் செய்து கொடுக்கப்பட்டதாக அவரே கூறியுள்ளார். இச்செய்தி 'மட்டு நகர் மண்ணில் ஒரு மனிதப் புனிதர்' எனும் நூலின் கண் காணப்படுகிறது. இந்த நூலின் ஆசிரியரும் பீடம் உபகரித்தவரும் நேரடி அறிமுகமானவர்கள் என்ற செய்தியும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பீடத்தை நானும் கண்டுள்ளேன். 2ம் வத்திக்கான் சங்கத்தின் பின் திருப்பலி நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றத்தின் பின் பலி பீடம் அகற்றப்பட்டது.

காலத்தால் முந்தியதும் முத்திப் பேறு பெற்ற வந். யோசேவாஸ் முனிவரால் 'கத்தோலிக்க விசுவாசமும் மாதா பக்தியும்' சிறப்பிக்கப்பட்ட நம் காணிக்கை மாதா ஆலயம் 1930 முதல் தனிப்பங்காக சுமார் பதினாங்கு பங்கு தந்தையர்களால் பரிபாலிக்கப்பட்டு சிறப்புற விளங்குகின்றது. இவர்களுள் 1942 முதல் 1954வரை சேவை புரிந்த மட்டக்களப்பு தன்னாமுனையைச் சேர்ந்தவரும், திருகோணமலை மேற்றிராசனத்தின் முதல் மேற்றிராசனக்குருவும் இறுதிவரை நம்மாலயத்திலேயே அருட்பணி புரிந்து, காலஞ்சென்ற அருட் தந்தை S. லாசரஸ் அடிகளாரை இவ்வண் நினைவு கூருதல் சாலப் பொருத்தமாகும்.

---

# திருப்பாடல்கள் - ஒலி நாடா 4, 5, 6ம் பாகங்கள் வெளிவந்துவிட்டன.



விவிலியத்திலுள்ள திருப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒலிநாடாக்களில் முதல் மூன்று பாகங்கள் ஏற்கனவே வெளிவந்தன. தற்போது மேலும் முப்பது திருப்பாக்களை உள்ளடக்கிய திருப்பாடல்கள் 4, 5, 6ம் பாகங்கள் வெளிவந்துள்ளன. இந்தியப் பாடகர்களால் பாடப்பட்டு இலங்கைத் தயாரிப்பாக வெளிவந்துள்ள இந்த இசைப்பேழைத் தொகுதியை கொழும்பைச் சேர்ந்த திரு. அம்புறோஸ் பீற்றர் அவர்கள் தயாரித்துள்ளார். இவர் ஏற்கனவே பல கிறிஸ்தவ ஒலிநாடாக்களைத் தயாரித்து வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடல்களுக்கு பிரபல இசையமைப்பாளர் திரு A.J. பொஸ்கோ இசையமைத்துள்ளார்.


திருப்பாடல்கள் இசைநாடா ஒன்றின் விலை 100/- பதிவுத்தபாலில் பெற மேலதிகமாக 25/- செலுத்த வேண்டும்.




**தொடர்புகளுக்கு :**
சமூகத்தொடர்பு நிலையம்,
அ.பெ. எண் - 44
மட்டக்களப்பு,






பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# மட்டக்களப்பின் புகழ்பூத்த தமிழறிஞர்கள்



அன்புமணி

## மட்டக்களப்பின் தமிழறிஞர் பரம்பரை

மட்டக்களப்பின் தமிழறிஞர் பரம்பரையை சுவாமி விபுலாந்தருடன் (1892) ஆரம்பிப்பது நம்மவர் வழக்கம். அவருடன் தொடர்பு பட்டிருந்த வித்துவான் ச. பூபாலபிள்ளை (1856) வித்துவான் அ. சரவண முத்தன் (1890) ஆகிய இருவரையும் சேர்த்து இவர் களே மட்டக்களப்புத் தமிழறிஞர் பரம்பரையின் மும் மூர்த்திகள் எனக் கூறுவதுண்டு.

ஆனால் இவர்களுக்கு முன்னும் இவர்கள் காலத்திலும் பல தமிழறிஞர்கள் மட்டக்களப்பில் வாழ்ந்துள்ளனர்; இவர்களை இருவகையாகப் பிரிக்கலாம்:

(அ) தமிழ்ப் புலமை பெற்றவர்கள்.
(ஆ) கிராமியப் புலவர்கள். இவர்களிற் சிலரது விபரம் வருமாறு:

### (1) புலமை பெற்றவர்கள்

இவ்வரிசையில் ஈ. எல். தம்பிமுத்து (திராவிடர் வரலாற்றை ஆங்கில மொழியில் முதன்முதல் எழுதியவர்)
எஸ். ஓ. கனகரத்தினா (மட்டக்களப்புச் சரித்தி ரத்தை ஆங்கிலத்தில் "Monograph of Batticaloa" என்ற நுலாகக் எழுதி வெளியிட்டவர் இவர் மகாவித்து வான் F.X.C நடரா சாவின் மாமனார் ஆவார்) பண்டிதர் குஞ்சித்தம்பி (இவர் மதுரைத் தமிழ்ச் சங்க ஆசிரியர் சுவாமி விபுலானந்தரின் தமிழா சிரியர்) குமாரசாமி ஐயர் (1879) (இவர் சுவாமி விபுலானந்தருக்கு சமஸ்கிருத மொழியைக் கற்பித் தவர் என்பர்) வைத்தியலிங்க தேசிகர் (1878) இவர் யாழ் புலோலியூரில் பிறந்தவர், வியாபார நிமித்தம் மட்டுநகருக்கு வந்து மண்டூரில் குடி புகுந்து தமிழ்ப்பணியாற்றியவர். முருகேசு வைத் தியர் ( இவரும் யாழ் மண்ணில் பிறந்து மட்டு நகரில் குடியேறியவர் பண்டிதர் முருகேச பிள்ளை என அழைக்கப்பட்டவர்) சந்திரசேகர வாத்தியார் (இவரும் யாழ்ப்பாணத்தில் பிறந்து மட்டுநகரில் வந்து குடியேறியவரே இவரை வித்துவான் சந்திரசேகரம் பிள்ளை என்பர்) புலவர் வினாசித்தம்பி (1887) (இவர் மண்டூரைச் சேர்ந்தவர் மகாவித்துவான் வி.சீ கந்தையாவின் தந்தையார்) சோமசுந்தர தேசிகர் வீரமுனை (1885)) அருணாசல தேசிகர் (1888) வில்லியம் பிள்ளை (1891 தம்பிலுவில்) வேதநாயகம் தேசிகர் (1865 கற்கோவளம்

### 2) கிராமியப் புலவர்கள்

விபுலாநந்தர் காலத்த வராகவோ, அவருக்கு முந்திய காலத்தவராகவோ வாழ்ந்த சில புலவர் கள், தமிழில் பாண்டித்தியம் பெறாவிட் டாலும், கேள்வியறிவினாலும், வாய்மொழிப் புலமை யினாலும், பதிகங்கள், ஊஞ்சற்பாடல், அம்மானை ஒப்பாரி, தோத்திரப்பாடல்கள் நகைச்சுவைப் பாடல்கள் முதலியவற்றை இயற்றி மக்கள் மத்தி யில் புகழ் பெற்றனர். அவ்வாறான சிலரது பெயர் கள் வருமாறு

i) அக்கரைப்பற்று மொட்டைவேலாப் போடியார் (1804)
ii) அட்டாளைச்சேளை அப்துல் றகுமான் ஆலிம் புலவர் (1850)
iii) மருதமுனை சின்ன ஆலிம் அப்பா (இயற்பெயர் மீராலெவ்வை)
iv) அக்கரைப்பற்று சேகுமதாறு சாகிப்புலவர்
v) அக்கரைப்பற்று முகமது றாபிப் புலவர்
vi) அக்கரைப்பற்று காசிம் ஆலிம் புலவர் (1887)
vii) கோட்டமுனை வேடப்பிள்ளை (1836) (இவரது இயற்பெயர் வேலாயுதர் மூத்ததம்பி என்பதாகும்)
viii) அக்கரைப்பற்று தாண்டய வேலர் (இவர் மொட் டைவேலாப் போடியாரின் பேரன்)
ix) மருதமுனை முகம்மதலியார்
x) காத்தான்குடி மன்னாருடைய புலவர்
xi) கழுதாவளை சின்னத்தம்பிப் புலவர்
xii) கோட்டைமுனை குட்டிப்புலவன் அந்தோணி
xiii) கோட்டைமுனை சபாரெத்தினசாமி (நொத்தாரிஸ்)

xiv) கோட்டைமுனை சின்னத்தமிபிச் சாத்திரியார்
xv) அமிர்தகழி முத்துக்குமார அண்ணாவியார்
xvi) அமிர்தகழி சண்முகம் அண்ணாவியார்
xvii) அலித்தம்பி (கண்டி ஒப்பாரி பாடியவர்)
xviii) உமறுப் புலவர் ( புயற்பாட்டு, நாட்டுவளம் பாடியவர்))
xix) உதுமாலெவ்வை புலவர் (மெழுகன் ) அக்கரைப்பற்று
xx) மீராலெவ்வை முகமதுத்தம்பி (நபிகள் நாயகம் (ஸல்) சீவியத்தை எழுதியவர்
xxi) கந்தையா ஓடாவியார் ( நெடியவன் ) அக்கரைப்பற்று
xvii) முகைதீன் பிச்சைப்புலவர் (புயல், வெள்ளம் காவியம் இயற்றியவர்)
xviii) சின்னலெவ்வை வன்னியன் (அக்கரைப்பற்று)
xxiv) இளையப் போடியார் (சிலுவர்) மழைக்காவியம் பாடியவர்)
xxv) சின்னவப் புலவர் ( செட்டிபாளையம்)
xxvi) கணபதிப்பிள்ளை புலவர் ( செட்டிபாளையம்)

இவர்களில் தமிழ்ப்புலவர்கள் பெரும்பாலும், கோயிற் பூசகராகவோ, வைத்தியராகவோ, சாத்திரியா ராகவோ, மந்திரக்காரராகவோ, அல்லது இவற்றில் புகழ் பெற்றவராகவோ இருப்பர்.

## 3) விபுலாநந்தர் பரம்பரை

விபுலாநந்தர் காலத் தமிழறிஞர்களைத் தொடர்ந்து அடுத்த தலைமுறையில் பலர் தமிழறிஞர் களாக விளங்கினர்.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, மகாவித் துவான் F.X.C. நடராசா, மகாவித்துவான் பண்டிதர் வி.சீ கந்தையா, பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா, பண்டிதர் செ. பூபாலப்பிள்ளை, பண்டிதர் ஆ. சபாபதிப் பிள்ளை, வித்துவான் சா. கமலநாதன், கலாநிதி க.தா. செல்வராசகோபால், மூதறிஞர் கணபதிப்பிள்ளை, புலவர் மணி ஆ.மு ஷெரிபுத்தின், சைவப்புலவர் சா. தில்லை நாதன், கவிஞர் மூனா கானா, திமிலைத்துமிலன் கவிஞர் அப்துல் காதர்லெவ்வை, ஜே. எம்.எம். அப்துல் காதர், பேராசிரியர் மௌனகுரு, பண்டிதர் சந்திரசேகரம், பேராசிரியர் காலிதீன் முதலியோர் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்கள் காலத்தில் வாழ்ந்த டாக்டர் சோம சுந்தரனார், இலக்கியமணி ஆரையூர் நல் அழகேச முதலியார், விஸ்வப் பிரம்ம ஸ்ரீ காந்தன் குருக்கள் தமிழ் மணி சிவ விவேகானந்த முதலியார் ஆகியோரும் இப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டியவர்கள்.

வித்துவான் வரிசையில், வித்துவான் க. செப ரெத்தினம், வித்துவான் கே. ஞானரெத்தினம் ஆகியோ ரும் இடம் பெறுவர். (இவர்கள் தற்சமயம் கனடாவில் வதிவதுடன் மட்டக்களப்பின் பெருமையை வானொலி முதலிய ஊடகங்கள் மூலம் பரப்பி வருகின்றனர்.

இவர்களைப் போல் வேறுசிலரும் தமிழ்ப் புலமை படைத்தவர்களாக இருக்கலாம். ஆனால் அப்பு லமை, நூல்கள், கட்டுரைகள் சொற்பொழிவுகள் மூலம் வெளிவரவில்லை.

தற்காலம் பலர் பல்கலைக்கழகங்களில் தமிழ் சிறப்புப் பாடமாகக் கற்று தமிழ்ப்பட்டதாரிகளாக வெளி யேறுகின்றனர். இவர்களது தமிழ்ப்புலமையும் உரிய முறையில் வெளிப்படாமையால் அவர்களது ஆற்ற லையும் அறியுமாறில்லை

நமது கல்வித்திட்டத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்று தமிழறி ஞர்களாவோ தமிழ் ஆர்வலராகவோ வெடித்துக் கிளம்பு வர்களை காண்பது அரிதாக உள்ளது

## 4)சுவாமி விபுலாநந்தர்

இச்சிறிய கட்டுரையில் இங்கு நாம் குறிப்பிட்ட தமிழறிஞர்களைப் பற்றி அவர்கள் இயற்றிய நூல்கள்பற்றி, மற்றும் அவர்களது இலக்கியச் சாதனை கள் பற்றிச் சுருக்கமாகவேனும் குறிப்பிட முடியாது.

எனவே தேசிய மட்டத்தில் பிரபலம் பெற்ற ஒரு சிலரது சாதனைகள் மூலம், அவ்வக்காலத்துப் பொது நோக்கினையாவது எடுத்துக் கூறுவோம்

இவ்வாறு நோக்கும் போது சுவாமி விபுலா நந்தர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இமயமாக உயர்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். தமிழிலும் ஆங் கிலத்திலும் புலமை பெற்ற அவர் விஞ்ஞானப் பட்ட தாரியாக இருந்த காரணத்தால் மேற்றிசைச் செல்வம், கீழ்த்திசைச் செல்வம் ஆகியவற்றை ஆழமாக ஆய்வு செய்து தமிழர் வரலாறு, தமிழ் வளர்ச்சி, தமிழர் கலாசாரம், என்பதை விஞ்ஞான பூர்வமாக நிறு வியவர். அந்தவகையில் அவர் ஒரு ஆய்வாளர் ஆகிறார்.

துரதிஷ்டவசமாக அவரை யாழ் நூலுடன் முடங்கிவிட்டனர். யாழ் நூலைக் கற்றவரோ, யாழ் நூலை விளங்கிக் கொண்டவர்களோ யாரும் இல்லை என்று துணிந்து கூறலாம். அவரது ஞானம் (gerius) நமது தலைமுறைக்கு அப்பாற்பட்டது என்பது வெளிப் படை.

இன்னுமொரு துரதிஷ்டம் அவரை ஆறுமுக நாவலருடன் ஒப்பிடுவதாகும். ஆறுமுக நாவலர் ஒரு சமய வாதி. சைவ சமய அனுஷ்டானங்களுடன் தன்னை இறுகப் பிணைத்துக் கொண்டவர். சாதிவேற்றுமையை வளர்த்தவர், ஆன்மீகம் பற்றிச் சிறிதும் அறியாது ராம லிங்க வள்ளலாருடன் மோதியவர், ஆனால் சுவாமி விபுலாநந்தரோ, ஆன்மீகத்தில் ஆழ்ந்து ஞான சிரோ மணியாக வாழ்ந்தவர்.

அவருடைய ஆத்மீகபலமே அவரது தமிழ்ப் பணிகளுக்கு ஆணிவேராக அமைந்தது எனலாம். அவரைத் தமிழும், சைவமும் வளர்த்தவர் எனச் சில சமயவாதிகள் கூறுவர். அதுவும் தவறான கூற்றாகும். சைவத்தை அவர் வளர்த்ததாகக் கொள்வதற்கு எவ் வித சான்றாதாரங்களும் இல்லை.

## 5) விபுலாநந்தர் காலத்து தமிழறிஞர்

நூல்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள் மூலம் தமது சிறப்பினை வெளியிட்ட ஒரு சிலர் பற்றி இங்கு நோக்குவோம்

I) **வித்துவான் ச. பூபாலப்பிள்ளை** *(1856)*

இவர் மட்டுநகரைச் சோந்தவர். மட். மத்திய கல்லூரியில் கல்வி கற்றவர். இலிகிதராக பணியாற்றி பகிரங்க சேவைப் பகுதியில் நிர்வாக அதிகாரியாகக் கடமை யாற்றியவர். 'சீமந்தினி புராணம்' (800 விருத்தப் பாக்கள்) விநாயக மான்மியம் 'புளியநகர் ஆனைப்பந்தி விக்னேஸ்வரர் பதிகம் *(1905)* சிவதோத்திரம், முப்பெருளாராய்ச்சிக் கட்டுரை *(1918)* யாழ் அரசடி விநாயகர் அகவல் *(1920)* கணேசர் கவிவெண்பா, தமிழர் வரலாறு உலகியல் விளக்கம் (விளக்கவுரை) முதலியன இவரது நூல்களாகும். *1915* ல் அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்ற இவர் *1921*ல் மரணமானார். பிற்காலத் தில் தமிழறிஞரான ஜம்புலிங்கம் இவரது 20 நூல்களை 2 பாகங் களாகத்தொகுத்து முதற் தொகுப்பை 1923ல் வெளி யிட்டார்

II) **வித்துவான் அ. சரவணமுத்தன்**

இவர் தாண்டவன்வெளியில் பிறந்தவர் *(1890)* மட். புனித மைக்கேல் கல்லூரியில் கல்வி கற்றவர். சுவாமி விபுலாநந்தரிடம் தமிழ் கற்றவர். நாடக ஆசிரியராகவும், நடிகராகவும் திகழ்ந்தவர். மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் பட்டம் பெற்றவர் *(1916)* இலங்கை வன பரிபாலன இலாகாவில் பணி யாற்றியவர். சுகிர்தவிலாச நாடக சபையின் உறுப்பி னர் பின் தலைவர். பாதுகா பட்டாபிஷேகம், இராமர் வன வாசம், லங்காதகனம் முதலிய நாடகங்களை எழுதியவர்.

மாமாங்கேஸ்வரர் *(1915)* கதிர்காம வேலவர் தோத்திரமஞ்சரி *(1927)* தனி வெண்பா *(1927)* என்பன இவரது நூல்களாகும். ஜோதிடமும் இவருக்குத் தெரியும். இவர் 1930ல் கொழும்பு வைத்தியசாலையில் தமது 40வது வயதில் காலமானார்.

III) **குமாரசுவாமி ஐயர்** *(1879)*

இவர் ஆரையம் பதியில் பிறந்தவர். அரசடி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர், சிறந்த வைத்தியர். ஆயுர் வேத வைத்தியக் கருவூலம் *(800 பாக்கள்)* (எழுத்துப் பிரதி 'மலேரியா என்னும் காட்டுச்சுரம் *(1931)* உருந்திராக்க மகிமை என்பன இவரது நூல்களாகும் 1947ல் இவர் காலமானார்.

## 6) விபுலாநந்தருக்குப் பிற்பட்ட தமிழறிஞர்

இக்காலத் தமிழறிஞர்களில் முதன்மை பெறு பவர்கள் மூவர். அவர்கள் புலவர்மணி ஏ. பெரியதம்பி பிள்ளை, மகாவித்துவான் F.X.C நடராசா மகாவித்து வான் வி. சி. கந்தையா (BOL) ஆவர்

**புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை**

புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை இலங் கையிலும், இந்தியாவிலும் புகழ் பெற்றவர். பகவத் கீதை வெண்பா (3பாகம்) உள்ளதும் நல்லதும், புலவர் மணிக் கவிதைகள், புலவர்மணி கட்டுரைகள், பாலைக் கலி மீட்சிப்பத்து முதலியன இவரது நூல்களாகும். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப்பட்டம், முத்திரை வெளியீடு என்பன தேகாந்த நிலையில் இவர் பெற்ற கௌரவங்களாகும். இவரது பெயரால் 'புலவர்மணி நினைவுப்பணிமன்றம்' என்ற அமைப்பு அரசாங்க அதிபரைத் தலைவராகக் கொண்டு மட்டக் களப்பு 1978முதல் செயற்பட்டுவருகிறது. இவரது உருவச்சிலை மட். கல்வித் திணைக்களத்தின் முன் நிறுவப்பட்டுள்ளது.

II) மகாவித்துவான் F.X.C. நடராசா *(1911)* ஆயிரம் பிறை கண்டவர். 1911ல் யாழ் காரை நகரில் பிறந்து மட்டுநகர் புகுந்தவர். எழுதி வெளியிட்ட நூல்கள் 12 பதிப்பித்த நூல்கள் 4, கலாநிதி (கி.ப.க) மகாவித்து வான் (மட் கலாச்சாரப்பேரவை) கலாசூரி (இலங்கை அரசு) இலக்கியச் செம்மல் (கலாச்சார அமைச்சு) முதலிய பட்டங்களைப் பெற்றவர். இலக்கணப்புலி.

III) மகா வித்துவான் பண்டிதர் வி சீ கந்தையா (BOL) *(1920)*

*1920* மண்டூரில் பிறந்தவர். பல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றியவர். யாழ்ப்பாணம் ஆ. தி.பாஷாபவிருத்திச்சங்கப் பண்டிதர் *(1943)* மதுரைத் தமிழ்ச்சங்கப்பண்டிதர் *(1944)* இலங்கைப் பல்கலைக்கழக வித்துவான் *(1952)* அண்ணாமலைப் பல்கலைக்கழகம் BOL *(1952)* கிழக்குப்பல்கலைக் கழகம் இலக்கிய கலாநிதி (தேகாந்தம்) எழுதியநூல்கள் 1) கட்டுரை இலக்கியம் 2) மட்டக்களப்புத் தமிழகம், 3) பாஞ்சாலி சபதம், பதிப்பித்த நூல்கள், கண்ணகி வழக்கு, ஏராளமான கட்டுரைகள், சொற் பொழிவுகள், உலகத் தமிழாராச்சி மகாநாட்டில் கட்டுரை • பெற்ற விருதுகள் மகாவித்துவான் (மட். கலாச்சாரப் பேரவை) சிவ நெறிச் செல்வர் ( காஞ்சிபுர ஆதினம்)

# திரு/மட். மறைமாவட்டத்துக்கு ஆறு புதிய குருக்கள்



அருள்தந்தை
அ. யேசுதாசன்



அருள்தந்தை
கிறைட்டன் அவுட்ஸ்கோன்




அருள்தந்தை
ரமேஷ் கிறிஸ்ரி


**இவர்கள் மூவரும் ஆகஸ்ட் முதலாம் திகதி மட்/புனித மரியன்னை இணைப்போராலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.**



ச. சகாயஜோன்பிள்ளை



சேவியர் ரஜீவன் இருதயராஜ்



யூஜின் போல் ஜொனதன்

**இவர்கள் மூவரும் எதிர்வரும் செப்டம்பர் ஐந்தாம் திகதி திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப் படவுள்ளனர். பணிவாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள புதிய குருக்களுக்கு தொண்டன் தனது வாழ்த்துக்ளைத் தெரிவித்துக்கொள்கின்றான்; இறை ஆசீர் நிறைய இறைஞ்சுகின்றான்.**

# மட்டக்களப்புப் பிரதேசத்தில் பாஸ்கா நாடகங்கள்



ஸ்ரான்லி பிரபாகரன் B.A.

இலங்கையில் ஐரோப்பியரின் வருகையுடன் கிறிஸ்தவ மதம் பரவியது. இந்த வகையில் இலங்கையில் உள்ளிட்ட அன்னிய மதமான கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்ததே பாஸ்காக் காட்சிகளாகும். கிறிஸ்தவர்கள் இலங்கையின் நாடக மரபில் பல தாக்கத்தைக் கொணர்ந்தனர். இலங்கையின் நாடக மரபின் 'முகம்' எனக் கொள்ளப்படும் நாட்டுக் கூத்துக்களில் கிறிஸ்தவர்களின் உட்புகுதல் இடம் பெற்றுள்ளது. இவர்கள் ஆரம்பத்தில் இருந்த இலங்கைக் கூத்து மரபில் இருந்த வட்டக்களரி முறையை மாற்றி அமைக்கின்றனர். மேலும், பல நவீன முறைகளைப் புகுத் துகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் இன்று வரை நீடித்துக் கொண்டுள்ளது.

கத்தோலிக்கரான போர்த்துக்கீசர் இலங்கையை ஆண்ட காலத்திலே ஸ்பானிய நாடக வரலாறு உச்ச நிலையில் இருந்தது. எனவே இவ்வாறு சிறந்த நாடகப் பாரம்பரியம் மிக்க நாட்டில் இருந்து வந்த போர்த்துக்கேயர் தம் நாடக மரபை இங்குள்ள நாடக மரபுடன் இணைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை யாழ்ப்பாணத்தில் இருந்த தென்மோடிக் கூத்தை கத்தோலிக்கர் தமக்குரிமையாக்கிக் கொண்டனர். மன்னாரில் யாழ்ப்பாணப் பாங்கு, மாதோட்டப் பாங்கு ஆகிய இரு மரபுகளையும் வளர்த்தெடுத்தனர். யாழ்ப்பாணத்துக்கு வெளியே முல்லைத் தீவு மன்னார்ப்பகுதிக்கு மாத்திரமின்றி சிலாபத்திற்கும் கூட தென்மோடியைப் பரப்பினர். மரபு மரபாக ஈழத்து மக்கள் மத்தியில் இருந்த கூத்துக்களை எடுத்து திருத்தியும் புதுமைகளைப் புகுத்தியும் அமைத்தனர். முன்னர் இலங்கைத் தமிழர் மத்தியில் பாரம்பரியமாக இருந்த கூத்துக்கள் இந்து மதம் சார்ந்த புராண இதிகாசக் கதைகளைத் தமது கதைக் கருக்களாகக் கொண்டிருந்தன. இதே போன்று புதுமையாக்கப்பட்ட கிறிஸ்தவக் கூத்துக்களும் நாடகங்களும் வேதாகமக் கதைகளைத் தம் கதைக் கருவாகக் கொண்டு இருந்தன. முன்னர் இலங்கையில் இருந்த ஆட்டம் கடினமாகையாலும் அதைத் தவிர்த்துக் கொள்ளல் நாகரீகமாகையாலும் அவற்றையும் தவிர்த்தனர் . இவை நாடகத் தன்மைக்கு இட்டுச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. தொங்குதிரைகள், ஆசனங்கள் என்பனவும் மேடையிலே கொணரப்பட்டன. இந்த வகையில் ஈழத்துக் கூத்துக்களின் கதைக் கருவில் மாத்திரமின்றி உருவத்திலும் மாற்றங்களைக் கொண்டு வந்ததுள்ளமையை அவதானிக்கலாம்.

மேலும் வாசாப்பு, சபா, டிறாமா என்பனவும் கிறிஸ்தவரின் வருகையுடன் இலங்கையில் புகுந்து கொண்ட புதிய நாடக வடிவங்களாகும். வாசகப்பாவான வாசாப்பை சமயப் பிரச்சாரம் கருதிக் கையாண்டனர். மேலும் 20ம் நூற்றாண்டில் இவ்வசன நாடகங்கள் இலங்கையில் செல்வாக்குச் செலுத்தின. இவ்வசன நாடகங்களிலும் கிறிஸ்தவர்களின் நாடகச் செல்வாக்கு இடம் பெற்றது. இந்த வகையில் கிறிஸ்தவ நாடகங்களில் மக்கள் மத்தியில் நிலைத்து நிற்கும் காரணங்களுள் ஒன்றாக கத்தோலிக்க நாடகங்களில் எல்லாச் சுவையையும் விட அவலச் சுவையே மேலோங்கி நிற்பதைக் குறிப்பிடலாம். இதன் காரணமாக இக் கிறிஸ்தவக் கதைக் கருவைக் கொண்ட நாடகங்களில் இலக்கியச் சுவையும் சிறந்து நிற்கும். அத்துடன் மக்கள் தம் துன்பங்களை மறக்கும் வகையிலேயே இந்த நாடகங்களை இரசித்தமையும் இதற்கு இன்னுமொரு காரணமாக அமைந்துள்ளது.

இப் படிமுறை வளர்ச்சியில் உள்ளிட்டதாகவே பாஸ்காக் காட்சிகள் அமைகின்றன. இதன் பரிமானத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். இப் பாஸ்காக் காட்சிகள் இந்துக்கள் மத்தியிலிருந்த சூரன் போரை ஒத்தனவாகவே அமைந்துள்ளன. கூத்தில் முழுமையாகப் பல மாற்றங்களைக் கொணர்ந்த கிறிஸ்தவ மதமானது நாடகத்துடன் இணைத்துப் பார்க்கக் கூடிய வகையில் இயேசுவின் பாடுகளின் காட்சியையும் வழிபாட்டுடன் இணைத்துப் பாஸ்காக் காட்சியாக்கியது. ஆலயவளவு, இதன் மேடை, பார்வையாளர் இருக்கும் இடமாகவும் அமைகிறது. பாஸ்காக் காட்சிகளின் ஆரம்ப வடிவத்தில் மரத்திலான உருவங்களே பாத்திரங்களாக அமைவதினால் இது பாவைக் கூத்தை ஒத்ததாக அமைகிறது.

இத்தகைய பாஸ்காக் காட்சிகள் பெரிய கத்தோலிக்கக் கோயில்களில் இடம் பெறுகின்றன. இக் கட்டுரையில் மட்டக்களப்புப் பகுதியில் நடைபெற்ற பாஸ்காக் காட்சிகளே இங்கு ஆராயப்படுகிறது.

எனினும் அதன் தோற்றம் யாரால் இடம் பெற்றது என்றோ, அது இவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்றே குறிப்பிட்டுக் கூற முடியவில்லை. ஏனெனில் இவை வழிபாட்டு அம்சமாகக் கைக் கொள்ளப்பட்டமையினாலும் இதன் தரவுகளை எவரும் சேகரித்து வைக்காமையினாலும் வரலாற்று ரீதியாகக் தேதி இடம் என்பவற்றைக் குறிப்பிட முடியவில்லை. மட்டக்களப்புப் பகுதியில் சொறிக்கல்முனை சாந்தக்குருசு தேவாலயம், கல்முனை திரு இருதயநாதர் ஆலயம், புளியந்தீவு புனித மரியாள் பேராலயம், புனித அந்தோனியார் ஆலயம், கல்லடி டச்பார், புனித இன்னாசியார் தேவாலயம், புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயம், இருதயபுரம் இருதயநாதர் ஆலயம், தன்னாமுனை புனித சூசையப்பர் தேவாலயம் முதலான இடங்களில் இடம் பெற்ற பாஸ்காக் காட்சிகளை ஒருங்கியைத்து அவற்றில் காணப்பட்ட பொதுமையாக்கப்பட்ட பண்புகளையே இக்கட்டுரை கொண்டுள்ளது. இன்றைக்கு ஏறத்தாழ 50 அண்டு காலத்துக்குள் இடம் பெற்ற பாஸ்காக் காட்சிகள் பற்றிய விடயங்களை இவற்றில் ஈடுபட்டவர்களிடம் சென்று பெற்றும் அனுபவத்தை வைத்தும் அவற்றைக் கலையம்சங்களான நாடகம், சிற்பம், இசை முதலானவற்றுடன் இணைந்து விளக்க முயன்றுள்ளேன்.

மேலும் இதில் குறிப்பிட வேண்டிய விடயம் இப்பாஸ்கா காட்சிகளில் இடம் பெற்றுள்ள நாடக அம்சங்களுள் ஒன்றான கதாசிஸ் முறையாகும். மக்கள் உளத்தாக்கங்களுடனும் வாழ்க்கைத் தேவையுடனும் இறைவனை நோக்கி வருகையில் மக்களின் மனதைத் திருப்திப்படுத்தும் வகையில் துன்பியல் நாடகமொன்று நிகழ்த்தப்படுகிறது. துயரங்களோடும் பிரச்சினைகளோடும் வரும் மக்களின் உணர்வுகள் மேலெடுக்கப்பட்டு இயேவுவின் துன்பப் பாடுகள் காண்பிக்கப்படுவதனால் அவை உச்ச நிலை அடைந்து, இயேசு உயிர் நீத்த சம்பவம் காண்பிக்கப்படுகையில் அவ்வுணர்வு வெடித்துப் பின் மக்கள் தமக்காக இறைவன் உயிர்த்தார், தமக்காக இறைவன் இருக்கிறான் என்னும் மனத்துணர்வுடன் வீடு செல்கின்றனர். இதே பண்பை நாம் நாடகங்களிலும் காணலாம்.

## நோக்கம்

கத்தோலிக்க மதம் ஆரம்ப காலத்தில் இருந்தே தன் மதம் பரப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இதே பண்பினை தமிழ் நாட்டில் புகுத்த அன்னிய மதங்களான பௌத்த, சமண மதங்கள் மேற்கொண்டன. சங்க மருவிய காலத்தில் சாதாரண மக்களிடம் இவை தம் தம் செல்வாக்கைச் செலுத்திய மையைக் காணலாம். இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கத்தோலிக்கர்களின் பங்கை நோக்குகின்ற வேளையிலேயும் ஆரம்பத்திலேயே இலக்கண இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு தம்பணியைச் செய்தவர்கள் பின்னர் மக்களைக் கவரும் பொருட்டு பொது மக்கள் சார்பான இலக்கியங்களில் கவனம் செலுத்தினர். இதே போன்று மக்களுக்கு இலகுவில் தம் செய்திகளைக் கொடுக்கும் வண்ணம் முன்னர் இருந்த கூத்துக் கதைக் கருத்துக்களையும், அதன் வடிவத்தையும் பெருமளவு மாற்றியமைத்தனர், இதனை முன்னர் விளக்கமாகக் கண்டோம். இதே பண்பையே நாம் பாஸ்காக் காட்சிகளிலேயும் காணக்கூடியதாகவுள்ளது. தம்மதக் கருத்துக்களுக்கு அடிப்படையாக இருக்கும் இயேசுவின் வாழ்க்கையை அதிகமாக பாமரமக்களாக இருந்த இலங்கை மக்களுக்கு இலகுவான வழியில் புகுத்த முனைந்துள்ளனர். இதன் ஒரு வடிவமே இப்பாஸ்காக் காட்சிகளாகும்.

மேலும் இப்பாஸ்காக் காட்சிகளை மதம் வேறு, கலை வேறு எனப்பிரித்துக் காண முடியாத வகையில் மத அனுஷ்டானங்களும் கலை நிகழ்ச்சிகளும் ஒன்றினைந்தனவாகவே நடை பெறுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மரத்தால் செதுக்கப்பட்ட கடவுள் உருவங்கள் உண்மைக் கடவுள் என எண்ணப்படுதல், இயேசுக்கிறிஸ்து மரித்த பின்னர் குருவானவர் மேடையில் நின்று மறையுரை ஆற்றுதல், மரித்த இயேசுவின் உடலைப் பல மேரை மரியாதைகளுடன் ஊர்வலமாகக் கொண்டு செல்லுதல் என்பன இவற்றுக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ள முடியும். இத்தகைய கலையம்சம் கலந்த வழிபாட்டின் நோக்கத்தை நோக்குகையில் மக்களை வழிபாட்டில் ஈடுபடுத்தவென பீடத்தில் நல்ல நோக்குடன் ஆட்டம், நாடகம் என்பனவும் இடம் பெறுகின்றமை இங்கு நினைவு கூரத்தக்கது, அத்துடன் தமிழர் மத்தியில், இந்துக் கோயில்களிலே மக்களை வழிபாடுகளில் ஈடுபடுத்தும் பொருட்டு தேவாரம் என்பனவும், தெய்வ உணர்வை உருவாக்கும் பொருட்டுத் தாலாட்டுப் பாடல்களும் பாடப்படுகின்றமை இதனுடன் இணைத்து நோக்கத்தக்க ஒன்றாகும்.

மேலும் சிற்பங்கள் இப்பாஸ்காக் காட்சிகளில் பயன்படுத்தப்படும். அவை கடவுளின் குறியீடாகவே அமைகின்றமையைக் காண்கின்றோம். சிலுவையில் அறையப்படும் இயேசுவின் திருச்சுரூபம் இரத்தக் காயங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் இயேசுவின் பாடுகளை இலகுவில் விளங்கிக் கொள்ளும் வகையில் இவ்வாறு அமைக்கப்பட்டமை

இந்து மதங்களில் சிற்பங்களுடன் இணைந்து நோக்கத்தக்கது. இறைவனின் அருட்செயலையும். உருவச் சிறப்பினையும் காட்டும் வண்ணம் புராண இதிகாசக் கதைகளில் இருந்து பெறப்பட்டுச் செய்யப்பட்டமையைக் காணலாம். இங்கேயும் இயேசுவின் வரலாற்றைக் கூறும் நோக்குடன். அல்லது அவரது உருவத்தைக் காட்டி மக்களை கிறிஸ்தவ நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் செய்யும் நோக்குடன் இவை அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். அத்துடன் இதன் கதைக் கருக்கள் பரிசுத்த வேதாகமத்தில் இருந்து எடுக்கப்பட்டமையைக் காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு தம் போதனை முறையை இலகுபடுத்திக் கொள்ளும் வகையில் அமைந்த இந்த நடவடிக்கைகளுடன் இணைந்துள்ளதாகவே மதம் பரப்பும் நோக்கங்களும் காணப்படுகின்றன. தமது மதத்தை ஸ்திரப்படுத்தும் வகையில் மக்கள் மனதில் தம் போதனைகளை ஆழமாகப் பதிய வைக்கும் ஊடகமாகவும் இப்பாஸ்காக் காட்சிகள் அமைந்துள்ள மையைக் காணக் கூடியதாகவுள்ளது. மக்கள் கண்களால் கண்டு கொள்ளும் வகையில் இக் காட்சிகளை அமைத்ததுடன், அவர்களது உள்ளத்தைத் தொடும் வகையிலும், உணர்ச்சியைத் தூண்டும் வகையிலும் அவர்களது மத விசுவாசத்தை உறுதிப்படுத்தும் வகையிலும் இக்காட்சிகள் அமைந்துள்ளன.

'வியாகுல பிரசங்கம்'' என்னும் பசான் புத்தகத்தின் முன்னுரையில் அருட்திரு S.A மைக்கல்சாமி o.m . i (v.g) அவர்கள் இப்பிரசங்கத்தின் நோக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் 'கிறிஸ்தவர்களுக்கு பக்தியையும் பாவத்தில் வெறுப்பையும் வருவித் தற்குரியதொரு மேலான கருவியேயாம்' எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே எழுத்து வடிவமான இப்பசான் புத்தகத்தின் காட்சி வடிவமான பாஸ்காக் காட்சிகளும் இதே நோக்கத்துடன் காட்டப்பட்டுள்ளமையைக் காணலாம்.

மேலும் இப்பாஸ்காக் காட்சிகளின் நோக்கத்தை ஆராய்கின்ற வேளையில். இவை மக்களின் வழிபாட்டு அம்சமாக இடம் பெற்றமையினால், நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்திருந்தன. மக்கள் தம் முக்கிய கடவுள் வணக்கத்தைக் கல்லறைத் திருவுருவத்திற்கு வழங்கினர். ஒரு வருடம் பங்கில் பாஸ்காக் காட்சிகள் நடாத்தாவிட்டால், கொள்ளை நோயும், பேரழிவும் தம்மை வந்து சேரும் என நம்பினர். அத்துடன் இப்பாஸ்கா நிகழ்ச்சிகளின்போது கல்லறைத் திருவுருவம் கவனமாகக் கையாளப்படுவதும். அதன் மேல் கை வைத்துப் பணி செய்வோர் உபவாசம் இருந்து தம்மைத் தூய்மையாக்கிக் கொள்வதும் கலையம்சத்துடன் இணைந்த வழிபாட்டம்சம் என்பன இங்கே கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். ஒருமுறை சொறிக்கல்முனைப் பகுதி மக்கள் தமது வயல்கள் மழை இல்லாமல் வாடுவதைக் கண்டு கல்லறைக் திருவுருவத்தைச் சிலுவையில் அறைந்து பூமியைப் பாக்கும் வண்ணம் மாட்டு வண்டியில் இணைத்துக் கட்டி ஊரைச் சுற்றி வந்துள்ளனர். மேலும் அங்கே கூடிய வரைக்கும் எல்லாக் காட்சிளும் காண்பிக்கப்படாவிட்டாலும் சிலுவையில் அறைந்து இறக்கும் சடங்காவது நடைபெறும். இதே தன்மை வழமையாகக் பாஸ்காக் காட்சிகள் காண்பிக்கப்படும் ஏனைய ஆலயங்களிலேயும் காணப்படுகின்றது. எனவே மத அறிவை வளர்க்கவும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாஸ்கா காட்சிகள் எவ்வாறு வித்தியாசமான நோக்கத்துடன் மட்டக்களப்புப் பகுதியிலேயும் பின்பற்றப்படுகின்றது என்பதனை இவற்றில் இருந்து நாம் விளங்கிக் கொள்ள முடியும்.

இவ்வாறு இப்பாஸ்காக் காட்சிகள் பல்வேறு நோக்கங்களுடன் இடம் பெறுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மக்களைப் பக்தி முயற்சியில் ஈடுபடுத்துதல், மரபு வழியாகக் காண்பிக்கப்பட்ட இயேசுவின் பாடுகளின் காட்சியைப் பேணுதல், இயற்கை அழிவிடம் இருந்து தப்பிக் கொள்ள ஓர் ஆதரவைத் தேடுதல், வழிபாட்டில் ஈடுபடுதல் முதலான பல்வேறு அம்சங்களாக அவை அமைகின்றன. மேடை அமைத்தல், காட்சி காண்பித்தல், என்றோ நடைபெற்ற சம்பவத்தை மீளவும் செய்து காட்டுதல், அதற்கு சிற்பம் ஓவியம், இசை முதலான கலையம்சங்களைப் பயன்படுத்துதல் என்பவற்றைக் கொண்டே இந்த நோக்கங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

## வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணிப்பொறுப்பாளர் இலங்கை வருகை

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலியில் தமிழ்ப்பணிக்குப் பொறுப்பாகவிருக்கும் அருள் தந்தை A. சிங்காரயர் இலங்கை நேயர்களைச் சந்திப்பதற்காக வருகை தரவுள்ளார். ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் வருகை தரவுள்ள தமிழ்ப்பணிப் பொறுப்பாளருடன் வெரித்தாஸ் வானொலியின் முகாமையாளர் அருள்தந்தை கார்லோஸ் லாரியோசா, நிகழ்ச்சிப் பணிப்பாளர் மொன்சிஞ்ஞோ பியற்றோ குயன் வான்ரை, ஆசிய அயர் பேரவையின் பிரதம செயலாளர் அருள்தந்தை பிரான்ஸ் ஜோசவ் ஈலர்ஸ் ஆகியோரும் வருகைதரவுள்ளனர். மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் நேயர்களின் ஒன்று கூடல்களில் இவர்கள் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

# கல்வித்துறையில் தொடர்பு சாதனங்கள்

**உலகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு மட்டக் களப்பு மாவட்ட மாணவர்களுக்கிடையே தொண்டன் சஞ்சிகை நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெறும் கட்டுரை.**



இ. நிரூபன்
10D - மட். புனித மிக்கேல் கல்லூரி,

வாழ்க்கை எனும் வளமிக்க கொடைகொடுத்த வள்ளலாகிய இறைவன் அமைத்துத் தந்த புவியெனும் மேடையிலே வாழ்வதாக நடிக்கவந்திருக்கும் கதா பாத்திரங்களுள் சிலவாகிய நாம், விஞ்ஞானம் எனும் ஆயுதங்கொண்டு செதுக்கிய இரு நிலவாக கல்வியை யும் தொடர்புசாதனத்தையும் குறிப்பிடலாம். கல்வி யானது ஆதியந்தம் அற்றது. இன்று கல்வியானது இல்லை எனின் எவ்விதமான புதுமைகளும் நடை பெற்றிராது. அவ்வாறு நடைபெற்றாலும் அதனை விளங் கிக் கொள்ளும் பக்குவம் யாருக்கும் ஏற்பட்டிராது.

கல்வித்துறையானது மனிதனது கல்விக்குக் களமாக இருக்கும் மூளையைப் பட்டை தீட்டியபின் பிரகா சிக்கும் ஒரு மாணிக்கமாக ஆக்குகிறது. ஆடையற்றவன் அரை மனிதனாக இருக்கலாம். ஆனால் ஆடையி ருந்தும் கல்வியறிவு இல்லாதவன் கூட அரைமனிதனே. கல்வியானது கற்கப்பட வேண்டிய ஒரு கவிதை யாகும். வேப்பம் வித்தை உண்ணும் போது அது மிகுந்தகசப்பாக இருக்கும்.ஆனால் உண்டபின் அதனால் பெறும் பயன்களோ சொல்லில் அடங்காதவை. இவ்வாறேதான் கல்வியும். இதைத்தான் நபி(ஸல்) அவர்கள் "சீனாவிற்குச் சென்றாலும் சீர் கல்வி பெறு" என உரைத்தார். இதுபோன்ற பல பழ மொழிகளும் காணப்படுகின்றன.

தொடர்புசாதனத்துறையில் அன்றிலிருந்து இன்றுவரை நிலைத்துள்ள துறைகளாக மூன்று துறை களைக்கூறலாம். அவைகளில் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை ஆகியவற்றைச் சிறப்பாகக் குறிப் பிடலாம். சிற்றருவியான சமுதாயம் தன்னில் அரசியல் போன்ற பல சாக்கடைகள் கொட்டப்படுவது குத்திக்காட் டப்படுவது இத்துறைகளாலேயாகும். இன்றைய விஞ் ஞான உலகில் நாகரீகப் போர்வையில் கண்டறியப்பட்ட பல சிறந்த கருவிகளும் காணப்படுகின்றன.

உதாரணமாக கணனி (Computer), சர்வதேச வலைப்பின்னல் (Internet), தொலை நகல் (fax), மின்னஞ்சல் (E-mail), ஆகிய சிலவற்றைக் குறிப் பிடலாம். இத்துறைகள் பெரும்பணியை ஆற்றுவன வாக இருந் தாலும் இவை ஏழைமக்களைச் சென்றடை வது இல்லை. எனவேஇத்துறைகள் ஏழைமக்களின் பார்வை யில் தொடர்புசாதனத்துறைக்குச் செய்யப்பட்ட பகட் டான அலங்காரங்களே என சிற்சில நூல்களில் குறிப்பி டப்பட்டுள்ளன.

கால ஏடுகளில் பழைய கடந்தகாலங்களை இரை மீட்ட பொழுது கல்வியானது மங் கிய நிலவாகவே காணப்படு கின்றது. இதற்கான காரணங் களை அறிய முற்படும் போது அன்றைய நிலையில் உருவான ஜமீன் வர்க்கங்களின் செல்வாக்கும் அடிமை களின் அடிபணிந்த போக்குமே என விடைகிடைக் கின்றது. ஜமீன்களை எடுத்துக் கொண்டால் அவர்களது பரம்பரை மூலம் வந்த சொத்துக்களைப் பரிபாலிப் பதுவே பெரும் பிரச்சனையாக அமைந்தது. அடிமை மக்களிற் சிலர் கல்வியைப் பெறுவதில் முனைப்புக் காட்டினாலும் அதனைப் பொறுத்துக் கொள்ளாத ஜமீன்வர்க்கம் அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்தன. அன்று அவர்களது நிலையில்

*"கல்லாதான் சொற்கா முறுதல் முலை யிரண்டும்*
*இல்லாதாள் பெண்காமுற்றற்று"*

எனும் வள்ளுவன் கூற்றுக்கூட விழ லுக்கிறைத்த நீர்போல் ஆனது என்றே கூற வேண்டும்.

இவ்வாறான எமது நாட்டு நிலவரங்களை விடுத்து மேலைநாடுகளைச் சற்றுத் தூசு தட்டினோ மானால் கொன்ஸ்தாந்து நோபிள் துருக்கியர் வசமான பின்னர் கீழைத்தேய வர்த்தகத்திற்கு கடல் மார்க்கம் கண்டறியப்பட்டது. இதனை பயன்படுத்திய மேலைத் தேயர் கீழைத்தேயத்தில் தங்கள் வியாபாரத்தை நிலைநாட்ட நாடுகளைக் கைப்பற்ற ஆரம்பித்தனர். இதனால் அவர்களும் அவர்களது நாட்டுமக்களும் படைவீரர்களாயினர். இதனால் அவர்களது கல்வித்துறை மிகவும் மேசமாகப் பாதிப்படைந்தது.

இந்த நிலையில் தொடர்புசாதனங்களை எடுத்து மீட்டபோது அவைகளின் பலம் கூட குன்றியே காணப்பட்டது. இதற்கான காரணங்களை ஆராய்ந்த போது இரண்டு காரணங்கள் புலப்பட்டன. ஒன்று தொடர்பு சாதனங்களில் நவீனத்துவம் புகுத்தப் படாமையும், மற்றையது அவைகளைச் சுதந்திரமாக செயற்பட விடா



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மல் இடப்பட்ட பணம், படை போன்ற தடைகளுமே யாகும். அன்றைய நிலை, சூழ்நிலை என்பனவற்றை எடுத்து நோக்கினால் தொடர்பு சாதனங்களின் நிலை தர்மசங்கடமாகவே இருக்கின்றது. இதனால் தொடர்பு சாதனங்களால் மக்கள் மனங்கள் எனும் கரடுமுரடான பாதையில் ஓடி பலகிளைகளாகப் பிரிந்து மாணவப் பயிர்கட்கு நீருற்றிக் கல்விக் கடலில் சங்கமிக்க முடிய வில்லை. இதன் பிற்பட்ட காலங்களில் தொடர்பு சாதனங்களின் அவசியம் கல்வித்துறைக்குத் தேவைப் பட்டது.

தற்போது கல்வித்துறையானது நடைமுறைப் பார்வையிலே மிகப்பாரிய மறுமலர்ச்சி அடைந் துள்ளது என்றே கூறவேண்டும். இன்றைய அத்தியாவ சியத்தேவைகளின் வரிசையில் உணவு, உடை, உறை யுளிற்கு அடுத்தபடியாகக் கல்வி இடப்படுவதி லிருந்து கல்வித்துறையின் முன்னேற்றத்தை உணர முடி கின்றது. இன்று பற்பல சமூகத்தொண்டர்கள், பெரியார் கள், மேதைகள், மேதாவிகள் தோற்றப்பட்டு வருவ தற்கான பெருமையும் கல்வித்துறையையே சாரும். இதனைத்தான் ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன் வள்ளுவத்தந்தையவர்கள் உணர்ந்து

*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்*
*விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு*

என்று பொய்யாக மொழியாக விளக் கியுள்ளார்.

தொடர்புசாதனத்துறையானது உலகின் பார்வையிலே பல வழிகளிலும் முன்னேறிக் காணப் பட்டுள்ளது.இன்று சமூகத்தில் சிலர் செய்யும் அடாவடித் தனங்களைச் சுட்டிக்காட்டி அவர்களது கேள்விக் குறியான எதிர்காலத்திற்கு விடைதேடிக்கொடுப்பது தொடர்பு சாதனத்துறையேயாகும். அன்றைய காலத் தில் போடப்பட்டிருந்த தடைகள், சட்டம், தொடர்பு சாதனத் துறைக்குச் சாதகமாகவே மாறியுள்ளது. எனவே தொடர் புசாதனங்கள் கல்விக்கடலிலே கவலையின்றி சங்கமிக் கின்றன.

இன்றைய நிலையில் தொடர்பு சாதனங்களின் பங்கு கல்வித்துறைக்கு இன்றியமையாததாகவும், பக்கபலமாகவும் விளங்குகின்றது. இவையிரண்டும் இன்று ஒரு முழுநிலவாக ஒளிர்கின்றன. இன்றைய நிலையில் பத்திரிகைத்துறையை எடுத்து நோக்கினால் ஒரு சில பத்திரிகைகள் வியாபார நோக்கங்களிற்காக மாணவர்களை சீர் குலைக்கக்கூடிய விளம்பரங்களை யும் கட்டுரைகளையும் வெளியிடுகின்றன இவைதவிர மேலும் சில பத்திரிகைகள் கல்வியியல் சம்பந்தமான ஆக்கங்களையும், இதழ்களையும் வெளியிடுகின்றன. மேலும் சில பத்திரிகைகள் மாணவர்களிடையே போட்டி களை வைத்து அவர்களுடைய திறமைகளை ஊக்கு விக்கின்றன. இலைமறை காய்களாயுள்ள கலைஞர் களை இலைகளை நீக்கிக் காட்டும் பெரும் பங்கை வழங்குவது ஒரு மிகப் பெரிய சாதனையே ஆகும். பத்திரிகைத்துறையானது அணுவைப் போன்றது, மாணவர்களை ஆக்கவும் கூடியது. சமூகவிரோதிகளை அழிக்கவும் கூடியது.

பத்திரிகைத் துறை தவிர வெகுஜன ஊடகத் துறைகளை எடுத்து நோக்கினால் தொலைக்காட்சியின் பங்கும் வானொலியின் பங்கும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் தொலைக்காட்சி மாலைவேளையில் கல்வி சம்பந்தமான முழு நிகழ்ச்சிகளை வழங்குகின்றது. வானொலியானது தாங்கள் வழங்கும் நிகழ்ச்சிகளில் அறிவுசார் நிகழ்ச்சிகளையும் சேர்த்துவருகின்றது. வெளிநாட்டு வெகுஜன ஊடகங்களிற்கு நிகரான பணி யினை எமது நாட்டு ஊடகங்களும் வழங்குவது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் எமது நாட்டவர்கள் எதற்கும் சளைத்தவர்களல்லர் எனும் உண்மை புலப் படுகின்றது.

இவை தவிர நவீன தொழிநுட்ப சாதனங் களை எடுத்துக்கொண்டால் கணணித்துறையும், சர்வதேச வலைப்பின்னல் துறைகளும் அவர்களது முழுத்திறனையும் கல்வித்துறையின் மேல் காட்டு மேயானால் கல்வித்துறை வேரூன்றி விருட்சமாக வளர்ந்து விட்டிருக்கும். ஆனால் அவற்றின் திற்மைகள் ஆபாசப்படங்கள் மீதும் சினிமாத்துறையின் மீதும் இருப்பதனால் இவற்றைக் கண்டுபிடித்ததன் நோக்கம் முழுமையாக வெற்றிபெறவில்லை. எவையும் அள விற்கு மீறினால் நஞ்சாகவே முடியும் என்பதனை காலங்களே உணர்த்த வேண்டும்.

எனவே கல்வியெனும் கடல்தன்னை நீந்திக் கடக்க வரும் மாணவர்கட்கு படகுகளாக இருந்து கரைசேர்க்கும் சேவையினை தொடர்பு சாதனங்கள் செய்யவேண்டும் என்பதே எம்மைப் போன்ற பல மாணாக்கரின் அவாவாகும். எனவே தற்கால தொடர் புசாதனத்துறையிலுள்ள சிலரிற்காக இக்கூற்றை ஞாபகப்படுத்தலாம். அது

*கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக*

என்பது, அதாவது தாங்கள் கற்ற கல்வியைத் தம்மைப் போல் உள்ள மாணவரிற்கு உபயோகப் படுமாறு பயன்படுத்தவேண்டும் எனக் கூறி இறுதியாக எதிர்காலத்தில் கல்வித்துறைக்கு தொடர்பு சாதனங்கள் ஆற்றும் பங்கை மாணவர்களாகிய நாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துநிற்போம்.

# மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றம் கலை இலக்கியத்துறையில் ஒரு பாய்ச்சல்

C. P. ஹரிச்சந்திரன்

கலைவழி சமூகப்பணிபுரிந்து வடக்கையும் மேற்கையும், தெற்கையும், கிழக்கையும் கலைப்பாலத்தால் இணைத்து வருகின்றது திரு மறைக்கலாமன்றம். கடந்த 35 வருட காலமாக சமூகங் களுக்கிடையே கலைவழி புரிந்துணர்வை ஒற்று மையை ஏற்படுத்திவரும் திருமறைக்கலாமன்றம் கடந்தவருடம் ஜூலை மாதம் மட்டக்களப்பில் தனது செயற்பாட்டை ஆரம்பித்தது. போசகராகவும், ஆலோச கராகவும் செயல்பட்டு வருகிறார் அருட்பணி ஸ்ரீதரன் சில்வஸ்ரர் அவர்கள். இணைப்பாளராக வள்ளுவன் சுவாமி நாதனும் செயலாளராக சி.பி ஹரிச்சந்திரனும் செயலாற்றுகின்றார்கள்.

கடந்த ஒரு வருட காலத்தில் மட்டக்களப்பில் மன்றத்தின் செயற்பாடு களின் மீது ஒரு கண்ணோ ட்டம் செலுத்துவது பொரு த்தமானதாகவிருக்கும். மன்றம் ஆரம்பிக்கப்பட்டதும், முதல் நிகழ்ச்சியாக இடம்பெற்றது கொழும்பில் நடை பெற்ற தமிழ்விழாவாகும். தமிழ் மொழியின் நேற்றைய புகழை மட்டுமன்றி நாளைய போக்கினைப் பற்றியும் கனதியான கருத்துக்களை முன்வைக்கும் ஒரு மேடையாகவும் அது அமைந்திருந்தது.

அந்தத் தமிழ் விழா நிகழ்ச்சிகளில் முதல் நாள் நிகழ்ச்சிகள் கொழும்பு இராமக்கிருஷ்ணமிசன் மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பான வடமோடி நாட்டுக் கூத்தான 'நச்சுப் பொய்கை' மேடை ஏற்றப்பட்டது. வடமோடி நாட்டுக்கூத்தின் தனித்தன்மை கெட்டு விடாமல் மட்டக்களப்புப் பகுதி கூத்துப் பாரம் பரியத் திற்கமைய அண்ணாவியார் க. மயில்வாகனத்தின் ஒத்துழைப்போடு திருமதி சுபா சக்கரவர்த்தி யின் நெறியாள்கையில் இக்கூத்து அனைவரையும் பரவசப் படுத்தியது.

இரண்டாம் நாள் நிகழ்வுகளில் முக்கிய இடத்தைப் பெற்றது 'அசோகா' வார்த்தைகளற்ற நாடகம் .150ற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொண்ட இந்நாடகத்தில் மட்டக்களப்புக் கலைஞர்கள் நால்வர் பங்கு கொண்டனர்.

நூல் வெளியீட்டு நிகழ்வுகளையும் மன்றம் நடாத்தியிருக்கின்றது. திக்கவயல் தர்ம குலசிங்கம் அவர்களின் மொழிபெயர்ப்பு நூலான 'மார்க்சிசம்' நூலையும் கவிஞர் ஜவ்பர்கானின் 'மௌனதேசம்' கவிதை நூலையும் வெளியிட்டு இலக்கிய நெஞ்சங் களின் மனங்களிலும் இடம் பிடித்துவிட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையில் தீபாவளி, புதுவருட தினங்களில் இடம் பெற்ற விசேட நேரடி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளின்போது மன்றக் கலைஞர்கள் நேரடியாக பங்கு கொண்டு சிறப்பித்து பரந்த அளவில் பாராட்டையும் பெற்றார்கள்.



அத்தோடு ரூபவா ஹினி கூட்டுத்தாபனத்தின் நத்தார் விசேட நிகழ்ச்சி களில் எமது கலைஞர்கள் ஒளிப்பதிவுக்காக நேரடியா கச் சென்று பங்குகொண்ட 'நத்தார் நாதங்கள்' யேசு பிறப்பு கீதங்கள் நிகழ்ச்சி அனைவரது பாராட்டையும் பெற்றதாகும்.

கொழும்பு திரு மறைக்கலைமன்ற தவக் கால ஆற்றுகை நிகழ்வாக 'அமைதிக்களம்' மேடை ஏற மட்டக்களப்பில் களம் அமைத்துக் கொடுத்தோம். இவ் வாண்டின் சமாதான நிகழ்வான கலைப்பாலம் 2002 கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. 'நாம் ஒரே குடும்பம்' 'we are one Family' என்ற மகுடத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் நாட்டில் உள்ள 11 திருமறைக் கலா மன்றக் கலைஞர்களும் பங்குகொண்ட பல்லினக் கலை ஞர்களின் இணைப்பில் உருவான 'தர்சனா' வார்த் தைகளற்ற நாடகம் நடைபெற்றது. இதில் எமது மட்டக்களப்புக் கலைஞர்கள் 15 பேர் பங்குகொண்டனர்.

புதிய உலகம் கத்தோலிக்க நிகழ்ச்சிக்காக விசேட நிகழ்ச்சி ஒலிப்பதிவிலும் மன்றக் கலைஞர்கள் பங்கு கொண்டார்கள்.



கலைமகள் விழாவை தேவநாயகம் கலை அரங்கில் நடத்தினோம். கவியரங்கம், நாட்டிய நாடகம் விலிலிசை, சிறுவர்களை வைத்து தயாரித்த 'யார் நல்ல நண்பன்' சிறுவர் நாடகம் ஊரான 'ஊர் இழந்தோம்' நாடகம் என்பன நிகழ்ச்சிக்கு சுவை சேர்த்தவையாகும்.



கடந்த வருடத்தில் நாம் நினைத்ததைவிட நிறையவே சாதித்திருக்கின்றோம். கலைத்துறையில் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள மட். திரு மறைக்கலாமன்றம் எதிர் காலத்தில் இன்னும் நிறையவே சாதிக்கும் என்பது திண்ணம்.

முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் காத்தான்குடி மண்ணில் இன ஐக்கிய மீலாத்விழாவை நடாத்தி இன ஐக்கியத்தை வளர்க்க உதவினோம் மூன்று சமயங்களின் தலைவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆசி வழங்கியது சிறப்பம்சம்.

ஜீலை 28ந் திகதியுடன் மட்டக்களப்பு திருமறைக்கலாமன்றம் ஒருவருட நிறைவை அடைந்திருக்கின்றது. இந்த ஒரு வருடத்திற்குள் நாடகப் பயிற்சிப்பட்டறை, கொழும்பில் அரங்கியல் பயிற்சிப் பட்டறை போன்றவற்றில் எமது இளம் கலைஞர்கள் பங்கு கொண்டு மேலதிக பயிற்சிகளைப் பெற்றுத் திரும்பியிருக்கின்றார்கள்.

## விசுவாசம் தேவை!

உயிர்த்தெழுந்து மனிதகுலத்தோடு நடைபோட்டு வரும் இயேசுக்கிறிஸ்து தன் உடலை, உயிர் கொடுக்க அப்ப வடிவில் வழங்கியிருக்கிறார் என்று கூறினார் திருத்தந்தை. கடந்த ஆனி 9ம் திகதி உலகெங்கும் சிறப்பிக்கப்பட்ட கிறிஸ்துவின் திருஉடல் திரு இரத்தப் பெருவிழாவைக் குறித்து மூவேளை ஜெப உரையின்போது மேலும் அவர் கூறுகையில் இதனைப் புரிந்துகொள்ள விசுவாசம் இன்றியமையாததாகிறது. இவ்விசுவாசமானது அன்புடன் கூடிய உயிர்த்துடிப்புடையதாக இருக்கவேண்டும். ஏனெனில் விசுவாசம் மற்றும் அன்பின் மூலமே இம்மறையுண்மையை புரிந்துகொள்ள முடியும் என்று கூறினார்.

# 'ஈழத்துப் புனைகதை வளர்ச்சியில் மட்டக்களப்பின் பங்களிப்பு'



திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

புனைகதை (Fiction) என்பது ஆங்கிலத்தினூடாக தமிழுக்கு அறிமுகமான நவீன இலக்கிய வடிவமாகும். உரைநடைசார்ந்த ஆக்க இலக்கியங்களான நாவலையும் (Novel), சிறுகதையையும் (Short Story) உள்ளடக்கும் இப்புனைகதை வடிவம் கி.பி. 19ம் நூற்றாண்டளவில் தோற்றம்பெற்றது.

தமிழின் முதல் நாவலாக மயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' (1879) குறிப்பிடப்படுகிறது. சிறுகதைகளாக 1920களில் மகாகவி பாரதியார் மொழிபெயர்த்த தாகூரின் கதைகளும், அ.மாதவையா, வ.வே.சு.ஐயர் போன்றோர் எழுதிய கதைகளும் கூறப்படுகின்றன. குறிப்பாக வ.வே.சு. ஐயரின் 'மங்கையர்கரசியின் காதல்' (1930) தமிழில் வெளிவந்த முதற்சிறுகதைத் தொகுப்பாகக் கருதப்படுகின்றது.

ஈழத்தில் இவ்விரு நவீன இலக்கியவடிவங்களினதும் தோற்றத்தை நோக்குமிடத்து நாவல், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், சிறுகதை - இருபதாம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களின் பின்பும் தோற்றம் பெற்றமையை அவதானிக்க முடியும். சித்திலெப்பை ('அஸன்பே கதை' - 1885), எஸ்.இன்னாசித்தம்பி ('ஊசோன்பாலந்தை கதை' - 1891), சி.வை.சின்னப்பிள்ளை ('வீரசிங்கன் அல்லது சன்மார்க்க ஜெயம்' - 1905, 'விஜயசீலம்' - 1916), தி.த. சரவணமுத்துப்பிள்ளை ('மோகனாங்கி' - 1895), மங்களநாயகம் தம்பையா ('நொருங்குண்ட இதயம்' - 1914) ஆகியோர் நாவல் இலக்கியத்திலும், இலங்கையர்கோன், சோ.சிவபாதசுந்தரம், சி.வைத்திலிங்கம், க.தி.சம்பந்தர் ஆகியோர் சிறுகதை இலக்கியத்திலும் முன்னோடி கர்த்தாக்களாகக் கருதப்படுகின்றனர். தொடர்ந்து இன்றுவரை புனைகதை இலக்கியம் புதிய பல பரிமாணங்களுடன் ஈழத்தில் வளர்ந்து வந்திருப்பதைக் காணலாம்.

இப்பின்னணியில் மட்டக்களப்பில் இவ்விரு இலக்கியங்களினதும் (நாவலும், சிறுகதையும்) தோற்றம், வளர்ச்சி, பங்களிப்பு என்பன குறித்துச் சுருக்கமாக நோக்குவதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

கட்டுரையை ஆரம்பிப்பதற்கு முன், முற்கூட்டியே தெரிவிக்கப்படவேண்டிய ஒருசில விடயங்களைக் கூறுவது பொருத்தமானது.

அ) வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே பாணமை பிரதேசம் வரையிலான பகுதியே இங்கு மட்டக்களப்பு என்றபதத்தினுள் வசதி கருதி அடக்கப்பட்டிருக்கின்றது.

ஆ) இலக்கிய கர்த்தாக்களின் பெயர்களைப் பட்டியலிடுவதிலும், விடய முதன்மைக்கு இடமளித்திருப்பதனால் பலரது பெயர் விடப்படுவதற்கு வாயப்புண்டு.

இ) இத்தகையநிலைமை தற்செயலானதேயன்றி, பிரக்ஞை பூர்வமானது அல்ல.

## நாவல்

மட்டக்களப்பில் எழுந்த முதல் நாவல் என அடையாளங்காணப்படுவது 'அரங்கநாயகி' (1934) ஆகும். மட்டக்களப்பு தாமரைக்கேணியில் வசித்த வே.ஏரம்பமூர்த்தி என்பவரால் எழுதப்பட்ட இந்நாவல் சேர்.உவால்டர் ஸ்கொட் (Sir walter scot) என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'கெனில்வேர்த்' (Kenil Worth) எனும் கதையின் தழுவலாகும். 'சன்மார்க்க வழி நடந்தோர் நல்வாழ்வையும், துன்மார்க்க வழி நடந்தோர் அழிவையும் பெறுவர்' என்பதே இந்நாவலின் கருப்பொருளாகும். இவ்விதம் போதனை முறையில் அமைந்த இந்நாவல், இதன் மூலம் தமிழின் ஆரம்பகால நாவல்களின் பொதுப்பண்பான அறப்போதனையை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதனை அவதானிக்கலாம்.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் நாவல் இலக்கிய வளர்ச்சியில் அடுத்து முக்கியம் பெறும் காலகட்டம், 1970களாகும். இக்காலப்பகுதியில் இப்பிரதேசப் பண்புகளைச் சித்தரிக்கும் நாவல்கள் எழுதப்பட்டன. இவற்றுள் எஸ்.ஸ்ரீ.ஜோன்ராஜனின் 'போடியார் மாப்பிள்ளை (1976) மற்றும் வை. அஹ்மத் எழுதிய 'புதிய தலைமுறைகள்' (1976) ஆகியன குறிப்பிடத்தக்கன. 'போடியார் மாப்பிள்ளை' கன்னங்குடாவைக் களமாகக் கொண்டது. படுவான்கரைப் பிரதேசத்தின் நிலவுடைமையாளர்களான போடியார்களதும், அவர்களின் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும்

முல்லைக்காரரதும் வாழ்க்கைமுறைகளை இந்நாவல் சித்தரிக்கின்றது.

'புதிய தலைமுறைகள்' வாழைச்சேனையைக் களமாகக் கொண்டது. உள்ளூர் அரசியல் தொடர்பாக முதிய தலைமுறையினருக்கும், இளைய தலை முறையினருக்கும் இடையே ஏற்படுகின்ற போட்டியே கதையின் கருவாகும். மீன்பிடித் தொழிலாளர்களின் போராட்டமும் இதனூடே விளக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்புப் பிரதேச முஸ்லிம் மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு நாவல் எழுதியோருள் ஜுனைதா ஷெரீப் (கே.எம்.எம்.ஷெரீப்) முக்கியமானவர். சாணைக்கூறை (1985), காட்டில் எறித்த நிலா, மூன்றாம் முறை (1986), ஒரு கிராமத்தின் துயில் கலைகிறது (1995) அவளுக்கும் ஓர் இதயம், ஒவ்வாமுனைக் காந்தங்கள் ஆகிய நாவல்கள் இவரால் எழுதப்பட்டவை. இவை சமூக நாவல்கள்.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் மரபுகளையும், நடப்பியல்புகளையும் பேச்சுவழக்கோடு வெளிப்படுத்தும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுள் செ. குணரெத்தினம் முதன்மையானவர். இவரது முதல்நாவல் 'தெய்வ தரிசனம்' (1988). இது வத்தைத்தொழில் நடாத்தி வாழ்ந்த ஒரு காலகட்டத்து மட்டக்களப்புக் கரையோர மீனவர்களது (அமிர்தகழி - முகத்துவாரம்) வாழ்க்கைப் போராட்டங்களைச் சித்தரிப்பது. முற்காலத்தில் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட பாரம்பரியத் தொழிலொன்றை மையமாக வைத்து எழுதப்பட்ட இக்கதை முக்கியத்துவம் வாயந்தது.

மேற்குறிப்பிட்ட கரையோரப்பகுதியினைக் களமாகக்கொண்டு நாவல் எழுதியோருள் ஓ.கே. குணநாதனும் கவனத்திற்குரியவர். இவரது 'ஊமை நெஞ்சின் சொந்தங்கள்' (1992) எனும் நாவல் மீனவர்களின் வாழ்க்கையைச் சித்தரிப்பது. 'விடியலின் ஓசைகள்', 'ஒரு துளி' (1999) ஆகிய நாவல்களும் எழுதியுள்ளார். 'ஒரு துளி' - நாவல் மலையக மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டது.

மட்டக்களப்பு நகரையும் அதனைச் சூழவுள்ள கிராமங்கள் சிலவற்றையும் களமாகக் கொண்டு மட்டக்களப்பு வழக்குத்தமிழில் வெளிவந்த நாவல்களுள் திமிலைத்துமிலனின் (எஸ்.கிருஷ்ணபிள்ளை) 'மஞ்சு நீ மழை முகில் அல்ல' (முதலாம் பாகம் : 1988, இரண்டாம் பாகம் : 1991) எனும் நாவல் குறிப்பிடத்தக்கது. 1957ன் பின்னர் குறிப்பாக 1960களில் ஈழத்தமிழினம் அடைந்த துயரம், மட்டக்களப்பில் நடந்த சில சம்பவங்கள், மட்டக்ளப்பு விமானத்தள ஆரம்ப நடவடிக்கைகள் முதலிய பதிவுகளும் கதையினூடாகக் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

மட்டக்களப்பின் ஆரையம்பதிக்கிராமத்தைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல் 'ஒரு தந்தையின் கதை' (1989) இந்நாவலின் ஆசிரியர் அன்புமணி (இரா.நாகலிங்கம்) ஆவார். நாட்டுக்கூத்து முறைமைகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், வாழ்க்கை முறைகள் முதலிய அம்சங்கள் இக்கதையினூடே வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன. அத்துடன் தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான அன்னியோன்னிய உறவும் நேர்த்தியாகச் சொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

போரதீவுப்பிரதேசத்தைக் களமாகக் கொண்டு சங்கரி (ச.பங்கேஸ்வரி) முன்னர் எழுதிய நாவல் 1998ல் நூலுருப்பெற்றுள்ளது. நாவலின் பெயர் 'ஒரு காவியத்தின் நாயகி'

கூட்டுறவுச்சங்கம் பற்றிய விபரங்களைத் தருவதாக அமைந்த நாவல் ரவிப்பிரியன் (ஏ.மு.ரவீந்திரன்) 'ஒரு வானவில் ரோஜாவாகிறது' (1989). மட்டக்களப்பில் நாவல் முயற்சியில் ஈடுபட்ட இன்னுமொருவர் திமிலை மகாலிங்கம் (எஸ். தங்கவேல்). இவரெழுதிய 'ஊஞ்சல்', 'நிலவுக்கு ஒருநாள் ஓய்வுண்டு' ஆகிய கதைகள் முறையே மித்திரனிலும், வீரகேசரியிலும் தொடர்கதையாக வெளிவந்தவை. சுயநலமற்ற - தூய்மையான நட்புக்கொண்ட நண்பர்கள் இருவரின் கதையாக அமையும் 'அவனுக்குத்தான் தெரியும்' என்ற நாவல் 1995ல் வெளிவந்தது.

ஒலுவில் அமுதன், அ.ஸ.அப்துஸ்ஸமது, ஆகியோரும் நாவல் துறையிலீடுபட்டோருள் குறிப்பிடத்தக்கவர்கள். ஒலுவில் அமுதனின் (ஆ.அலாவுதீன்) 'நாம் ஒன்று நினைக்க' (2000) 'கரையைத் தொடாத அலைகள்' (2002) ஆகியனவும் அ.ஸ.அப்துஸ்ஸமதின் 'தர்மங்களாகும் தவறுகள்' (1997) என்னும் நாவலும் குறிப்பிடத்தக்கவை.

இப்பிரதேசத்தவரால் துப்பறியும் மர்ம நாவல்கள் சிலவும் எழுதப்பட்டன. அந்தவகையில் அமைந்தனவாக அருள் செல்வநாயகம் எழுதிய 'மர்ம மாளிகை' (1973), நவம் (ஆறுமுகம்) எழுதிய 'நிழல் மனிதன்', ஜுனைதா ஷெரிப் எழுதிய 'அவன் ஒன்று நினைக்க' என்னும் நாவல்களைக் கூறலாம்.

பெண் நாவலாசிரியைகளுள் மண்டூர் அசோகா, ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் ஆகியோர் சிறப்பிடம் பெறுபவர்கள். இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை நிகழ்ச்சிகளாக்கி மட்டக்களப்பினைக் களமாகக்கொண்டு நாவலின் கதை அமைகின்றதாக மண்டூர் அசோகாவின் 'பாதை மாறிய பயணங்கள்' (1992) என்னும் நாவல் அமைகின்றது. வடபுலத்திலிருந்து தொழிலினிமித்தம் மட்டக்களப்பிற்கு வரும் இளைஞரின் பிரச்சினைகளும் கூறப்படுகின்றன.

ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் புகலிட இலக்கிய கர்த்தாக்களுள் குறிப்பிடத்தக்கவர். 'Kiss of Cobra' என்னும் ஆங்கில நாவலையும்', (1992) தில்லை ஆற்றங்கரையில் (1987) தேம்ஸ் நதிக்கரையில் (1992) பனிபெய்யும் இரவுகள் (1994), ஒரு கோடைவிடுமுறை (1982), 'உலகமெல்லாம் வியாபாரிகள்' (1987), 'வசந்தம் வந்து போய்விட்டது', அவனும் சில வருடங்களும்' (2000), ஆகிய தமிழ் நாவல்களையும் இவர் எழுதியுள்ளார். புகலிட அனுபவங்களையும், இனப்பிரச்சினையால் அல்லலுறும் தமிழ் மக்களின் அவலங்களையும் இவரது நாவல்கள் பதிவுகளாக் கியுள்ளன. அத்துடன் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களையும் கையாண்டுள்ளார்.

குறுநாவல் எழுதுவதிலும் சிலர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. செ.குணரெத்தினத்தின் 'துன்ப. அலைகள்', 'சொந்தம் எப்போதும் தொடர்கதை' (1990), ஆகியனவும் சுமதி அற்புதராஜாவின் 'புதிய பாதை' (1990), திமிலை மகாலிங்கத்தின் 'பொன் குஞ்சுகள்', 'பாதை மாறுகிறது' (1991) ஆகியனவும் நூலுருப் பெற்றுள்ளன.

## சிறுகதை

நாவல், குறுநாவல், முயற்சிகளைவிட சிறுகதைத்துறையில் மட்டக்களப்பு எழுத்தாளர்கள் கூடிய கவனம் செலுத்தியுள்ளமையை அவதானிக்கலாம். பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் பலர் எழுதியுள்ளனர். எழுதியும் வருகின்றனர். சிலரது கதைகளே தொகுப்புகளாக வெளிவந்துள்ளன.

மட்டக்களப்புப் பிரதேசச் சிறுகதை என்று நோக்குகின்றபோது மூத்த எழுத்தாளர்களுள் ஒருவராக எம் நினைவிற்கு வருபவர் பித்தன் (கே.எம்.எம்.ஷா) ஆவார். 1940களில் இவர் எழுதத் தொட்டங்கினாலும் 1995லேயே 'பித்தன் கதைகள்' என்ற பெயரில் தொகுப்பொன்று வெளிவந்தது. 'தமிழ்ச் சிறுகதை உலகில் முடிசூடா மன்னன்' எனப் போற்றப்படும் புதுமைப்பித்தனின் எழுத்துக்களால் ஆகர்ஷிகப்பட்ட பித்தன், தனது ஆக்கங்களிலும் அவரது போக்கைப் பின்பற்ற முனைந்தார். மட்டக்களப்பு வாழ் முஸ்லிம் சமூகத்தினரிடையே காணப்பட்ட பிரச்சினைகளை மாத்திரமல்லாது பொது சமூகநிலைமைகளையும் கதைகளிற் கையாண்டார். இவரது கதைகளுள் 'தாம்பத்தியம்', 'பாதிக் குழந்தை', 'நத்தார்ப்பண்டிகை', 'திருவிழா' முதலியன குறிப்பிடத்தக்கன.

செ.இராஜதுரையும், பித்தனும் சேர்ந்து 1940களில் 'லங்காமுரசு' என்ற பத்திரிகையை நடத்தினர். 1943ல் இப்பத்திரிகையிலேயே பித்தனின் முதற் சிறுகதையான 'இருள்' வெளிவந்தது. செ. இராசதுரை அருள் செல்வநாயகம், மருதூர்க் கொத்தன் போன்றோரும் இக்காலத்தில் எழுதினர். செ. இராசதுரையின் கதைகள் 'மிஸ் கனகம்' என்ற தொகுப்பாக வெளிவந்ததாகத் தெரிகின்றது.

மருதமுனைச் சூழலை சிறுகதைகளிற் கொணர்ந்து எழுதியோருள் மருதூர்க் கொத்தன் முதன்மையானவர். இவரது கதைகளுட்சில 'மருதூர்க் கொத்தன் கதைகள்' எனும் தொகுப்பாக (1985) வெளிவந்துள்ளன. ஓட்டமாவடிப் பிரதேச முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களையும், பொதுவான சமூகப் பிரச்சினைகளையும், பெண்களின் அவலங்களையும் எஸ்.எஸ்.எம். ஹனிபா சிறுகதைகளிற் கூறியுள்ளார். மக்கத்துச் சால்வை என்னும் இவரது தொகுப்பு 1992ல் வெளிவந்தது. மூத்த எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர். எஸ்.முத்துமீரான், மருதூர்க்கனி, மருதமுனை மஜீத், நயீமா சித்திக், நற்பிட்டிமுனை பளீல், எம்.எம். ஸாஹுல் ஹமது அ.ஸ. அப்குஸ்ஸமது போன்றோரும் சிறுகதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் எம். எம். ஸாகுல் ஹமீதின் 'இரு உருவங்கள்' சிறுகதைத் தெகுப்பு 1951லும் அ.ஸ. அப்துல் ஸமதின் 'எனக்கு வயது பதின் மூன்று' எனும் சிறுகதைத் தொகுப்பு 1977லும் வெளிவந்தன. மருதமுனை மஜீத்தின் சில சிறுகதைகள் 'பன்னீர் வாசம் பரவுகிறது' எனும் தொகுப்பாக வெளிவந்ததுள்ளது. ஒலுவில் அமுதனின் (ஆ.அலாவுதீன்) 'கலையாத மேகங்கள்' தொகுப்பு 1999ல் வெளிவந் தது. அண்ணல் எம்.ஏ.நுஃமான், ஏ.இக்பால் முதலி யோரும் முன்னர் சிறுகதைத் துறையில் ஈடுபட்ட வர்களே. வ.சிவசுப்பிரமணியம், ச.பங்கேஸ்வரி போன் றோரையும் இவ்வரிசையில் குறிப்பிடலாம்.

மட்டக்களப்பின் ஆரம்பகாலச் சிறுகதை வளர்ச்சியில் எஸ். பொன்னத்துரைக்கும் சிறப்பானதோர் இடமுண்டு. இவரது சிறுகதைகள் அடங்கிய இரு தொகுப்புகள் குறிப்பிடத்தக்கன. அவா, ஆண்மை என்பனவே அவை. புலம் பெயர்ந்து வாழும் இரண்டாவது தலைமுறையினரின் பண்பாட்டு மாற்றங்களையிட்டுக் கவலையுறும் அவர்களது பெற்றோரின் மனக்குமுறலாக அமையும் கதை 'Adieu' ஆகும்.

புலம் பெயர்ந்து வாழும் மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வமதீந்திரன், கல்லாறு சதீஷ், களுவாஞ்சிக்குடி யோகன் முதலியோரும் புகலிட அனுபவங்களையும் தாய்நாட்டு ஏக்கங்களையும் கதைகளாகத் தந்துள்ளனர்.

புகலிட அனுபவங்களையும், பெண்கள் பிரச்சினைகளையும் எழுதிய பெண் எழுத்தாளர்களுள் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்திற்குத் தனியிட

முண்டு. 'அம்மா என்றொரு பெண்', 'ஏக்கம்', 'அறை குறை அடிமைகள்', 'நாளைக்கு இன்னொருவன்' முதலிய சிறுகதைத்தொகுப்புகள் முக்கியமானவை. மட்டக்களப்புப் பெண் எழுத்தாளர்களுள் மண்டூர் அசோகாவும் குறிப்பிடத்தக்கவர். இவரது கதைகள் சில 'கொன்றைப் பூக்கள்' (1976), 'சிறகொடிந்த பறவைகள்' (1993) ஆகிய தொகுதிகளாக வெளிவந் துள்ளன.

மட்டக்களப்பு சிறுகதை எழுத்தாளர்களுள் அன்புமணி (இரா.நாகலிங்கம்) 'வாழ்க்கைச் சுவடுகள்', செ.குணரெத்தினம் 'விடிவுகள் அடிவானில்' '(1992), கண.மகேஸ்வரன் 'எல்லை வேம்பு' (1994), மட்டுநகர் முத்தழகு 'தாகமாக இருக்கிறேன்' (1995), ஆரையம் பதி ஆ. தங்கராசா 'யுகமொன்று உடைகிறது' (2001), வாகரைவாணன் 'எஸ்.அரியரெத்தினம்', 'அரசி உலக நாச்சியா' (1998), வெற்றிவேல் விநாயகமூர்த்தி 'பொன் னாச்சி பிறந்த மண்' (1998) ஆகியோரது படைப்புகளும் மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பெரும் பாலும் களமாகக் கொண்டவையே. இவர்களுட் பலர் மிக நீண்டகாலமாக எழுதிவரினும் தொகுப்புகள் அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

மொழியாற்றலை இலாவகமாகப் பயன் படுத்தி கலைத்துவச் செறிவுடன், மரபுகளை உடைத்துப் புதிய செல்நெறியை சிறுகதையிற் புகுத்தியோருள் உமாவரதராஜன் 'உள்மன யாத்திரை' - 1998, ஓட்டமாவடி அறபாத் 'நினைந்தழுதல்' - 1998, 'ஆண்மரம்' - 2001, திருக்கோவில் கவியுவன் 'வாழ்தல் என்பது' - 2000, திசேரா 'ச. தியாகசேகர்' ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள். ஈழத்தின் சமகால அரசியல் நிலைமைகளை யும், தமிழ்த்தேசிய வாதத்தின் முன்னெடுப்புகளையும், எதிர்விளைவுகளையும், பல்வேறு சமுகங்களும் எதிர் கொள்ளும் பிரச்சினைகளையும் இவர்களது கதை கள் பலவற்றிற் காணலாம்.

மலையாளத்திலிருந்து மொழிபெயர்ப்புக் கதைகளை எழுதியோருள் வீ. ஆனந்தன் முக்கியமான வர். தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கதைகளுள் ஒன்று 'இஸ்திரிகை' என்பது.

தொகுப்புகள் எதுவும் வெளியிடப்படா விடினும் மட்டக்களப்பில் பலர் எழுதிவந்துள்ளனர். தற்போதும் சிலர் எழுதுகின்றனர். நூத்சந்திரிகா, இந்திராணி, வேலூர் சகுந்தலா, மண்டூர் மீனா, ஆனந்தா, ஏ.ஜீ.இரா ஜேந்திரம், த. மலர்ச்செல்வன், எஸ்.விஜயலட்சுமி, அனுராதா.பா, மலர்வேந்தன் அவர்களுள் சிலர். மலர்வேந்தனின் கதைகளுள் 'நிறம்மாறியது', 'இனிஒரு விதி செய்வோம்', 'அவள் புயலானாள்', 'சாயாத மரங்கள்' முதலியன குறிப்பிடத்தக்கவை.

## மதிப்பீடு

தொகுத்து நோக்குமிடத்து, ஈழத்தின் ஏனைய தமிழ்ப்பிரதேசங்களிலிருந்து வேறுபட்டு தனித்து வமான வாழ்வியல் கூறுகளையும், வழக்கங்களை யும், மொழி வழக்கையும் பெற்றுள்ள மட்டக்களப்புப் பிரதேசம், இங்குள்ள தமிழ் எழுத்தாளர்கள் பலரால் தமிழுலகிற்கு அறிமுகமாகியுள்ளது. இங்கு ஒப்பீட்டளவில் வடபுலத்தை விட சற்றுப் பிந்திய காலகட்டத்தில் புனைகதை முயற்சி மேற் கொள்ளப் பட்டிருக்கலாம். அல்லது குறைவாகவும் இருக்கலாம். ஆயினும் பிரதேசரீதியான மண்வாசனையுள்ள எழுத் துக்களைப் புனைகதையூடாகத் தந்தமையாலும், பொதுவாக ஈழத்துக்கெனத் தனித்துவமாய் அமைந்த சில பிரச்சி னைகளை (இனமுரண் பாடுகள், யுத்தமும் விளைவும், போராட்டச்சூழல் முதலியன) மட்டக்களப்பு எழுத்தாளர் வெளிக் கொணர்ந்துள்ள வகையிலும், இப்பிரதேசத்துக் கேயுரிய சில பிரச்சினைகளைக் (தமிழ் - முஸ்லிம் உறவு, தமிழ் - சிங்கள உறவு, விவசாயிகளும் மீனவர் களும் எதிர்கொள்ளும் பிரச்சி னைகள் - பலமத இணைவும் முரண்பாடுகளும்,யுத்தத் தினால் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் இவை போல்வன) கருப்பொருளாக்கியமையிலும், எழுதப் பட்ட சமகால நிகழ்வுப் பதிவுகளாக வந்துள்ள வகை யிலும், பெண்ணிலைச் சிந்தனைகள் முன்னெடுக் கப்பட்ட முறைமையிலும் ஈழத்துப் புனைகதை வளர்ச் சியில் மட்டக்களப்புப் பிரதேசம் காத்திரமான பங்களிப் பினைச் செய்து வருகின்றமையை அண்மை க்கால அவதானிப்பின் மூலம் அறியக்கூடியதாயுள்ளது.

இத்தகைய வளர்ச்சிக்கு மட்டக்களப்பில் வெளிவரும் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் கணி சமான பங்களிப்பினைச் செய்து வருகின்றனமையை யும் குறிப்பிடவேண்டும். இந்த வகையில் மட்டக்களப்பு எழுத்தாளர் பலருக்குக் களம் அமைத்த / அமைத்துள்ள தாரகை, உதயம், தரிசனம், போது, பெண், கிழக் கொளி, தொண்டன், முதலிய சஞ்சிகைகளும் விடி வானம், தினக்கதிர் போன்ற பத்திரிகைகளும் குறிப்பிடத் தக்கவை.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மறைக்கல்விப்பணி

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமா வட்டத்தில் மறைக்கல்வி நடுநிலையமானது மட்டக் களப்பு நகரில் அமைந்துள்ளது. இந்நிலையம் மறைக் கல்வி, திருவிவிலிய, திருவழிபாட்டுப் பணியை மைய மாகக் கொண்டு இயங்கி வருகின்றது. மட்டக்களப்பு நடுநிலையப் பணியை விஸ்தரிப்பதற்கும், இலகுவாக்கு வதற்கும் திருகோணமலை, கல்முனை ஆகிய இடங் களில் இரண்டுகிளை மறைக்கல்வி நிலையங்கள் உள்ளன.



## இல்றைத் தூதுவர்கள்:-

மறைக்கல்வி நடு நிலையமானது மறைக் கல்விப் பணியைப் பங்குத் தளங்களில் செயற்படுத்த இல் லறத் தூதுவர்களைக் கொண் டுள்ளது ஒரு சிறப்பாகும். முழு மறைமாவட்டத்திலும் 14 இல்லறத் தூதுவர்கள் (போத கர்கள்) பணிபுரிகின்றனர். மட்டக் களப்பு மாவட்டத்தில் வாழைச் சேனை, வீச்சுக்கல்முனை, செங்கலடி, ஆகிய பங்கு களிலும், மறைக்கல்வி நடுநிலையத்திலும் இல்லறத் தூதுவர்கள் பணியாற்றுகின்றனர். இல்லறத் தூது வர்கள் நற்கருணைப் பணியாளர்களாகச் செயற் படுவதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் பங்குகளில் வழிபாடுகளை ஆயத்தம் செய்தல், மறைக்கல்வியை ஊக்குவித்தல், மாணவர்களைப் போட்டிகளுக்கு ஆயத்தம் செய்தல், இல்லதரிசிப்பு, திருவருட்சாதனங் களைப் பெற ஆயத்தம் செய்தல், பக்திச்சபைகளை வழி நடத்தல், போன்ற பணிகளைச் செய்வதோடு மறைமாவட்டத்தில் எத்திசையிலும் சென்று தம் பணி களை மேற்கொள்பவர்களாக இருக்கின்றனர்.

## மறை ஆசிரியர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 231 மறையா சிரியர்கள் பணியாற்றுகின்றனர். மறையாசிரியர் வளத்தை ஒருமுகப்படுத்தி வினைத்திறனை மேம் படுத்தக் கருத்தரங்குகள், ஞானஒடுக்கங்கள், தேசிய மறையாசிரியர் தேர்வு 1. 11. 111. ஆகிய பரீட்சைக்கு அவர்களை ஆயத்தப்படுத்தலும் இதன் மூலம் சித்தியடைந்தவர்கள் கல்வியியல் கல்லூரிக்குச் செல்லத் தகுதி வாய்ந்தவர்களாக உருவாக்குதலும் இடம் பெறுகின்றன.

மறையாசிரியர்களுக்கான கருத்தரங்குகளில் திருவிவிலியம் பற்றியும், திருச்சபை பற்றிய படிப்பினை களும் கற்பிக்கப்படுகின்றன. மறையாசிரியர்களை ஊக்கப்படுத்த கலைநிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப் படுகின்றன.

## சிறுவர், வளந்தோர் மறைக்கல்வி.

பங்குத் தந்தையின் மேற்பார்வையின் கீழ் பங்குத் தளங்களில் மறை ஆசிரி யர்கள், சனிக்கிழமைகளில் அல்லது ஞாயிறு தின த்தில் மாணவர்களுக்கு மறைக்கல்வி கற்பிக் கிறார்கள். மேலும் மாண வர்களை ஊக்குவிக்க மறைக்கல்விப் பரீட்சை, பேச்சுப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், நாடகப் போட்டிகள், கலைநிகழ்ச்சிகள், ஆடல், பாடல் போன்ற ஊடகங்களினூடாக மறைய றிவை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறுவர்களும், வளர்ந்தோரும் மறையறிவைப் பெற ஓடியோ, வீடியோ மூலம் பங்குகளுக்கு, பங்குத்தந்தை யர்களுக்கு உதவுமுகமாக மறைக்கல்வி நடுநிலையம் ஒழுங்குகள் செய்துள்ளது. சில பங்குத் தந்தையர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது மகிழ்ச்சிக்குரியதே

மறையறிவைப் பெற்றுக் கொள்ள வசதியாக வும், மாணவர்களின் கற்றலை விருத்தி செய்யவும், வாசிக்கவும், நற்பழக்கத்தை வளர்க்கவும், வாசிகசாலை அமைக்கப்பட்டுள்ளது. மறையாசிரியர்கள், மாண வர்கள், பங்குத்தந்தையர்கள், தங்கள் பங்கின் தேவைக்கும் சிறப்பாக போட்டிகளுக்கு ஆயத்தம் செய்யவும், மறை யாசிரியர் தேர்வுக்குரிய ஆய்வுக்கட்டுரைக்கு உதவி யான நூல்களைப் பெற்றுக் கொள்ளுமுகமாகவும் பயனுள்ள பொழுதுபோக்கை அறிமுனப்படுத்தும் நோக்குடனும் கற்பித்தலின் போது எழும் சந்தேகங் களைத் தீர்க்கவும் வாசிகசாலை உதவுகின்றது..

பாடசாலைகளில் க. பொ. த (சாதாரண) க.பொ. த (உயர்தர) மாணவர்கள் சமயப் பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக பாடப் பயிற்சிப் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு க.பொ.த (சாதாரண) க.பொ. த (உயர்தர)

கருத்தரங்குகளும் முன்னோடிப் பரீட்சைகளும் அருள் ஒளி இல்லத்தில் கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றியத்தின் உதவியுடன் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தப் படுகின்றன. பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு நிவர்த்தி செய்யுமுகமாக பின்தங்கிய பாடசாலை களில் பயிலும் கத்தோலிக்க மாணவர்களின் நலன் பொருட்டும் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட் டுள்ளனர். இவர்களை ஊக்கப்படுத்த சிறு ஊதியமும் நடுநிலையத்தால் வழங்கப்படுகின்றது.

மேலும், க.பொ. த சாதாரண, உயர்தர, மாண வர்களுக்குத் தேவையான வினாவிடைப் புத்தங்களைக் கொள்வனவு செய்யவும், திருவழிபாட்டுப் பொருட் களைப் பெற்றுக் கொள்ளவும் வசதியாக 'அருளகம்' எனும் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

மறைக்கல்வி நடுநிலையத்தில் கல்விப் பணியானது மட்டக்களப்பு மாவட்டத்தின் பாடசாலை களையும், கத்ரோலிக்க ஆசிரியர் ஒன்றியத்தையும், கல்வியியல் கல்லூரியையும் ஆசிரியர் பயிற்சிக் கலாசா லையையும் கருத்தில் கொண்டு செயல்படுகின்றது. தேவைகள் ஏற்படும் போது இவர்களுக்குத் தேவை யான ஞான உரைகள், வ்குப்புகள் நடாத்தலும் இடம் பெறுவதோடு ஒளிவிழா, ஒன்று கூடல்களும் நடாத்தப் படுகினற்ன.

**திருவிவிலியம்**

மறைக்கல்விப் பணிக்கு ஊற்றும், உச்ச முமாய் இருப்பது திருவிவிலியமாகும். திருவிவிலி யத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் வகையில் ஒவ் வொரு வருடமும் விவிலிய வாரம் கொண்டாடப்படு கின்றது. அடுத்து திருவிவிலிய அறிவை அனைத் துப் பொதுநிலையினரும் பெற்றுக் கொள்ளும் நோக் குடன் வெட்டாப்பு சஞ்சிகை வெளியாகின்றது. விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி, மழலை மஞ்சரி, இளைஞர் இணையம், குடும்பக் குவலயம், முதியோர் மூச்சு, வழிபாடு வாழ்கிறது, யார் இவர் போன்ற படைப் புகள் திருவிவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட கதைகள், நிகழ்வுகள் வாயிலாக திருவிவிலிய அறிவு மக்களை சென்றடைவதில் கருத்தாயிருப்பது குறிப் பிடத்தக்கது. இவ் ஆக்கங்கள் அனைத்து வயதுப் பருவத்தினரையும் கருத்தில் கொண்டே எழுத்தாக்கம் பெறுகின்றன. கிறிஸ்தவ மதிப்பீடுகள், படிப்பினைகள், விழுமியங்கள், வழிபாட்டு மாற்றங்கள் ஆகியன மக்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தவும், இதனூடாக ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தவும் வெட்டாப்பு வெளி யீடுகள் உதவுகின்றன.

அடுத்து வழிபாடு அர்த்தம் உள்ளதாகவும், பொருள் நிறைந்ததாகவும் அமைய திருவழிபாட்டு ஆண்டு கலாசாரத்தைப் பயன்படுத்தி திருவழிபாட்டு நாட்காட்டி தயாரித்தல்,. ஞாயிறு திருப்பலியை சிறப்பிக் குமாறு திருப்பலி முன்னுரை, வாசக முன்னுரைகள், புனித வாரத்திற்கான திருவழிபாட்டு ஒழுங்கு முறை கள் பற்றிய வெளியீடுகளைத் தயாரித்தல் முதலிய செயற்பாடுகளோடு, பங்குகளில் மறைக்கல்வி வாரம், நற்கருணை வாரம், விவிலிய வாரம் ஆகியவற்றைச் சிறப்பிக்குமாறு கருத்தரங்குகள், ஒன்றுகூடல்கள், ஆகியன ஒழுங்கு செய்யப்படுகின்றன.

இவை தவிர மாணவியர்களுக்கான திரு விவிலியக் கருத்தரங்குகள், விவிலிய வகுப்புகள் ஆகியன அருள் ஒளி இல்லத்தில் குருக்கள், பொதுநிலையினர் ஆசிரியர்களைக் கொண்டு 6 மாத காலம் நடாத்தப் படுகின்றன. இப்பயிற்சிகளில் பங்கு பற்றியோர்க்கு பரீட்சை வைக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன.

இது போல் தேசிய மறையாசிரியர் முதலாம் பரீட்சைக்குரிய வினாத் தாள்களை மறைக்கல்வி நடு நிலையமே தயாரிக்கின்றது. மறை ஆசிரியர்களை பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த 'மறைவிளக்கு' என்ற நூல் மறைக்கல்வி நடுநிலையத்தால் வெளியிடப்படுகின்றது. இது இலங்கையில் உள்ள மறை மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு திரு கோணமலை - மட்டக்களப்பு மறைக்கல்வி நடுநிலை யம் தன் பணிகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது

**செல்வி ஆ. செல்வராணி**
(நடுநிலையப் பணியாளர்)



# மட்டக்களப்பு மாவட்டத்தில் கத்தோலிக்கரின் சமூகப் பொருளாதார அபிவிருத்திப் பணிகள்



இவ்வுலகில் பயணம் செய்யும் நமது திருச்சபை தனது பிள்ளைகளின் லௌகீக, ஆன்ம காரியங்களில் அக்கறையுடன் செயல்பட்டு வருவது தெளிவு. ஆன்மீக வழிநடத்தல்கள் அடுத்தவரை நேசிக்க கற்றுத்தந்த அதே வேளையில், நம் தலத் திருச்சபையின் தலை வராம் ஆயர் உள்ளிட்ட அருட்பணியாளர்களின் குழாம் மனித மாண்பை மதித்து சமூகப் பணிகள் செய்யவும் தன்னுள் ஆலோசனை செய்து முடிவெடுத்தது. இதன் விளைவாக மட்டக்களப்புக் கத்தோலிக்க தலைமையகம் ஓர் அமைப்பினை உருவாக்கும் நோக்குடன் அருட்பணி நோபட் ஒக்கஸ் அடிகளை சமூகப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல அனுமதி அளித்தது.

1965களில் அத்திவாரம் இடப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் சமூகப்பணி எண்ணிறந்த ஏழைகளுக்கு, கைவிடப்பட்டோருக்கு, பல்வேறு பிரச்சினைகளில் சிக்குண்டோருக்கு, பாராமுகமாகத் தள்ளிவைக்கப்படடவர்களுக்கு பணமாக, பொருளாக பல்வேறுபட்ட உதவிகளைச்செய்து வந்தது. எனினும் இவற்றைக்கிரமமாகப் பதிவு செய்யவோ அல்லது ஆவணப்படுத்தவோ எவரும் முற்படவில்லை. திருச்சபையும் அதனை நெறிப்படுத்தவில்லை.

1979ம் ஆண்டு, சமூகப்பணி மையத்தின் பயணப்பாதையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது. கிழக்கு மாகாண மண்ணின் வரலாற்றில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் நாள் இருள் நிறைந்த சோக நாள். ஆம் அன்று இயற்கையின் பயங்கர அனர்த்தத்திற்கு கிழக்கு மாகாணம் முகம் கொடுத்தநாள். நம்மால் எளிதில் மறக்க முடியாத "புயல்" நம்மண்ணைப் புரட்டிய நாள்.

புயல் தந்த பரிசுகள் ஏராளமாக இருக்க, நமது கத்தோலிக்க சமூகப்பணி மையமும் தனது பணிகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அருட்பணி. சொய்ஸா அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற உடனடி, நீண்டகால நிவாரப்பணிகள் இன, மத, குல, பாகுபாடுகள் பாராது "இறைவனின் பிள்ளைகள்" ஒவ் வொருவரையும் தன் குடும்ப உறுப்பினர்களாகப் பாவித்து சென்றடைந்தது. இக்கால கட்டத்திலும் கூட தனது பணிகளின் ஆவணங்களைக்கிரமமாகப் பதிவு செய்யவோ, பாதுகாக்கவோ அன்றி தரவுகளை வரிசைப்படுத்திவோ செடெக்" என்ற பெயருடன் இயங்கிவந்த மட்டக்களப்பின் சமூகப்பணிமையம் அதிக அக்கறை செலுத்தவில்லை எனலாம். உண்மையில் தனது பணிகளை ஒருவித ஆத்ம திருப்தியுடன் செய்ததே தவிர,அதனை வெளிச்சம் போட்டு வெளி உலகுக்குக் காட்ட திருச்சபை விரும்பவில்லை என்பதே உண்மை. எனினும் அக்காலப் பகுதியில் பயனடைந்த மக்கள் இன்றும் அதனை நன்றியுடன் நினைவு கூர்ந்து கூறுவதில் இருந்து நமது திருச்சபையின் தன்னடக்கச் செயல்பாடுகளை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

தொடர்ந்து வந்த காலப்பகுதிகள் சமூகப்பணி மையத்தை ஆளணி, வாகனவசதிகளில் வளர்ச்சியடையச் செய்திருந்தாலும் கூட, மக்களின் தேவைகளை, அதிகளவில் அவர்களது பொருளாதார நெருக்கடிகளில் தேவைகளில் இலவச நிவாரணங்களை வழங்குவதாகவே அமைந்திருந்தது. மிகச் சரியாகச் சொல்வோம் எனில் "தேவைகளில் உள்ளோரை - தங்கி வாழ்வோராக" நமது சமூகப் பணிமையம் மாற்றத் தொடங்கி இருந்தது எனலாம்.

நம் நாட்டின் வரலாற்றில் இரத்தக்கறை நிறைந்த வருடங்கள் - போர் அழிவுகள் தந்த வேதனைகள் 82ம் ஆண்டு முதல் தினமும் அதிகரிக்கத் தொடங்கின. மரணங்களும், மனித ஓலங்களும் அவசியப் பொருட்களின் அழிவுகளும் "சமூகப்பணி மையத்தின்" அவசியத்தை மக்களிடையே அதிகளவில் உணர்த்தத் தொடங்கின.

பாதிப்புக்குள்ளான மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்ற இரவு பகல் பாராது நிவா ரணங்களை எடுத்துச் சென்று, பாதிப்புக்குள்ளான பகுதிகள், அகதி முகாம்கள் என அனைத்து இடங்களிலும் வழங்கி மக்களை ஓரளவிற்கேனும் "வாழச்" செய்தது நமது "செடக்" சமூகப் பணி மையம். இந்தக் கால கட்டத்தில்தான் காலத்தின் அவசி யத்தை உணர்ந்து, தனக்கென தனி முத்திரை பதிக்க "எகெட்" என்று பெயர் புனைந்து கொண்டது

சமூகப்பணி மையம். கொழும்பில் தற்போது, இலங்கை கரித்தாஸ்' என அழைக்கப்படும் 'செடக்' நிலையம் இக் கால கட்டத்தில் நிதி வழங்குநராக இருந்து வந்தது. காலத்தின் தேவை விரிவுபட பணிகளும் பல்வேறு தன்மை வாய்ந்தவைகளாக மாறத் தொடங்கின.

'90ல் ஏற்பட்ட மறக்க இயலாத செயற்கை அனர்த்தங்களின் விளைவுகள் மனித மாண்பை கத்தோலிக்க திருச்சபை இன்னும் ஆழமாகப் பார்க்க உதவியது. "ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும்" (கலா12/26) திருவிவிலிய வார்த்தைகள் நிஜமாகவே வாழ்ந்து பார்க்கப்பட்ட காலம் அது. "துன்பங்கள்தான் நமக்கு வாழ்க்கையின் அர்த்தத்தை கற்றுத் தருகின்றன". ஆம். துன்ப நிகழ்வுகள்தான் கத்தோலிக்க திருச்சபையின் சமூகப் பணிகளையும் அர்த்தமுடன் ஆழ்ந்து நோக்கி ஆய்வு செய்ய வழிவகுத்தன.

நிறுவன அமைப்பொன்றின் கீழ் கத்தோலிக்க திருச்சபை புரிந்துவந்த சமூகப்பணிகளை ஆய்வுக்கு உட்படுத்தியபோது, அந்த ஆய்வின் முடிவு அதிர்ச்சி நிறைந்த உண்மையை திருச்சபையின் தலைமைக்குத் தெளிவுபடுத்தியது. அதாவது திருச்சபையின் சமூகப் பணி சமூகவேறுபாடுகளைக் கடந்து மக்களைச் சென்றடைந்தாலும் கூட, மக்களை,எதிர்பார்க்கும் மன இயல்பு' கொண்டவர்களாக தங்கிவாழும் தன்மை படைத்தோராக' சுயமுன்னேற்ற முயற்சிகளில் ஈடுபாடு குறைந்தோராக உருவாக்கியுள்ளது என்பது கண்டறியப்பட்டது.

தேவையில் உள்ளோர் மட்டுமன்றி, பல்வேறு சௌகரியங்கள் தமக்கிருந்தும், சௌகரியமற்றவர் போல் வேடப்புனைந்த 'பொருளாசை' கொண்டோரும் கூட, நம் சமூகப்பணி மையத்தினால் பயனடைந் தமையும் உண்டு.

வளர்ந்து வளருகின்ற அல்லது வளர விரும்புகின்ற எந்தவொரு சமூகமும் அல்லது நிறுவனமும் அல்லது அமைப்பும் தனது வரலாற்றுப் பாதையை திரும்பிப் பார்க்க வேண்டும். எதிர்கால வளர்ச்சிப்படிகளில் தேவையேற்படின் மாற்றங்கள் செய்யவும் வேண்டும். அதனைப் பின்பற்றி மட்/ எகெட்டும் தனது பணி வரலாற்றினை பின்னோக்கிப் பார்த்தது.

கத்தோலிக்க திருச்சபையின் சமூகப்பணிகளின் இலட்சியம், நோக்கு, என்பன மாற்றமடையாமல் தனது பணிகளில் மாற்றத்தை உருவாக்க மட்/ எகெட் முடிவு செய்தது. காலத்தின் தேவைக்கேற்ப பெற்றோர் அல்லது பாதுகாவலரை இழந்ததின் மூலம் பராமரிப்பை இழந்த பிள்ளைகளின் நலன்கருதி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 09 பிள்ளைகள் பராமரிப்பு நலன்புரி நிலையங்களுக்கு நிதி வழங்கி பிள்ளைகளின் கல்விக்கான உதவிகளைச் செய்யும் பொறுப்பை மட்/ 'எகெட்' ஏற்றுக் கொண்டது. இந்நிலையங்கள் ஊடாக இன்றும் சுமார் 200 பிள்ளைகள்கல்வியுடன், நலனும் பெற்று பயனடைந்து வருகின்றனர். அத்துடன் பாலர் பாடசாலைகளின் வளர்ச்சியிலும், உயர்கல்வியின்போது உதவிகள் நீட்டியும், இன்னும் பல கல்விப்பணிகளிலும் மட்/ 'எகெட்' தேவையுணர்ந்து பங்களிப்புச் செய்து வருகின்றது.



அத்துடன் அரச அமைப்பின் ஆலோசனைகளுக்கு அமைய அவசியத் தேவைகள் உள்ள இடங்களில் பணி செய்யவும், அவசியம் ஏற்படின் அரச ஆலோசனைகளுக்கு அமைப் பணி செய்யவும், காலத்தின் தேவைக்கேற்ப தன்னை உட்படுத்திப் பணி செய்யவும் மட்/ 'எகெட்'முன்வந்தது. இதுமட்டுமன்றி பிறநாட்டு நிதி வழங்கு நிறுவனங்களை அணுகி அல்லது தனது செயற்திட்டங்களை விளக்கி கொழும்பு 'செடெக்'கின் ஊடாக அன்றி, நேரடியாகவே நிதி பெறும் பலத்தையும் இக்கால கட்டத்தில்தான் மட்/'எகெட்' பெற்றது.

'வாகரை ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டம்' என்னும் பாரியதிட்டம் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் அரச அதிபரின் அனுமதியுடனும், பிரதேசச் செயலாளரின் ஒத்துழைப்புடனும் 1994 முதல் இன்றுவரை தொடர்ந்து செயல்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

நிவாரணங்களும், சிறிய அளவிலான அபிவிருத்திச் செயல்பாடுகளும் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதுமே அனைத்து மறைமாவட்டங்களினதும் சமூகப்பணி மையங்கள், புரட்சிகரமான புது மாற்றத்தை யூபிலி ஆண்டாகிய இரண்டாயிரம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த முன்வந்தன. இதற்குஆயத்தமாக 1999ம் ஆண்டிலே கண்டி தேசிய குருமடத்திலே 'தேசிய ஆலோசனைக்கூட்டம்' ஒன்றை அனைத்து ஆயர்கள், நிதி வழங்கு நாடுகளின் பிரதிநிதிகள், இயக்குனர்கள், பணியாளர்கள் என்று பலதரப்பட்ட தரத்தினரும் கலந்து கொள்ளுமாறு 'இலங்கை கரித்தாஸ்' செடெக் நிலையம் ஒழுங்கு செய்தது. இதன் முடிவாக இலங்கைத் திருச்சபை தனது சமூகப்பணிகளில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்களை கொண்டு வந்தது.

- மக்கள் மத்தியில்
- தமது தேவைகளை அடையாளம் காணல்
- அவற்றைப் பெற வழிவகைகளைக் கண்டறிதல்
- தன்னம்பிக்கையை வளர்த்து, சுய முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்தல் / அவற்றை வளர்த்தல்
- மனித மாண்பை உணர்த்துதல் / பேணுதல்

இந்நடைமுறை மட்/ கத்தோலிக்க சமூகப்பணி மையமான 'எகெட்டிலும்தாக்கத்தை உண்டு பண்ணியது. இதனுடன் இணைந்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்று குறிபிட்ட அளவேனும் தாக்கத்தை உண்டு பண்ணவும் மட்டக்களப்பு மறைமாவட்டத் திருச்சபை செயல்படுகின்றது.

மட்டக்களப்பு மண்ணில் கத்தோலிக்க சமூகப்பணிவரலாற்றில் குறிப்பிடத்தக்க இன்னுமொரு நிகழ்வு பெண்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம். கடந்த காலங்களில் எல்லாம் பெண்களுக்கு நிவாரணங்களும், உதவிகளும் செய்தது நமது கத்தோலிக்க திருச்சபை கடந்த 2000ம் ஆண்டு முதல் பெண்களை பெருமைப்படுத்தி சர்வதேச விழாக்களைச் சிறப்பிக்கவும் தொடங்கியது. ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் 2000ம் ஆண்டு கொண்டாடப்பட்ட 'சர்வதேச பெண்கள் தினம்' இதற்கு விதை இட்டது. பெண்கள் சம்பந்தமான ஆக்கபூர்வமான செயல்பாடுகளிலும் 'எகெட்' முன்நிற்கின்றமை அதன் முதிர்ச்சியின் வெளிப்பாடும் காலத்தின் தேவையுமாக அமைகின்றது.

இவ்வாறு தனது சமூகப்பணிகளை நெறிப்படுத்தி வருகின்ற மட்டக்களப்பு திருச்சபையின் 'எகெட்' நிறுவனம் இதுவரை ஐந்து அருட்பணியாளர்களை தனது பெருமைமிகு இயக்குநர்களாக கண்டு வளர்ச்



சியடைந்துள்ளது. அருட்பணி நோபட் ஒக்கஸ் அடிகள், அருட்பணி சொய்சா அடிகள் அருட்பணி ஜோசப் டிக் கோணிங் அடிகள், அருட்பணி கிளமன்ற் அன்னதாஸ் அடிகள், முதலானோரின் வரிசையில் தற்போது அருட்பணி சிறிதரன் சில்வெஸ்ரர் அடிகள் 'எகெட்டின்' இயக்குநராக இருந்து பணியாற்றி வருகின்றார்.

மேற்கூறப்பட்ட அனைத்து இயக்குநர் தந்தையர்களும் தமது காலம், நேரம் பாராது கடமை உணர்வில் அர்ப்பணிக்கப்பட்டு, இயேசுவின் பணியை 'எகெட்' டின் ஊடாக செய்தனர், செய்து வருகின்றனர் எனில் அது மிகையில்லை.

"சின்னஞ்சிறிய இவர்களுக்குச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தைகள் வாழ்வாக்கப்படுவதில் மட்டக்களப்பு கத்தோலிக்க சமூகம் பெருமிதம் கொள்வதும், அப்பணியை இன்னும் மேம்படுத்த பாடுபடுவதும் பொருத்தமானதே ஆகும்.

**இரா. கன்னிமேரி**
**ஒருங்கிணைப்பாளர்**
**தேசிய ஊக்குவிப்புத்திட்டம்**

# பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம்

## ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்



க.துங்கேஸ்வரி,
பீ.ஏ. [தொல்] சிறப்பு.

### இலங்கை வரலாறும் மட்டக்களப்பும்

தமிழகத்தின் வரலாறு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் (Megalothic) ஆரம்பமாவது போல ஈழ நாட்டின் வரலாறும் பெருங்கற்காலத்துடன் ஆரம்பமாகின்றது. புவிச்சரிதவியல் (Geology) தாவரவியல் (Biology) விலங்கியல் (Zoology) கல்லியல் (Lithology) மானுடவியல் (Antharopology) தொல் பொருளியல் (Archaeology) போன்ற பல அறிவியல் துறைகளின் துணை கொண்ட ஆய்வுகளினடிப் படையிலே ஈழவரலாறு என்பது

(i) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (Prehistory Period)
(ii) வரலாற்று இடைக்காலம் (Proto history period)
(ii) வரலாற்றுக்காலம் (History Period) என வகைப் படுத்தப்பட்டு மிக நீண்டகாலத் தொன்மையுடையது என நிறுவப்பட்டுள்ளது. ஈழவரலாறு எத்தகைய தொன்மை வாய்ந்ததோ அத்தகைய தொன்மையுடையது எமது மட்டக்களப்பு. குறிப்பாக கிழக்கிலங்கைப் பிரதேசம். இதனைப் பல ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

இலங்கை வரலாறு கூறும் "மகாவம்சம்" என்னும் நூலின்படி கலிங்க நாட்டிலிருந்து விஜயன் இலங்கைக்கு வருவதுடன் (கி.மு. 543) இலங்கை வரலாறு ஆரம்பமாகின்றது. கி.பி 6ம் நூற்றாண்டில் மகாநாம தேரர் என்பவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் இந்நூலில் சிங்கள - பௌத்த மன்னர்களின் வரலாறு மட்டுமே கூறப்பட்டுள்ளது. இந்நூலில் கர்ணபரம்பரைக் கதைகளும் (Myth) பொய் புரட்டுகளும் தமிழ் மன்னர்களுக்கு எதிரான செய்திகளும் நிரம்பி உள்ளன.

இத்தகைய பின்னணியில் தமிழர் வரலாற்றையும் தமிழ்ப் பிரதேசங்களின் வரலாற்றையும் அறிவதற்கு நாம் பிற சான்றுதாரங்களையே நாடவேண்டியுள்ளது. அத்தகைய சான்றுதாரங்களைக் கொண்டு பின்வரும் உண்மைகளை நிறுவ முடியும்.

(i) விஜயன் வரமுன்பே இலங்கையின் பூர்வ குடிகள் வாழ்ந்திருக்கின்றனர்.
(ii) இவர்கள் ஒஸ்ரலோயிட் எனப்படும் ஆதித்திராவிடர்கள்
(iii) கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் இவர்கள் வாழ்கின்றனர்.

### பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம்

1963ம் ஆண்டுவரை கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரு மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகல் முதல் தெற்கே குமண வரை பரந்திருந்தது. 1963ல் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதி, (கல்முனை முதல் குமண வரையுள்ள பிரதேசம்) அம்பாறை மாவட்டம் என தனியாகப் பிரிக்கப்பட்டது. இப்பிரிவினைக்குமுந்திய பிரதேசம் மட்டக்களப்பு மாவட்டம் எனப்படுவது. ஆனால் அதற்கும்முன்பு வரலாற்றுக் காலங்களில் மட்டக்களப்புப் பிரதேசம் என்பது றோகணை இராட்சியத்தின் பல இடங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. கதிர்காமம் தொடக்கம் இப்பிரதேசம் விந்தன. வெல்லச, ஊவா, போன்ற பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்பட்டுள்ளது.

எஸ். பரன விதான (தொல்லியல் ஆணையாளர்) 1970ல் வெளியிட்ட Inscriptions of Ceylon என்னும் தொல்பொருளியல் திணைக்கள வெளியீட்டு நூலிலே மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்களை வெருகல் முதல் பாணம வரையுள்ள இடங்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் மட்டக்களப்பில் பிராமிக்கல்வெட்டுக்கள் காணப்படுமிடங்களாக பின்வரும் இடங்களைக் குறிப்பிடுகின்றார். கோறளைப்பற்று (வாழைச்சேனை), ஏறாவூர் பற்று (ஏறாவூர்), விந்தனைப்பற்று (விந்தனை), மண்முனைப்பற்று (மண்முனை), வேவகம்பற்று (இங்கினியாகலை), சம்மாந்துறைப்பற்று, பாணமைப்பற்று, அக்கரைப்பற்று. ஆகவே பூர்வீக மட்டக்களப்பு என்னும்போது வெருகல் முதல் கதிர்காமம் வரையிலான பிரதேசமே என்பது தெளிவாகும்.

பார்க்க-

(i) Inscriptions of Ceylon by S.Paranavitana (PP.xiii)
(ii) Ceylon Census Report - 1972.

## மட்டக்களப்பின் வரலாற்றுச் சான்றாதாரங்கள்

மட்டக்களப்பின் உண்மையான வரலாற்றுத் தகவல்களை அறிவதற்குப் பின்வரும் சான்றாதாரங்கள் பெரிதும் உதவுகின்றன.

i. கற்காலம் பற்றி அறிய உதவும் எச்சங்கள்
ii. பெருங்கற்காலத்தைச் சேர்ந்த ஈமத்தாழிகள் புதைகுழி எச்சங்கள்.
iii. வரலாற்று இடைக்காலத்தைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்கள்.
iv. செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், வெளிநாட்டார் ஆய்வுகள் குறிப்புகள்.
v. இந்திய, ஈழ நாணயங்கள் - இவை பற்றிய ஆய்வுக் குறிப்புகள்
vi. வரலாற்றுக்கால, பிராமி, கிரந்த, தமிழ், சிங்களக் கல்வெட்டுகள் செப்பேடுகள்.
vii. மேல்நாட்டு ஆய்வாளரது சில நூல்கள், டயறிக் குறிப்புகள்.
viii. போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால நூல்கள் / அறிக்கைகள்.
ix. மட்டக்களப்பு மான்மிய ஏட்டுச்சுவடி.
x. கல்வெட்டுகள் செப்பேடுகளின் விளக்க நூல்கள்.
xi. 1960க்குப் பின் மட்டக்களப்பில் வெளிவந்த சில வரலாற்று நூல்கள்.
   1. மட்டக்களப்புத் தமிழகம் (1960) - பண்டிதர் மகா வித்துவான் வி.சி.கந்தையா.
   2. குளக்கோட்டன் தரிசனம் (1992) - க. தங்கேஸ்வரி
   3. மாகோன் வரலாறு (1993) - க. தங்கேஸ்வரி
   4. மட்டக்களப்பு முற்குகர் வரலாறு (ஞா.சிவசண்முகம்)
   5. The Land of Letters (Dr.Xavier)
   6. Monograph of Batticaloa (S.O.Canagaretna)
   7. பண்டைய ஈழத்தமிழர் - நா.நவநாயகமூர்த்தி.
   8. மட்டக்களப்பு மக்கள் வாழ்வும் வளமும் - கட்டுரைத்தொகுப்பு - F.X.C. நடராசா
   9. மட். சைவக்கோயில்கள் I, II - வி.சீ. கந்தையா.

இவற்றுள் மட்டக்களப்பு மான்மியம் பற்றிச் சிறிது விளக்கவேண்டும். இந்நூல் மட்டக்களப்பில் 19ம் நூற்றாண்டில் எழுந்த ஏட்டுப்பிரதியின் நூற்பதிப்பாக மகாவித்துவான் F.X.C. நடராசா தொகுத்துப் பதிப்பித்த நூலாகும். இந்நூல் 1952ல் வெளிவந்தது. இத்தலைப்பில் பல ஏடுகள் மட்டக்களப்புக் கிராமங்களில் கிடைக்கின் றன. அவற்றுள் பல இடைச் செருகல்களும் புகுந் திருந்தன. ஏடுகளைப் பிரதிபண்ணிய புண்ணியவான்கள், தத்தமது கைவரிசைகளையும் அதில் கலந்துவிட்டனர். அதனால் இவ்வேடுகளில் பாடபேதங்கள் நிறைய இருந்தன. அமரர். F.X.C.நடராசா, மிகுந்த பிரயாசைப பட்டு இந்நூலைப் பதிப்பித்தார். (அதன் மறுபதிப்பு மட்டக்களப்பு கலாசாரப்பேரவையால் 2000 ஆண்டில் வெளியிடப்பட்டது.)

ஆனால் இத்னை ஒரு முழுமையான வர லாற்று நூலாகக் கொள்வதற்கில்லை. இவற்றில் இடம்பெற்றுள்ள பல கற்பனைச் செய்திகளைக்களைந்து விட்டு பிறவரலாற்றுச் சான்றுகளுடன் ஒத்துப்போகும் தகவல்களை மட்டுமே நாம் வரலாறாகக் கொள்ளலாம்.

## வரலாற்றக்கு முற்பட்ட காலத்தில் மட்டக்களப்பு.

வரலாற்றுக்கு முற்பட்ட கால மட்டக்களப்புப் பற்றி அறிவதற்குப் பிறநாட்டவரின் ஆய்வுக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன. அவற்றுள் பின்வருபவை குறிப் பிடத்தக்கவை.

1. தளபதி றெட் எழுதிய குறிப்புகள் - எழுத்துப்பிரதி (தற்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது) மட்டக்களப்பில் Flake கற்களாலான கருவிகள் கிடைக்கப்பெற்றதாக இவர் குறிப்பிடுகிறார். இவை பெருங்கற்காலத்தைச் சேர்ந்தவை.
2. S.J. Toylor எழுதியுள்ள ஒரு கட்டுரை. (Archeoalogical Survey of Ceylon - Annual Report December 1946 - Page 48)
3. பிரபல ஆய்வாளர்களான மஜும்தார், சட்டர்ஜி, செழிக்மன் ஆகியோர் தரும் குறிப்புகள் (மட்டக் களப்பில் ஓஸ்ரலொயிட் (Australoid) என்னும் ஆதிவாசிகள் வாழ்ந்ததாக இவர்கள் குறிப்பிடுகின் றனர்). இவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் உலகில் வாழ்ந்த ஆதிவாசிகள் ஆவர்.
4. மேற்படி ஆய்வாளர்களது பின்வரும் நூல்களில் பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம் பற்றிய மேலும் பல தகவல்கள் உள்ளன. அந்நூல்களின் விபரம் வருமாறு.

(அ) History and culture of Indian People, Hertage and life of ceylon - By Majumdar (Edited by Pusalkar - Pp.8, 40,235)
2. The "Veddhas" By C.G.Sheligman - 1911, Cambrdege Publication - PP. 419, 430.
3. "The Veddhas" By R.L. Spittel. Vanished Trails -
4. J.RAS. Ceylon. Vol. XXI - Pp/88, Sheligmen. - 1908.

5. Ancient Ceylon - An account of the aboriglnes "Past and the early culilization Londan 1999. Pp 15.
6. Veddahs in transtion, Colombo, 1964. Pp 11 - 22. by Nandadeva Vihasekara.

## வரலாற்று இடைக்காலத்தில் மட்டக்களப்பு

சில மேலாய்வுகள் 2 (Exploration) மூலம் இங்கு வாழ்ந்தோர், இயக்கர், நாகர் என பேராசிரியர் பரணவிதான செழிக்மன் போன்றோர் கூறியுள்ளனர்.

நாகர்கள் கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு இங்கு கிடைக்கும் நாகவழிபாட்டு எச்சங் களும் பிராமிக் கட்வெட்டுக்களும் சான்றாகின்றன. அவ்வாறே இப்பிரதேசத்தில் வேரூன்றி நிலைத்துள்ள நாகவழிபாடும் இதை உறுதி செய்கின்றன. கி.மு. 3ம் நூற்றாண்டிலே டொலமி எனும் கிரேக்க ஆய்வாளர் குறிப்பிடும் நனிகிரி, நாமதும, நாகபவத்த போன்றன கிழக் குப் பிரதேசத்திலே காணப்பட்ட இடங்கள் என அடை யாளம் காணப்படுகின்றன.

கிழக்கின் பழம்பெருமை பெற்ற திருக்கோவில் பண்டு நாகர்முனை எனப்பட்டது. சுற்றியுள்ள பிரதேசம் நாகர்நாடு எனப்பட்டது. சபரிகாம எனப்பட்ட சபரகமவில் அமைந்துள்ள கதிர்காமம் இடைக்கற்காலத்தில் புகழ் பெற்ற வழிபாட்டுத்தலமாகும். விந்தியமலைக்காட்டு இனத்துடன் தொடர்புடைய இச்சபர் இனம் உகந்தையி லும் காணப்பட்டனர். இன்றும் காணப்படும் வேடர் வழி பாடும் பாரம்பரியமும் சான்றுகளாகின்றன. கதிர் காமம், உகந்தை, திருக்கோவில், மண்டூர், போரதீவு, தாந் தாமலை, சித்தாண்டி, வெருகல் போன்ற முருகத் தலங்களில் வேல்வழிபாட்டுக்குச் சான்றாகின்றனர். இவற் றை பிராமீக்கல்வெட்டுக்களும், இவ்விடங்களில் காணப்பட்ட எச்சங்களும் நிரூபிக்கின்றன.

இம் மக்களின் வழித்தோன்றல்களே வேடர்கள் என்பதும் இம்மக்கள் மத்தியில் வேல், லிங்க, சூல் போன்றவை இன்றுவரை தொடர்வதும் நாம் அறிந்த செய்திகள் ஆகும்.

The Veddah - by (G.Sheligmen) 1911.

**பெருங்கற்காலப் பகுதியில் மட்டக்களப்பு.**

பெருங்கற்காலத்திற்கெனச் சில பண்புகள் உள. குறிப்பிட்ட சில தொல்பொருள் எச்சங்களைக் கொண்டு இக்காலப்பகுதியை உறுதிசெய்து கொள்ள லாம்.

சில இடுகாடுகள், ஈமத்தாழிகள், புதைகுழியில் உள்ள பொருட்கள் முதலியன இக்காலப் பகுதிக்குரிய எச்சங்களாகும். இத்தகைய எச்சங்கள், இந்தியாவில் மைசூர் பிரம்மகிரி, ஆதிச்சநல்லூர் முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டன. ஈமத்தாழிகள் (Coffen / சவப்பெட்டி) சுட்டகழிமண்ணால் ஆனவை. மண்ணால் அரிக்க முடியாதவை. இத்தகையை தாழிகளில் பிரேதங்களை வைத்து அடக்கம் செய்யும் பண்பாடு அக்கால மக்களின் நாகரிகத்தின் சின்னமாகவும் அமைகின்றது. இத்தகைய ஈமத்தாழிகள் சென்னை அரும்பொருட்காட்சியகத்தில் இன்றும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

இதே போன்ற பெருங்கற்கால எச்சங்கள் இலங்கையில் கிழக்குப் பிரதேசத்தில் மட்டுமே கண்டெ டுக்கப்பட்டுள்ளன. (புத்தளப்பிரதேசத்தில் உள்ள 'பொன் பரிப்பு' என்ற கிராமத்திலும் இவை கண்டெடுக்கப்பட்ட னவாம்.)

மட்டக்களப்புப் பிரதேசத்தில் கதிரவெளி, தீக வாபி, உகந்தை, மகாகம (திசமாராம) கதிர்காமம் முதலிய இடங்களில் இத்தகைய எச்சங்கள் கண்டெடுக் கப்பட்டன. கதிரவெளியில் 'குரங்குபடை எடுத்த வெம்பு' என்னும் பகுதியில் இத்தகைய இடுகாடுகளும் ஈமத் தாழிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. (Ceylon Journal of Science Vol.II, Felt. 1928 PP. 94 - 95) இப்பகுதி மக்களின் அறியாமையாலும், அரசின் அசட்டையாலும் மிகமுக்கியமான இவ்வரலாற்றுத் தடயம் பாதுகாத்து வைக்கப்படவில்லை. மிக அண்மையில் திசமகறகமை யில் கண்டெடுக்கப்பட்ட இவ்வகை எச்சங்களை ஜெர்மன் பல்கலைக்கழகம் ஆய்வு செய்தது. ஆனால் அதன் பெறுபேறுகள் இங்கு வெளியிடப்படவில்லை.

## பிரமிக்கல்வெட்டுகள் தரும் சான்றுகள்

கி.மு. 3ம் நூற்றாண்டு முதல் கி.பி 3ம் நூற்றாண்டுவரை பிரமிக்கல்வெட்டுகள், ஈழத்தில் வழக்கிலிருந்தன. இக்கல்வெட்டுகள் மலைப்பாறை களிலும், மலைக்குகைளினுள்ளும் காணப்படுகின்றன. பேராசிரியர் பரணவிதான தொகுத்து வெளியிட்டுள்ள "Inscription of Ceylon" முதலாம் பகுதியில் (1970) இக்கல்வெட்டுகளின் விளக்கங்களைக் காணலாம். இவை இந்துப் பிராமணர்கள் இப்பகுதிகளில் வசித்தமைக்குச் சான்று பகர்கின்றன. இவை குடும்பிகல் பம்பகஸ்தலாவ, பழமெதரகல, பண்டார புதிராஜ்கல, திசமகரகம, மொட்டையாகல, குசலன்கந்த (செங்கலடி) முதலிய பல இடங்களில் பரவலாகக் காணப்படுகின்றன.

கிழக்கிலங்கையில் உள்ள பிராமிக் கல்வெட் டுகள் பற்றி ஆய்வு செய்த பேராசிரியர் பெர்ணாண்டோ, கலாநிதி சத்தமங்கல கருணாரத்தின, ஐராவதம் மகாதேவன் முதலியோர், இக்கல்வெட்டுகள் பௌத்த சகாப்தத்திற்கு முந்தியவை என்றும் இவை 'திரா விடலிபி' என்னும் திராவிட எழுத்திலான ஆதி தமிழ் பிராமி எனவும் குறிப்பிடுவர்.

இக்கல்வெட்டுகளில் காணப்படும் உதிரன், சவிரன், சிவ, மகாசிவ, காலசிவ, சிவகுப்த, சிவரக்கித, பத்ம துர்கா, திரு, கடி (காளி) முதலிய பெயர்கள் இப்பகு திகளில் பௌத்தம் கால்கொள்ள முன்பு திராவிட மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்கின்றன.

வெருகல் தொடக்கம் கதிர்காமம் வரை பரந்தி ருந்த பண்டைய மட்டக்களப்புப் பிரதேசமானது (விந்தியம், தொடக்கம் மடகாஸ்கார் வரை விரிந்திருந்த குமரிக்கண் டத்தில் வாழ்ந்திருந்த) பூர்வீக குடிகளான சபரர், புளிஞர் போன்ற ஆதித்திராவிடர்கள் வாழ்ந்த இடமாகும்.

## மட்டக்களப்பு மன்னர்கள் (சுருக்கமான பட்டியல்)

கி.மு. 200 முதல் கி.பி 1200 வரை மட்டக் களப்பு, மண்முனை, திருக்கோவில் பிரதேசங்களில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பற்றிய விபரம், மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மான்மியமும் மகாவம்சம் போன்ற கற்பனை கலந்து எழுதப்பட்டிருந்தாலும் பல விடயங்களில் இவ் விரு நூல்களும் ஒத்துப் போகின்றன. ஆனால் கலி ஆண்டில் குறிப்பிட்டுள்ள இக்காலமானது கிறிஸ்து ஆண்டுடன் கணிக்கும்போது ஒத்துப்போகவில்லை. கலி ஆண்டு கி.மு. 3102ல் ஆரம்பமாகின்றது.

எவ்வாறாயினும் வேறு ஆதாரங்கள் அதிகம் கிடைக்காத நிலையில் மட்டக்களப்பு மன்னர் விபர மானது மட்.மான்மிய பெயர்களைக் கொண்டே மகாவ ம்சம் போன்ற ஏனைய ஆவணங்களுடன் ஒப்பிட்டு கணிக்க வேண்டியுள்ளது. அவ்விபரம் வருமாறு.

| மன்னன் பெயர் | வம்சம் | தலைநகர் | கலிகணக்கு | கிறிஸ்துஆண்டு |
|---|---|---|---|---|
| பித்தசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2790 | கி.மு. 312 |
| சூத்திரன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2806 | கி.மு. 296 |
| சேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 2868 | கி.மு. 234 |
| ரஞ்சலன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 082 |
| ஸ்ரீகுலன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 82 |
| வாசுரன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3020 | கி.மு. 82 |
| பிரசன்னா சித்து | கலிங்கன் | மட்டக்களப்பு | 3110 | கி.பி. 08 |
| தாசன | கலிங்கன் | மட்டக்களப்பு | 3150 | கி.பி. 48 |
| தனசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3340 | கி.பி. 238 |
| தினகரசேன | கலிங்கன் | மட்டக்களப்பு | 3370 | கி.பி. 268 |
| பிரசேது | கலிங்கன் | மட்டக்களப்பு | 3420 | கி.பி. 318 |
| அரசசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3466 | கி.பி. 364 |
| குணசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3500 | கி.பி. 398 |
| மதிசுதன் | கலிங்கன் | மண்முனை | 3530 | கி.பி. 428 |
| வங்காலடன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 3735 | கி.பி. 633 |
| குகதிரன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4250 | கி.பி. 1148 |
| குமாரசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4080 | கி.பி. 978 |
| கதிர்சுதன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4115 | - |
| மதித்தன் | கலிங்கன | மட்டக்களப்பு | - | - |

## கிழக்கிலங்கையின் ஏனைய தமிழ் மன்னர்கள்

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு தவிர்ந்த உன்னரசுகிரி, நாகர்முனை, தொப்பனை போன்ற வேறு நகர்களை ஆண்ட மன்னர்களின் விபரங்கள் வருமாறு.

| மன்னன் பெயர் | வம்சம் | தலைநகர் | கலி ஆண்டு | கிறிஸ்து ஆண்டு |
|---|---|---|---|---|
| மண்டூநாகன் | நாகர் | நாகர் முனை | 2709 | கி.மு. 393 |
| கோப்பாயன் | நாகர் | திருக்கோணமலை | 3110 | கி.பி. 08 |
| கொப்பயன் | நாகர் | கொப்பயாபுரம் | 3340 | கி.பி. 238 |
| புவனேயகாகு | கலிங்கன் | உன்னரசுகிரி | 3130 | கி.பி. 28 |
| மனுநேயகயாகு | கலிங்கன் | உன்னரசுகிரி | 3150 | கி.பி. 68 |
| ஆடகசவுந்தரி | கலிங்கன் | உன்னரசுகிரி | 3180 | கி.பி. 78 |
| சிங்ககுமாரன் | கலிங்கன் | உன்னரசுகிரி | 3370 | கி.பி. 268 |
| ஸ்ரீ சிங்கன் | கலிங்கன் | உன்னரசுகிரி | 3420 | கி.பி. 318 |
| பாதுசிங்கன் | கலிங்கன் | உன்னரசுகிரி | - | - |
| மாகோன் | கலிங்கன் | தொப்பவ | 4250 | கி.பி. 1215 |
| வாலசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4240 | கி.பி. 1188 |
| மாநதசேனன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4640 | கி.பி. 1538 |
| எதிர்மன்னசிங்கன் | கலிங்கன் | மட்டக்களப்பு | 4840 | கி.பி. 1538 |

இவர்களுக்குப்பின் வேறு பல மன்னர்கள் மாகோனுக்குப்பின் மட்டக்களப்பு, தோப்பாவை, உன்ன ரைரை சுகிரி முதலிய இடங்களில் இருந்து ஆட்சி செய்துள்ளனர். சிலரது பெயர்கள் வருமாறு. தரும சிங்கன், தினசிங்கன், குமாரசிங்கன், நாதன், அணிகங் கன். இவர்களைத் தொடர்ந்து பல சிற்றரசர்கள் வன்னி யர்கள், ஆங்காங்கே ஆட்சி செய் துள்ளனர். ஆனால் ஒழுங்கான சான்றுகள் கிடைக்காத படியி னால் வேறு சான்றுகளை நாட வேண்டியுள்ளது.

## சோழர் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பு

தென்இந்தியாவில் இருந்து இலங்கையில் அடிக்கடி படையெடுப்புகள் நடைபெற்றன. இராஜ இராஜசோழன், இராஜேந்திரன் காலத்தில் ஈழத்தின் பெரும்பகுதி சோழர் ஆட்சியின்கீழ் இருந்தது. இலங்கை 10வது சோழ மண்டலமாக்கப்பட்டு மும்முடிச்சோழ மண்டலம் எனப்பட்டது. (கி.பி 1017 - 1070 வரை) இக்காலப்பகுதியில் பொலநறுவையில் பல இந்து தேவாலயங்கள் கட்டப்பெற்றன. அப்போது கிழக்கிலே திருக்கோவில், கொக்கட்டிச்சோலை முதலிய இடங்க ளிலும் ஆலயங்கள் அமைக்கப்பெற்றதாக கருதமுடி யும். இத்தேவாலயங்களின் பின்பு பாண்டியர் காலத்தில் அமைக்கப்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

தொடர்ந்து பாண்டியர், கலிங்கமகாகோன் காலத்திலும் தமிழர் ஆட்சி சிறப்பாக காணப்பட்டுள்ளது.

### கலிங்க மாகோன் காலம்

கி.பி 1215 தொடக்கம் 1255 வரை முழு இலங்கையையுமே ஆட்சிசெய்த மாகோன் ஆட்சிக்காலம் வன்னிமை வகுக்கப்பட்டு, ஆலயங்கள் பல புனரமைக்கப்பட்டு, 44 ஆண்டுகள் சிறப்பான நிர்வாகம் செய்தான். திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, கோணேஸ்வரம், வெருகல், மண்டூர், போரதீவு போன்ற திருக்கோவில்கள் திருப்பணி செய்யப்பட்டு நிவந்தங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவனுக்கு உதவியாக குளக்கோட்டன், ஜயபாகு என்ற தளபதிகள் உதவி உள்ளனர். குளக்கோட்டனுடைய கல்வெட்டுகள் திருகோணமலையிலும் மாகனுடைய கல்வெட்டுக்கள் திருக்கோவிலிலும் இன்றும் சான்றாக உள்ளன.

### பாண்டிய ரின் காலத்தில் மட்டக்களப்பு

பாண்டியர் முழு இலங்கையையும் கைப்பற்றி ஆட்சி செய்யாவிட்டாலும் கிழக்கிலும் தெற்கிலும் குறிப்பிடத்தக்க அளவு இவர்களது ஆதாரங்கள் காணப்படுகின்றன. கதிர்காம காலம் தொடக்கம் 13ம், 14ம் நூற்றாண்டு வரை பாண்டியர் செல்வாக்கு மட்டக்களப்பு பிரதேசத்திலே காணப்பட்டுள்ளது. கொண்ணன் கல, போன்ற (ரோகனையின்) பல இடங்களில் மீன்சின்னம் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், காணப்பட்டுள்ளன. மஜி, கிரந்து, ஆய் போன்ற பாண்டிய குலப் பெயர்கள் இடம்பெறும் பிராமிக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கொக்கட்டிச்சோலையில் சிவன் கோயிலில் உள்ள பெரியதேர் பாண்டியர் காலத்தது எனப்படுகிறது. இதன் சிற்பங்கள் பாண்டியர் காலத்தது என்பது தெளிவானது.

### வரலாற்று முக்கியம் பெற்ற பல கிராமங்களும் சான்றுகளும்

மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆய்வுகள் பெருமளவு மேற்கொள்ளப்படாவிட்டாலும் அம்பாறை தொடக்கம் வெருகல் வரை இதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. பட்டிப்பளை ஆறு எனப்பட்ட நதி கல்லோயா என இன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனினும் அப்பிரதேசத்தில் தமிழர்களின் இராஜதானிகள் இருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. மாளிகைக்காடு எனப்படும் பிரதேசம், சங்கமன்கண்டி, உகந்தை, மல்வத்தை, பழுகாமம், போரதீவு, சம்மாந்துறை, தீகவாவி, திருக்கோவில், தமன, வெருகல், கதிரவெளி, மாகம, போன்ற பல்வேறு இடங்கள் முக்கியம் பெறுகின்றன.

குசலானிகந்த, கல்குபொத்தான, மல்வத்த, அம்பாறை, பறகாகல, தமன, குடும்பிகல, குமண, பாணம, மொட்டையகல, சங்கமன்கண்டி, நில்விற்றிகல, தீகவாவி, புத்தங்கல போன்ற மேலும் பல இடங்களில் இக்கல்வெட்டுக்கள் மூலம் ஆதித்திராவிட பண்பாடுகளும், சமயமுறைகளும் மட்டக்களப்புப் பிரதேசத்திலேயே குறிப்பாக கிழக்கிலங்கையிலே நிலைத்திருந்தன என்பதற்கு ஆதாரமாகின்றன.

கிரேக்க யாத்திரிகளான மெகதினிஸ் குறிப்பிடும் "பழகோணி" என்ற ஈழமக்கள் கிழக்கிலே ஆட்சிசெய்த பாண்டியரைக் குறிப்பதாகும். உதியன், உதி போன்ற சொற்கள் சேரவம்சத்தினையும், மஜி, மஜிம கரஜ, அபய, தமரஜ, பாண்டு, பாரிந்த, போன்ற சொற்கள் பாண்டிய வம்சத்தினையும் குறிக்கும் பிராமிக் கல்வெட்டுப் பெயரர்களாகும்.

மகாவலிகங்கையின் ஒரு கிளையான மதுறு ஓயா பகுதியில் பல தொல்பொருள் தடயங்கள் கிடைத்துள்ளன. "காலிங்க எல" என்னுமிடத்திலே மகாவலி கங்கை கிழக்கு நோக்கித் திரும்புகிறது. "மாதுறைப் பளிங்கு" என்ற தமிழ் பெயரே இன்று மாதுறு ஓயா எனப்படுவது. இங்கு கள்ளிச்சை, வடமுனை, மாக்கும்பை, மணப்பதித்தானை, முதலிய தமிழ்க் கிராமங்கள் உள்ளன. இன்று வாகனேரி எனக்குறிப்பிடுவது பண்டு வரகுணாள் ஏரி என வழங்கப்பட்டதென்பர்.

### தொகுப்புரை

1. மட்டக்களப்புப் பிரதேசம் என்பது ஆதியில் அம்பாறை மாவட்டத்தையும் உள்ளடக்கி கதிர்காமம் வரை பரந்திருந்த பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் வரலாற்று இடைக்காலம், பெருங்கற்காலம், வரலாற்றுக்காலம் வரை பூர்வ குடிமக்கள் வாழ்ந்தமைக்கான தொல்லியல் எச்சங்கள் கிடைத்துள்ளன.
2. இம்மக்கள் உலகின் பூர்வ குடியினரான 'ஒஸ்ரலொயிட்' இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வழிவந்தவர்களே இயக்கர், நாகர் என்போர். அவர்களின் வழித்தோன்றல்களே வேட இனமக்கள்.
3. இலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் ஆதித்திராவிடர்கள் வாழ்ந்தமைக்கான வரலாற்று எச்சங்களுடன் பிராமிக் கல்வெட்டுக்களும் சான்று பகர்கின்றன. பிறவரலாற்று ஆவணங்களும் இதை உறுதி செய்கின்றன.
4. வரலாற்றுக்காலத்திலும், பிற்காலச் சோழர், பாண்டியர் காலத்திலும் தமிழ் மன்னர்கள் இலங்கையில் ஆட்சி புரிந்துள்ளனர். மட்டக்களப்பில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் விபரம் "மட்டக்களப்பு மான்மியம்" என்னும் ஏட்டுப்பிரதியில் இடம்பெற்றுள்ளது.
5. மாகோன் (1215 - 1255) காலத்தில் மட்டக்களப்பு எழுச்சி பெற்றிருந்தது. மாகோன் வகுத்த வன்னிமை நடைமுறையில் இருந்தது அக்காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த பல தமிழ்க் கிராமங்கள் பற்றிய செய்திகளை வரலாற்றுக் குறிப்புகள் நமக்குத் தருகின்றன.
6. இப்பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்கள் முறையாக ஆவணப்பதிவு செய்யப்படாமையால், மக்கள் இதை அறியமுடியவில்லை. இன்னமும் தமிழ்மக்கள் மகாவம்சம் கூறும் வரலாற்றுச் செய்திகளையே வரலாற்றுப் பாடமாக கல்விக்கூடங்களில், பல்கலைக் கழகம் உட்பட கற்று வருகின்றனர்.

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி 30. 9. 2002

# பரிசுப்போட்டி

## அறிவை வளர்ப்போம் - 19

(பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து அடிக்கோடிடுக)

1) அணுவின் ஆற்றலைக் கண்டு பிடித்தவர்
(அப்துல் கலாம், ஐன்ஸ்டீன், தோமஸ் அல்வா எடிசன்)

2) முல்லைக்குத் தேர் ஈந்த மன்னன்
(கர்ணன், குமணன், பாரி)

3) அண்மையில் நடைபெற்ற அதிபார குத்துச்சண்டைப் போட்டியில் முன்னாள் சாம்பியன் மைக்கல் டைசனை வென்ற லூயிஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?
(இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ்)

4) இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சு வார்த்தை இங்குதான் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நாடு
(பூட்டான், மாலைத்தீவு, தாய்லாந்து)

5) 'கதைநேரம்' என்னும் தொலைக்காட்சித் தொடரை இயக்கியவர்
(பாரதிராஜா, பாலச்சந்தர், பாலுமகேந்திரா)

6) இத்தாலி நாட்டின் நாணயம் இவ்வாறு அழைக்கப்படுகிறது
(டொலர், ரூபிள், லீரா)

**அனுப்பவேண்டிய முகவரி**

**விவிலியம் கற்போம்/அறிவைவளர்ப்போம் - 19**
**தொண்டன்**
**த.பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

# பரிசுப்போட்டி !

**பிள்ளைகளுக்கு மட்டும்**
**முடிவுத்திகதி 30.09.2002**

**விவிலியம் கற்போம் - 19**

## யாக்கோப்பின் குடும்பம் எகிப்தில் குடியேறுதல்

(தொடக்கநூல் 47: 1-12)

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

யோசேப்பு பார்வோனிடம் போய், என் தந்தையும் சகோதரர்களும், தங்கள் ஆடு மாடுகளோடும் தங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றோடும் ........................ நாட்டிலிருந்து வந்து, அவர்கள் .............................. பகுதியில் தங்கியிருக்கிறார்கள்' என்று அறிவித்தார். தம் சகோதரர்களில் ஐந்து பேரைப் பார்வோன் முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தினார். பார்வோன் அவர்களை நோக்கி 'உங்கள் தொழில் என்ன? என்று கேட்க அவர்கள் அவனிடம், 'உம் பணியாளர்களாகிய நாங்கள் எங்கள் மூதாதையரைப் போல் ஆடு மேய்ப்பவர்கள். கானான் நாட்டில் பஞ்சம் மிகக் கடுமையாய் இருப்பதால், ........................ இந்நாட்டில் தங்கியிருக்க வந்திருக்கிறோம் 'என்றார்கள். அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கி எகிப்து ........................... உமக்கு முன்பாக இருக்கிறது. இந்த நாட்டின் சிறந்த பகுதியில் அவர்கள் வாழட்டும். அவர்களில் திறமையுள்ளவர்கள் எனக்குச் சொந்தமான மந்தைகளுக்கு .............................. அதிகாரியாக அவர்களை ஏற்படுத்தலாம்,, என்றான். பார்வோன் கட்டளைப்படி, யோசேப்பு தம் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் ........................ நாட்டின் மிகவும் வளமான .............................. நிலப்பகுதியை ......................... கொடுத்து, அங்கு அவர்களைக் குடியேற்றினார். மேலும் ........................ தம் தந்தை, தம் சகோதரர், தம் தந்தையின் குடும்பத்தார் அனைவருக்கும் அவரவர் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கேற்ப ........................... அவர்களைப் பேணிக்காத்து வந்தார்.

விடைகள் :-
உணவளித்து, இராம்சேசு, நாடு, யோசேப், எகிப்து, பொறுப்பான, கானான், கோசோன், உரிமையாக, சிறிதுகாலம்.

பெயர் ...............................................

முகவரி ...............................................

...............................................

(வினாப்படிவத்திலேயே விடைகளை அனுப்புதல் வேண்டும். வேறாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.)

## விவிலியம் கற்போம் 17 விடைகள்

யோசேப்பு, கடவுள், விரைந்து, கோசேன், முத்தமிட்டு, பார்வோனின், அலுவலர்களும், தந்தையையும், எகிப்து, ஆளுநன்,

## அறிவை வளர்ப்போம் 17 விடைகள்

1) மோகனம் 2) கண்ணகி, 3) J. R. ஜெயவர்த்தனா, 4) பேருதாலகாலமலை, 5) வக்கா யூனிஸ், 6) I.T.N

**இரண்டு போட்டிகளுக்கும் சரியான விடைகளை அளித்து**

**100/- பரிசு பெறுவோர்**

F. யூடிற் நிலாந்தி
167, சொறிக்கல்முனை
சம்மாந்துறை

M. டென்வர்
276/10 திருமலை வீதி
மட்டக்களப்பு

**ஒரு போட்டிக்கு மட்டும் சரியான விடை அளித்து**

**50/- பரிசு பெறுவோர்**

ஞா. சுபாசினி
திருக்குடும்பக் கன்னியர் இல்லம்
151, திருமலை வீதி
மட்டக்களப்பு

அ. விஜயகாந்
திருமலை வீதி
வாகரை

**பாராட்டுப் பெறுவோர்**

P. அன்ரனி டிலிமா
பொத்துவில் வீதி
அக்கரைப்பற்று - 09

F. டெனிஸ்ரன்
புனித திருச்சிலுவை வீதி
சொறிக்கல்முனை

# விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு

மண்ணில்
31 - 08 - 1944



விண்ணில்
11 - 08 - 2001

**ஜெயராணி மாணிக்கராஜா**

"நீங்கள் என்னை மகிமைப்படுத்தப்படுத்த
நான் உங்களை அதிகமதிகமாய்
ஆசீர்வதிப்பேன்" (குழந்தை இயேசுவின் ஆசீர்வாதம்)

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும்
வாழ்வான்" (யோவான்.11:25)

செபத்தில் ஜெயம் உண்டு
ஜெகத்தில் செபம் ஜெயிக்கும்
உண்மையிது உணருங்கள்,
என உணர்த்திய அம்மாவே!

குழந்தை இயேசுவில் குறையில்லாத பக்தி
குடியிருந்தது உங்களில்
குடிகொள்ளச் சென்று விட்டீர்
குவலயத்தை மீட்ட
திருக்குமரன் இயேசுவின் குடியிருப்பிற்கு

**அன்புப் பிரிவால் துயருறும்**
**அன்புக் கணவன், மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

Registered as a News Paper in Sri Lanka

With Best Compliments From

# ST. JOSEPH'S CATHOLIC PRESS



For Quality and splendid Finish
at prompt time Bring all your Printing
Requirements, Bindings,
photocopy & Laminating to

**10, Advocate Road, Batticaloa, Sri Lanka.**

**T.P. No : 065-22364**

**St. Ignatius** *Type Setting* - 28, Sinnalebe Street, Batticaloa.
Printing & Cover Desiging - *St. Joseph's Catholic Press, Batticaloa.*